159

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

வேதமுடித் தேசிக மாலை:

10 APR 1954

திருவல்லிக்கேணித்
தமிழ்ச்சங்க வெளியீடு, 58.

159
2-54

சங்கக் காரியாலயம் :
ஆநந்தபிருந்தாவநம்,
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு,
அம்பத்தூர்.

3-3-1954.

O-,194
N54
113306

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



வேதமுடித் தேசிக மாலை.

திருவல்லிக்கேணித்
தமிழ்ச்சங்க வெளியீடு 58.

15 APR 1954

இது

ஸர்வமங்கள விஜயவாண்டு மாசித் திங்கள்
இருபதாந் தேதி புதன்கிழமை திருவோணத்
திரு நன்னாளன்று அம்பத்தூர் சாந்தி
ஆச்ரமம் ஓம் சாந்தி மௌனஸ்வாமி
திருமுன்பு வழங்கிய
சந்தமிகு செந்தமிழ்ப்பாமாலை.

3-3-1954.

முதற் பதிப்பு—1954

ஸ்ரீ:

உள்ளுறை.

பக்கம்.

முகவுரை. ... 1

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

தேசிகர் நூற்றந்தாதி. ... 12

[வயலூர் கந்தாடைமன்னப்பங்கார்.]

குறிப்புரை. ... 26

[பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை அய்யங்கார், தமிழ் வித்துவான், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 113306

Kabeer Printing Works, Madras (2443)

O-1194
N54

ஸ்ரீ:

முகவுரை.

" மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்துறை மார்பினன்ருட்
டுமலர் சூடிய தொல்லருண் மாறன் றுணையடிக்கீழ்
வாழ்வை யுகக்கு மிராமா நுசமுனி வண்மைபோற்றுஞ்
சீர்மைய னெங்கடுப் புற்பிள்ளை பாதமென் சென்னியதே."

—[தேசிகமாலை. பிள்ளையந்தாதி. 1]

" பூவின்மன்னு மங்கைதாள் பொருந்துமார்ப னூர்புகழ்
யாவுமங்கம் வேதநான்கு பாடுமாற னாகம
மேவியோர்ங்கு பாச்சியம் விதித்தயோகி நாமமே
நாவிலங்கு தூப்புலய்யர் பாதநண்ணு நெஞ்சமே."

—[தேசிகர்சந்தவிருத்தம். 1]

" செய்யாட் குகந்த திருமார்பன் வேங்கடச் சீர்வரையான்
மையாருங் கண்டன் மலரய னேத்தி வணங்குவனைக்
கையா னருளிற் கனிந்துயர் தூப்புற் கதிரனைய
வய்யா ! சரண மடைந்தே னுன்றுளக் கடைக்கலமே."

—[வேதாந்ததேசிகன் அடைக்கலப்பத்து. 10]

சீர் ஒன்று தூப்புல் திருவேங்கடம் உடையான் நம் வேதாந்தகுரு.

" தேசிக னென்னு மாசான்
தெளிவொடு பொறுமைச் சீரும்
விசிய கடல்நீர்ப் பாரில்
விளைத்தபல் விநோதக் கூட்டும்
பேசிட வல்லார் யாரே ?"

ஸ்ரீமத்குமாரவேதாந்தாசாரியர் என்கிற ஸ்ரீ நயினாராசாரியர் தமக்குப் பிதாவாயும், ப்ரும்மோபதேசம் செய்தவராயும், ஆசாரியனாயும், பரதேவதையாயும், ப்ராப்யனாயும், ப்ராபக

னுயும், ஸர்வஸ்வமாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் விஷயத்திலே,

“ ஏற்றி மனத்தெழின் ஞான விளக்கை யிருளனைத்து
மாற்றின வர்க்கொரு கைம்மாறு மாயனுங் காணகில்லான்
போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ்
சாற்றி வளர்ப்பதுஞ் சற்றல்ல வோமுன்னம் பெற்றதற்கே.”

—[தேசிகமாலே. அதிகாரசங்கிரகம். 38]

என்றபடியே, ஆசாரியனது திருவருளாற்கிடைத்தவாக்கை அவ்வாசாரியன் திறத்திலேயே விநியோகித்து, ஸத்தைபெறப்பாரிப்பது உரியதாதலால் அவ்வேதமுடித்தேசிகன் விஷயமாய்க் கட்டளைக்கலித்துறையந்தாதியாக இருபது பாடல்கள்கொண்ட பிள்ளையந்தாதி செய்தருளினர்.

“ சீரார்தூப் புற்பிள்ளை யந்தாதி யென்று செழுந்தமிழா
னேராக வேதாந்த தேசிகர் தாளிணைக் கீழ்மொழிந்தா
னேரார் மறைப்பொரு ளெல்லா மெடுத்திவ் வுலகுயவே
சீரா கியவர தாரியன் பாதந் துணைநமக்கே.”

என்பது இவ் அந்தாதித்தனியன். இதுதன்னேரிலாத தனிப்பிரபந்தம்; ஓதியோதி யுணருந்தோறும் உணர்ச்சி உதவும் பெற்றியது. பூசுரர்கோன் திருவரங்கத்தமுதனர் ஸ்ரீபெரும்பூதூரில் வந்து தோன்றிய எதிராஜன் பொன்னடிமேல் போற்றிப் பேசிய இராமாநுச நூற்றந்தாதி போலவே தூப்புல் வரதாரியன் உலகம் போற்றும் பெற்றியராய்த்திகழ்ந்த ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேசிகன் தாளிணைக்கீழ்ப்பாடிய பிள்ளையந்தாதியும் அகில ஸ்ரீ வைஷ்ணவர்களாலும் சிரத்தையுடன் நன்கு ஓதத்தக்கது. “ நம்தலைமிசையே, பொங்கியகீர்த்தி இராமாநுசனடிப் பூமன்னவே ”—(இராமாநுசநூற்றந்தாதி, 108) என்றது, “ மாமலர் மன்னிய மங்கை மகிழ்ந்துறை மார்பினன் ”—(பிள்ளையந்தாதி, 1) என்று பூத்து, “ தூப்புலம்மான்பதமாமலரே ” —(பிள்ளையந்தாதி, 20) என ஸ்ரீ வைஷ்ணவர்களின் சென்னிக் கணியாய் விளங்கி வருவது உய்த்து உணரத்தக்கது. “ தேசிக மாலே ” என்பது “ ஆறிருவ ரோரொருவ ரவர்தாஞ் செய்த, துய்யதமி ழிருபத்து நான்கிற் பாட்டின் றொகைநாலா யிரமுமடி யோங்கள் வாழ்வே ” —[தேசிகமாலே. பிரபந்தசாரம், 17]

என "சந்தமிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்தகுரு"வால் அறுதியிடப்பெற்ற நாலாயிரதிவ்யப்ரபந்தத்தோடு சேர்த்து அநுஸந்திக்கவேண்டுவது என்பது "ஞானப்பெருந்தகவோர் சம்பிரதாயம்."

வயலூர் கந்தாடை மன்னப்பங்கார் "பழவினைகள் தாம் அகலப்பரவாதி சிங்கத்தின், கழல்இணையைத்தன்நெஞ்சிற் கழலாமே எந்நாளும், தொழுது எழும்" பாக்கியவான். இவர் தென் வடமொழி நாவலர். இவரது புகழ்மலிந்த தேசிகபக்தி இணையற்றது. இத்தூமறையோன் வேதமுடித்தேசிகன் விஷயமாய் வெண்பாவில் ஒரு நூற்றந்தாதி பாடியுள்ளார். இவர் கவிவாதி சிங்கத்தேவின் கழலிணையையே தொழுதெழும் பான்மை இத் தேசிகர் நூற்றந்தாதியிலிருந்து நன்கு பெறலாம். அதனைச் சற்றுவிளக்குவல்.

இவ்வந்தாதி "வேதமுடித்தேசிகனே" (1) என்று தொடங்கி "வீறுடைத்தே வேத முடி." (100) என முற்றுப் பெற்றுள்ளது.

"அன்பர்க்கே யவதரிக்கு மாய னிற்க
வருமறைக டமிழ்செய்தான் றளே கொண்டு
துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டுந்
தொல்வழியே நல்வழிக டுணிவார் கட்கே."
—[தேசிகமாலை. அதிகாரசங்கிரகம், 2]

என்பது வேதாந்தகுரு மொழிந்த வாய்மொழி. அதன் ஆழ் பொருளை முற்றும் உணர்ந்த மன்னப்பங்கார்,

"இசைந்தேன் மனமிவரை யேத்தவெப் போதும்
கசிந்துகரை யும்முளமென் செய்கேன்—பசுந்துளவ
மாலையான் றன்னிலு மன்னினரே வண்டறையுஞ்
சோலைசூழ் தூப்பு லிறை." (4)

"குருமா மணியே குலவுவரை மார்பன்
திருமா மகள்கணவன் றன்னைத்—தருவானுய்
நின்றுலு மென்வாக்கே நீள்சோலைத் தூப்புல்வரும்
குன்றுக் குணத்தனையே கூறு." (7)

“ தேசுடைய வாழியுஞ் சங்கமுங் கையேந்தி
வாச மலர்த்துழாய் வாழ்மார்பன்—காசினியிற்
காண நின் ருலுங் கவிவாதி சிங்கனையே
காணக் கருதுமென் கண்.” (33)

“ கண்ணவரை யேகாணும் காதவர்சீ ரேகேட்கும்
எண்ணமவர் தொல்புக ழேயெண்ணும்—திண்ணம்
கவிவாதி சிங்கக் கடவுளையே நண்ணி
அவியாத காத லடைந்து.” (34)

என்று வேதமுடித்தேசிகனரிடம் தனக்குள்ள அசஞ்சலமான பக்தியை வெளிக்காட்டிக் கவிவாதிசிங்கனுகிய தூப்புற் கோனைத் தவிரத் தேவுமற்றறியாராய்த்திகழ்ந்தார்.

தூப்புனகர்ச்சிங்கத்தின் அவதாரவைபவத்தைக் கொண்டாடுகையில்,

“ வானிற் றிகழு மதியோ ? கதிரவனே ?
ஊனமிலா வோமத் தொளியழலோ ?—மாநிலத்தில்
சோதியவை மூன்றுமொன்ருய்த் தோன்றினவோ ? தூப்புனகர்
வாதிசிங்கத் தேசிகராய் வந்து.” (58)

“ வந்து கருணையால் வானவர்கோன் வன்படைகள்
ஐந்து மனைத்துலகு முய்யவே—செந்தார்க்
கவிவாதி சிங்கராய்க் காசினியைத் தேசிற்
றவிவின்றித் தாங்கின தாம்.” (59)

“ தாங்கி யுலகனைத்தும் தானருவாய் நின்றபிரான்
ஓங்குபுகழ் வேங்கடக்கோ னுந்தமக்குத்—தீங்கேதும்
வாராத வண்ணமிவ் வாதிசிங்க ராயினன்
பாருலகீர் பாங்குடனே வந்து.” (60)

என்கின்ருர்.

ஆரணதேசிகனுரின் வடிவழகைமறவாத சிந்தையராய்,

“ கோவைக் கனியொத்த வாயுங் குளிர்விழியும்
தாவந் தவிர்க்கு முறுவலும்—பாவந்தீர்
வேதமுடித் தேசிகன்றன் மெய்யொளியு மேவாதார்
சாதுவரைக் காணர் தளர்ந்து.” (63)

“பேசுமினே கூச்சமின்றிப் பேரின்பம் வேண்டினீர்
தேசுடைய செந்தா மரையடியைப்—பாசமொன்றும்
நில்லாது தூப்பு னிமலனையே நாடோறும்
சொல்லாதார் சூழ்வினை தோற்றூர்.” (65)

“இங்கிருந்தா லேதமென் னெந்தமக்கு வாதிசிங்கர்
செங்கமல பாதமுஞ் சீர்வடிவும்—அங்கமலக்
கைகளும் வாயுங் கருணைமிகு கண்ணிணையும்
கைகனி போற்காணக் கூடில்.” (56)

“இன்பம் பெறலா மிமையோர்த நற்பதமும்
அம்புவியோ டாளலா மாங்கே—செம்பவள
வாயான் மலர்ப்பதத்தான் வண்மையுடை வேதாந்த
தேசிகனைச் சிந்திப்பார்க் கின்று.” (18)

என்று வாயாரப் புகழ்கின்றூர் வயலூர் கந்தாடைவள்ளல்.

ஓங்கி உலகளந்த உத்தமனை உணர்ந்து உகக்கும் தூப்புற் குலகுருவே தமது குருவென்றும், அவரே சர்வவிதபந்துவாயிருத் தலின் அளவிடற்கரிய அவரது கல்யாண குணங்களைக் கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம் அறிந்து அவற்றையே அநுஸந்தா னம் செய்தல் நலம் என்றும் வயலூர்வந்த வண்ணல் மொழி கின்றூர். அப்பொருள் அடங்கிய பாக்கள் ஈண்டுக்காண்க.

“தேவர் முனிவர்களுஞ் சித்தர்களும் பத்தர்களும்
பூவின் மழைபொழிந்து போற்றியே—தாவி
யுலகளந்த மாலை யுணர்ந்துகக்குந் தூப்புற்
குலகுருவே யெங்கள் குரு.” (26)

[இப்பாட்டு அத்திகிரி அருளாளன் திருமஞ்சனகட்டியத்தில் சேர்ந்துள்ளது என்பது குறிக்கொள்ளத்தக்கது. இது இருபத் தாருவது கவியாக அமைந்திருக்கும் நுட்பம் ஆராய்ந்து அறிய வேண்டுவது. பல்லாண்டுகட்குமுன் ஸ்ரீமான் வண்பாக்கம் வேங்கடம் ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் திருமாளிகை யான “ஹஸ்திகிரி”யில் திருத்தாயார் தெப்பல் உத்ஸவத்தன்று இவ்வந்தாதியை உபந்யஸிக்குங்காலத்து அங்குக்குழுமியிருந்த சான்றோர் அனைவரும் அகம் மிகமகிழ ஸ்ரீதேசிகதர்சநரத்ந

தீபத்தால் பொன்னுடை போர்த்தப்பெறும் பாக்கியம் அடியேனுக்குக் கிட்டியது.]

" குருவுங் குலத்தரசுங் குற்றமிலாச் சுற்றந்
தருமமுந் தாய்தகப்ப னரும்—வருபுனல்சூழ்
தூப்புல்வருந் தூய்மறையோன் றெல்லருளேயென்றிந்
கோப்புடையோம் யாமென்றே கூறு." [தக் (27)

" கூறி முடியாக் குணத்தனை நன் னெஞ்சமே
நாறு துழாயானை நண்ணுமோர்—வீறுடைய
தூப்புலனந் தாரியனர் தொல்புகழ்சேர் மைந்தனை நீ
மூப்புவரு முன்னமே பற்று." (28)

வேதாந்ததேசிகனின் திருவடிகளே சரணம் என்று திடமாகப் பற்றி, அவர துதிவ்ய மங்களவிக்ரஹத்தை நெஞ்சகம்பால்நிறுத்தி, அவருடைய ஒப்புயர்வற்ற நற்குணங்களையே பலர் அறியச்சாற்றி ஆசார்யபக்தியுடன் நிலையாகநின்றால் அத்தூப்புல் இறை முத்தி யருளும் என்று அழுத்தமாக அறுதியிடுகின்றார் வயலூர்வந்த வந்தணச்சிரேட்டர். அப்பொருள்ததும்பும் பாட்டு ஈதே.

" பற்றி யடியிணையைப் பாவித்து நல்வடிவைச்
சுற்றிக் குணங்களையே சொல்லிப்—பத்தியுடன்
நிற்றியே னீமனமே நீள்வயல்சூழ் தூப்புலிறை
முத்தி யருளு முயன்று." (29)

வேதாந்தவாரியனின் அருளிச் செயல்களின் ஏற்றத்தை,

" மன்னருளால் வாதிசிங்க ரிங்குரைத்த நற்கலைகள்
உன்னி யுணர்த்திட வல்லவர்கள்—துன்னுஞ்
சுருதிமுடி யுட்பொருளைச் சோரா தறிவர்
அருமையா மற்றோ ரறிவு." (84)

" அறிவரோ வாழ்வா ரருமறையின் சீரை
நெறிதா னினைந்திடவல் லாரோ—சிறியராய்
வேதமுடித் தேசிகன்றன் வீறுடைய நற்கலைகள்
ஓதி யுணரா தவர்." (85)

"உணரார் மறைப்பொருளை யுத்தமரைச் சேரார்
பணவா ளரவணைப் பள்ளி—புணர்வானைப்
போற்றியெ ழாரந்தோ புல்லியராய் வாதிசிங்கர்
மாற்றமறி யாமனிசர் மாய்ந்து." (86)

"மாய்ந்துமாய்ந் திவ்வுலகின் மன்னிய பல்பிறப்பிற்
றேய்ந்துழல்வீர் சொல்லுகேன் வம்மினோ—ஆய்ந்தொருகால்
வேதமுடித் தேசிகனார் மெய்யுரையை நண்ணினால்
பாதகங்க ளோடும் பறந்து." (87)

"பறக்குமே பாவம் பவக்கடலும் வற்றும்
இறக்குமே இவ்வுலகிற் றுன்பம்—மறப்பின்றி
வாதிசிங்கர் வார்த்தைகளை வைப்பரேற் றந்நெஞ்சிற்
கோதில்குணங் கொண்டிருக்க லாம்." (88)

"கொண்டிருக்க லாமே குறைகடல்சூழ் வையகத்தே
விண்டலத்தில் வீற்றிருக்க லாமேதான்—தொண்டுபட்டுத் [கலை
தொல்புகழ்சேர் தூப்புல்வந்த தூய்மறையோன் செய்த
அல்லும் பகலு மறிந்து." (89)

"அறிந்து மறையோ ராரணத்தின் பொருளைச்
சிறந்த மனத்திற் சேமித்துப்—புறந்தொழார்
வண்பொழில் சூழ்தூப்புனகர் வந்துதித்த வாதிசிங்கர்
எண்பெரிய சீர்மொழிகண் டார்." (90)

"கண்டார் கரையைக் கடந்தார் பவக்கடலை
அண்டாத வார்வ மடைந்திட்டார்—வண்டாரும்
கொந்தலர்பூந் தூப்புல்வருங் குற்றமில்சீர் வாதிசிங்கர்
செந்தமிழ்நூல் சிந்தித் தவர்." (91)

என்று பரக்கப் பேசி இனியராகிறார் இச்சதகத்தந்தாதி வாசிரிய சிகாமணி.

தூப்புற் பெருமானை நண்ணுதார்க்குறுமவற்றை

"சிங்க முகத்தானைத் திங்கள் பலகாட்டும்
அங்க முடையவனை யாதரிக்கும்—எங்கள் பிரான்

தூப்புல்வரு மாரியனைத் தோத்திரியா மானிடர்க்குக்
காப்பனைத்து மாகுங் கடை." (24)

" மன்னு மறையனைத்து மாகுருவின் பாற்கேட்டாங்
குன்னியத னுட்பொருள்க ளத்தனையுந்—துன்னுபுகழ்
பெற்றுலுந் தூப்புற் பெருமானை நண்ணுதார்
கற்ருரே காசினியில் வம்பு." (41)

" சேமங்கொ டுப்புற் றிருவேங் கடமுடையான்
தாமன்பி னூற்சமைத்த நற்கலைகள்—ஆமென்
றறிந்தா ரறிவா ரறியாதா ரிங்குப்
பிறந்தார் பெரும்பார மாய்." (73)

" சார்வு நமக்கென்று சாதுசனந் தாமேத்துஞ்
சோர்விலே தாரம்மை மைந்தனுஞ்—சீர்மிகுந்த
வாதிசிங்கத் தேசிகனை வாழ்த்தாத மானிடரே
சாதிகளி லொன்றிலுங்கூ டார்." (75)

என்று நவில்கின்ருர் நம் கந்தாடை மன்னப்பங்கார்.

மேலும், தூப்புல் வந்த சோதியின் சீரொன்றினைச் சிந்திப்பவர்க்குப் 'பயங்களெல்லாம் மாயும், பாவங்கள் வீயும், சயமனைத்துந்தாமே கைகூடும், துயரொன்றும் வாராது' (31) என்றும்; 'வாதி சிங்கத் தேசிகரைச் செவ்வனே சிந்தித்து, அவர்தம் திருவடியை வந்தித்து, அவர் மலர்ப்பாதத்தைப் புந்தியில் உள்ளுவார் உள்ளத்துத் தெள்ளியார் சிந்திக்குந் தேசுடைய உம்பர்கோன் உறையும்' (32) என்றும்; 'கவிவாதி சிங்கனை வாழ்த்தி, தந்தலையை அவர் மலரடிக் கீழ்த்தாழ்த்தி, அவன் தொல் புகழே சிந்திப்பார் சூழ்வினையை அவர் மாற்றுவர்' (38) என்றும்; 'யாம் வேண்டும் பயன் ஈதே, சாதனமும் இதுவே, மற்றெல்லாம் எமக்கு ஈதே என்று சாதுவராய்த் தண்புனல் சூழ் தூப்புற் கோன் தாளிணையே நண்ணுவார் மண்மிசை வாழ்வானவரே' (47) என்றும்; 'வேத முடியாரியனை ஆற்ருத ஆர்வத்தால் பற்றுகையே சீருற்ற வீட்டிற் சிறப்பு' (66) என்றும்; 'இரும் பொழில் சூழ் தூப்புல்வரும் எம்பெருமானை, மாற்ருற்கு அரும்பெறலானை, விரும்புவார்க்கு ஆராவமுதை, அனைத்துலகும் போற்றி

செயும் சீராணைச் செப்புதல் சேமம்' (72) என்றும் பல படிகளாகப் பல பாக்களிற் பகர்கின்ருர் பரசமயக் கோளரியாகிய கந்தாடை அண்ணல்.

வடவேங்கடத்திலுறைபவனே தூப்புல் திருவேங்கடநாதனுய்த் திருவவதரித்தான் என்பதை,

" கோவாகி வானவர்க்குக் குற்றமிலாத் தொல்லருளால்
ஓவாது வேங்கடத்தி லோங்கிநின்—ருவாவென்
றெம்மை யளிப்பா னிரும்பொழில்சூழ் தூப்புல்வரு
செம்மையுடை வாதி சிங்கத் தேவு." (79)

" இன்றுமுதல் யாவரையு மெண்ணே னிறையென்று
சென்றுசே ணுடர் மிகப்போற்றக்—குன்றெடுத்த
வேங்கடமால் வித்தகத்தால் வேதாந்த தேசிகனுய்
ஈங்குதித்த வேற்ற மறிந்து." (43)

என்ற பாக்களில் அமைத்துப் பாடியுள்ளார் தேசிகர் நூற்றந்தாதி ஆசிரியர்.

" திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்தோன்" என்பது

" தேவ ரசுரர்களுந் தேசுடைய வானவரும்
பூவுலகிற் புண்ணியரும் போற்றிசெய—மூவுலகுக்
கீசனெழில் வேங்கடக்கோ னேரார் திருமணியிக்
காசினியைக் காக்குமே வந்து." (80)

என்ற பாட்டில் விசதம்.

" சிறப்பு முயிர்க்கிதுவே சேமமு மீதே
அறப்பொருளு மாம்வீடு மீதே—மறப்பின்றி
மன்னியசீர் தூப்புல்வரு மாமறையோன் பாதத்தைச்
சென்னிதனிற் சேர்ப்பதுவே செவ்வி." (67)

" சொல்வதுமுன் ஞமந் தொழுவதுமுன் பாதமலர்
நல்குவது முன்னுடைய நற்குணமே—தொல்லருளுக்
கெம்மை யிலக்காக்கி யீனமா மெம்பரிசு
செம்மைசெய் தேசிகனே யின்று." (95)

என்ற இவ் அந்தாதிப் பாக்கள் நித்யாநுஸந்தேயம்.

" இன்றென்றன் பாக்கியமோ ? வேரார் வரதகுரு
நன்றான தொல்லருளோ ? நாரணன்றன்—குன்றாத
நன்னினைவோ நானின்று வாதிசிங்கர் நல்லடியை
மன்னுமனம் பெற்ற விதம்." (96)

என்று இந்நன்னூலில் இவ்வாசிரியர் கூறுவதிலிருந்து இவர் ஸ்ரீ நயினாராசார்யர் திருவடிகளை ஆச்ரயித்தவராகக் கருதப் பெறுகிறார். எனவே, இவரது காலம் இற்றைக்குச் சுமார் ஆறு நூற்றுண்டுகட்கு முன் என்ப. தொண்ணூற்றுறுவகைப் பிரபந்தங்களையுடைய செந்தமிழில் யாத்த இவ்வந்தாதியில் இந்நுட்பத்தை 96-ஆவது கவியில் அமைத்துள்ள அழகு அழியாவழகே.

ஆழ்வார் விஷயமாக " கண்ணிநுண் சிறுத்தாம்பு "ப் பதிகம் பாடினார் மதுரகவியெனவுன்னி, பதிகம் பதிகமாக விசைத்துச் " சடகோபரந்தாதி " பாடினான் கம்ப நாட்டாழ்வான். அதுபோல் ஏரார் வரதகுரு இருபது பாசுரங்களால் " பிள்ளையந்தாதி " பாடியருள, நம் வேதாந்த குருவுக்குச் சதகத்தந்தாதி வேண்டுமெனத் துணிவு கொண்டு நேர்த்தியான " தேசிகர் நூற்றந்தாதி " பாடியருளினர் வயலூர் கந்தாடை மன்னப்பங்கார் என்ப. " சேராதனவுளவோ பெருஞ் செல்வர்க்கு." இவ்வந்தாதி வெகு எளிதான நடையில் வெண்பாவில் அமைந்து விழுமிய பொருளுடன் மிளிர்வது நற்றமிழரின் பாக்கியமே. அதனை அநுதினமும் அநுஸந்தாநம் செய்வதே தமிழ் கூறு நல்லுலகு அதன் ஆசிரியருக்கு நல்கும் சீரிய கைம்மாறு.

இத் " தேசிகர் நூற்றந்தாதி " (மூலம்) ஈசுவர ஆண்டு புரட்டாசித் திருவோணத்தன்று (14-10-1937) இச்சங்கத்தின் இரண்டாவது வெளியீடாகப் பிரசுரிக்கப் பெற்றது. அதன் பிரதி கைவசமில்லாததால் " தேசிகரந்தாதி மாலை " என்ற திருநாமத்துடன் நந்தனவாண்டு மார்கழி விசாகத்தன்று (11-1-1953) இத்தமிழ்ச் சங்கத்தின் நாற்பத்திரண்டாவது வெளியீடாகப் பிரசுரிக்கப் பெற்று தற்போது குறிப்புரையுடன் அது " வேதமுடித் தேசிகமாலை " என்ற திருநாமத்துடன் இச் சந்தமிகு செந்தமிழ்ச் சங்கத்தின் 58-ஆவது வெளியீடாகப் பிரசுரிக்கலாயிற்று.

இச்சங்க வெளியீட்டு வள்ளலார் "ஸ்ரீ ஆண்டாள் சந்திர கலா மாலை" (வெளியீடு 25, 12-1-50-ல் அரங்கேறியது) வள்ளலாரே. அவரும் அவரது உற்றார் உறவினரும் திருத்தக்க செல்வமும் திருவருளும் நித்யமாகப் பெற்றின்புறுமாறு அநுக்ரஹிக்க வேண்டும் என்று சீரார் தூப்புல் திருவேங்கடநாதனையே தொழுவோமாக.

வாழ்க தேசிகத் தொண்டர் குழாம்.

பொங்கும் மங்கலம் எங்குந் தங்குக.

ஸ்ரீரங்க விலாசம்,
அம்பத்தூர்,
3–3–1954.

ப. ரெ. திருமலை அய்யங்கார்,
காரியதரிசி.

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

வயலூர்—கந்தாடை மன்னப்பங்கார்

அருளிச்செய்த

தேசிகர் நூற்றந்தாதி.

வடமொழித்தனியன்கள்.

ராமாநுஜ தயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம்,
ஸ்ரீமத் வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்த தேஶிகம். (1)

யஶ்சக்ரே நிகமாந்தார்ய ஸ்துதிம் காதாஶதாதிகாம்,
மன்னப்பங்காரபிக்யந்தம் ஆஶ்ரயே தேஶிகப்ரியம். (2)

வெண்பாத்தனியன்.

சீரொன்று தூப்புற் றிருவேங் கடமுடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள்—ஓரொன்று
தானே யமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு. (1)

கொச்சகம்.

பழவினைக டாமகலப் பரவாதி சிங்கத்தின்
கழலிணையைத் தன்னெஞ்சிற் கழலாமே எந்நாளும்
தொழுதெழுமன் னப்பங்கார் தூயமலர்த் தாளிணையே
தொழுதெழுநீ நன்னெஞ்சே தொல்வினைகள் தொடராவே. (2)

வெண்பா.

எந்தைமன் னப்பங்கா ரென்றைக்குந் தன்னுமம்
சிந்தைதனில் வைத்திடவே செல்வஞ்சேர்—தந்தையொடு
தாயாகிக் காப்பரிந்தத் தாரணியி லுள்ளாரை
வாயார வாழ்த்து நலம். (3)

நூல்.

வேதமுடித் தேசிகனே வேதியர்கு லத்தரசே
சாது சனங்களுக்குத் தாவளமே—போதமரும்
நின்னடியை யென்று நினைந்திருப்பார் பாதமென்றன்
சென்னிதனிற் சூடு மலர். (1)

மலர்மகள்கோன் றாளிணையை மன்னி யிருப்பார்கள்
சிலரவராற் செய்கரும மென்னும்—மலமறுசீர்
வேதாந்த தேசிகனை வேறுகா தேத்துவார்
பாதாம் புயநமக்குப் பற்று. (2)

பற்றென்று மின்றிப் பராங்குசனை யேபற்றுஞ்
சித்தமுடை வேதாந்த தேசிகனைக்—குற்றமில்லா
அன்பா லடைபவர்கட் காளாகு மன்பரே
யென்பா லிருப்ப ரிசைந்து. (3)

இசைந்தேன் மனமிவரை யேத்தவெப் போதும்
கசிந்துகரை யும்முளமென் செய்கேன்—பசுந்துளவ
மாலையான் றன்னிலு மன்னினரே வண்டறையுஞ்
சோலைசூழ் தூப்பு லிறை. (4)

இறையு மெமக்கா யிருளகற்றுந் தேசாய்க்
கறையில்குணங் கொள்கடவு ளோனாய்—மறையனைத்தும்
வாழ்வித்த வாதியர் சீயமிவ் வையகத்தில்
ஆழ்துயரெல் லாமறுக்கு மாய்ந்து. (5)

ஆய்ந்தபுகழ் மங்கையர்கோ னம்புயத் தாளிணையிற்
சாய்ந்த மனத்தராய்த் தம்மடியார்க்—கீய்ந்த
பெருங்குணத்த ரெம்மைப் பெருகு மருளால்
விரும்புவர்வே தாந்த குரு. (6)

குருமா மணியே குலவுவரை மார்பன்
திருமா மகள்கணவன் றன்னைத்—தருவானாய்
நின்றுறு மென்வாக்கே நீள்சோலைத் தூப்புல்வரும்
குன்றுக் குணத்தனையே கூறு. (7)

கூறுது நாவேறு கொண்டுபிற வற்றைநெஞ்சந்
தேறுது சென்னி வணங்காது—சேருறும்

நீள்வயல்சூழ் தூப்புனகர் நின்மலனூர் தேசுடைய
தோளல் லதுதொழா தோள். (8)

தோளா யிரமுந் துணித்தன்று வாணன்றன்
மாளாத செல்வத்தை மாற்றினான்—தாளென்றும்
தான்வணங்கி யான்வணங்கத் தன்னை யளித்தருளும்
வானருளான் றூப்புல் வளல். (9)

வள்ளன் மணிவண்ணன் மாயன் பவக்கடலில்
அள்ள லழுந்துமெமை யாதரித்துக்—கள்ளமனம்
தீர்த்துத்தன் சேவடியைச் சிந்திக்கச் செய்வதற்கே
பார்த்துதித்தான் றூப்புற் பரன். (10)

பரனா ரணனவன்பா தத்திற்காட் செய்கை
உரமிவ் வுயிர்கட்கென் றோரார்—சிரமத்தைத்
தீர்க்கவே வேதாந்த தேசிகனாய் வந்துதித்து
மார்க்கமிது வென்றுரைத்தரன் மால். (11)

மாலா யடியவர்பான் மாநிலத்தில் வந்துதித்த
நால்வேத மெய்ப்பொருளா நாரணனும்—சால
அருள்செய்த வேதாந்த வாரியரோ டொவ்வான்
இருளனைத்து மீங்ககற்றி யே. (12)

அகற்றி வினையனைத்து மந்தமிறஞ் சீராற்
சகத்திற் சதிராக வெம்மை—உகப்புடனே
உய்விக்கும் வேதாந்த தேசிகரா முத்தமரை
வைம்மின் மனந்தன்னில் வைகல். (13)

வைகல் கவிவாதி சிங்க மறையவரைக்
கைகலந்து நாமங் கருதினால்—செய்கருமம்
ஈதொப்ப தில்லையிங் கிப்படியே யங்கமெனச்
சாதுசனங் காட்டுஞ் சதிர். (14)

சதிருடையோம் யாமென்றுந் தம்மையெண்ணி யிங்கே
எதிரெமக்கி யாரென்று மெண்ணி—மதியில்லா
மானிடர்க ளந்தோ மயங்குவதே வாதிசிங்கந்
தானிருக்க விங்கே சதிர்த்து. (15)

சதிர்த்தா ரவர்காண்மின் ஞரணியின் மீதில்
எதிர்த்தாரு மிப்பவ நீங்க—மதித்தார்
கவிவாதி சிங்கத்தைக் காதலுடன் கண்டு
புவியிடத்துப் புண்ணிய ராஞர். (16).

ஆஞ ரிவரார்தா மந்தமில் பேரின்ப
வாஞட் டமரரோ மற்றவரோ—தேஞரும்
பங்கயத்தா ளுதன்போற் பாடும் புகழுடைய
எங்கவிஞர் சிங்கத்தின் பா. (17)

இன்பம் பெறலா மிமையோர்த நற்பதமும்
அம்புவியோ டாளலா மாங்கே—செம்பவள
வாயான் மலர்ப்பதத்தான் வண்மையுடை வேதாந்த
தேசிகனைச் சிந்திப்பார்க் கின்று. (18)

இன்று நிகமாந்த தேசிகனை யெண்ணுவார்
ஒன்று மடையா ருறுதுயரம்—குன்றெடுத்த
மாயன் மலரடிக்கீழ் வாழ்ச்சி பெறுவரே
மாயும் வினையனைத்து மற்று. (19)

மற்றென்றுஞ் சேரா மனக்கவலை மானிடர்க்குச்
சித்தந் தெளியுஞ் சிறப்புடனே—குற்றமில்சீர்
தூப்புனகர் வந்துதித்த தூய மனத்தரையே
சேர்ப்பரேல் சிந்தைதனித் தே. (20)

தேறு மனக்கலக்கஞ் சிக்கென வாந்தேசும்
மாறு மறமனைத்தும் வண்புகழோர்—கூறும்
குணத்தன் குளிர்சோலைத் தூப்புனகர்க் கோமான்
குணத்திற் குருகுமென் னெஞ்சு. (21)

நெஞ்சு நெகிழ்ந்து நினையாமன் மற்றென்றை
அஞ்சும் படியாக வுள்ளடக்கி—வெஞ்சுடரோன்
சோதியெனத் தோன்றுந் தொல்புகழ்சேர் தூப்புனக
ராதியையே காண்பரன் பர். (22)

அன்பரா யாதரிக்கு மாரியர்காள் போற்றுமின்
இன்பமிகு வேதியர்க ளேத்தவே—அம்புவியில்
வந்துதித்த வள்ள லெதிராசன் வண்புகழே
சிந்திக்குந் தூப்புனகர்ச் சிங்கம். (23)

சிங்க முகத்தானைத் திங்கள் பலகாட்டும்
அங்க முடையவனை யாதரிக்கும்—எங்கள்பிரான்
தூப்புல்வரு மாரியனைத் தோத்திரியா மானிடர்க்குக்
காப்பனைத்து மாகுங் கடை. (24)

கடைந்தான் கடலைக் கடல்வண்ணன் முன்னம்
இடந்தான்பின் னேனமாப் பூமி—அடைந்தார்
வருத்தமறக் காக்குமே வையத் தருளால்
திருத்தமுடைத் தூப்புல்வாழ் தேவு. (25)

தேவர் முனிவர்களுஞ் சித்தர்களும் பத்தர்களும்
பூவின் மழைபொழிந்து போற்றியே—தாவி
யுலகளந்த மாலை யுணர்ந்துகக்குந் தூப்புற்
குலகுருவே யெங்கள் குரு. (26)

குருவுங் குலத்தரசுங் குற்றமிலாச் சுற்றந்
தருமமுந் தாய்தகப்ப னரும்—வருபுனல்சூழ்
தூப்புல்வருந் தூய்மறையோன் றெல்லருளே யென்றிந்தக்
கோப்புடையோம் யாமென்றே கூறு. (27)

கூறி முடியாக் குணத்தனை நன் னெஞ்சமே
நாறு துழாயானை நண்ணுமோர்—வீறுடைய
தூப்புலனந் தாரியனார் தொல்புகழ்சேர் மைந்தனை நீ
மூப்புவரு முன்னமே பற்று. (28)

பற்றி யடியிணையைப் பாவித்து நல்வடிவைச்
சுற்றிக் குணங்களையே சொல்லிப்—பத்தியுடன்
நிற்றியே னீமனமே நீள்வயல்சூழ் தூப்புலிறை
முத்தி யருளு முயன்று. (29)

முயன்று முகுந்தன் மலரடிமே லன்பால்
பயந்துறந்தார் பார்த்திருக்க முன்னம்—உயர்ந்த
துணிவான் மணிமாடத் தூப்புல்வந்த சோதி
பணிவோம்யாம் போமே பயம். (30)

பயமா யினமாயும் பாவங்கள் வீயுஞ்
சயமனைத்துந் தாமேகை கூடும்—துயரொன்றும்
வாராது வண்மையால் வாதிசிங்க மிங்குதித்த
சீரொன்று சிந்திப்ப ரேல். (31)

சிந்தித்து வாதிசிங்கத் தேசிகர் தம்வடிவை
வந்தித் தவர்மலர்ப் பாதத்தை—புந்தியில்வைத்
துள்ளுவா ருள்ளத் துறையுமே யும்பர்கோன்
தெள்ளியார் சிந்திக்குந் தேசு. (32)

தேசுடைய வாழியுஞ் சங்கமுங் கையேந்தி
வாச மலர்த்துழாய் வாழ்மார்பன்—காசினியிற்
காணநின் றுலுங் கவிவாதி சிங்கனையே
காணக் கருதுமென் கண். (33)

கண்ணவரை யேகாணும் காதவர்சீ ரேகேட்கும்
எண்ணமவர் தொல்புக ழேயெண்ணும்—திண்ணம்
கவிவாதி சிங்கக் கடவுளையே நண்ணி
அவியாத காத லடைந்து. (34)

அடைந்து மடநெஞ்சே யன்பா லவனைக்
கிடந்து மலரடியின் கீழே—தொடர்ந்தென்றும்
தூயமலர்ச் சோலைசூழ் தூப்புனகர் வந்துதித்த
மாயவனை யேவணங்கி வாழ். (35)

வாழ்ச்சி யிதுநெஞ்சே வாதிசிங்கத் தேசிகர்தம்
காழ்ச்சியுனக் குண்டா மேற்கன்மந்—தாழ்ச்சியொன்றும்
சாரா வகைதீருஞ் சன்மத் துயர்தொலையும்
சீரார் சிரீதரனைச் சேர்ந்து. (36)

சேரும் புகழோன் றிருவத்தி யூர்வரதன்
காரொத்த வண்ணம் கழலிணையைத்—தார்மன்னுஞ்
சென்னியில் வைத்தென்றுஞ் சிறக்கு மணிதூப்புல்
மன்னனையென் னெஞ்சமே வாழ்த்து. (37)

வாழ்த்திக் கவிவாதி சிங்கன் மலரடியைத்
தாழ்த்தித் தலையையதன் கீழே—சூழ்த்தென்றும்
தொல்புகழே சிந்திப்பார் சூழ்வினையை மாற்றுவரே
நல்வினையா நானிலத்தி லீது. (38)

ஈதே யுயிர்க்கிதமு மெத்தவமும் மெய்பொருளும்
ஈதேபே ரின்ப மிகுவீடும்—தீதறுசீர்த்
தூப்புனகர் வந்துதித்த தொல்புகழ்சே ராரியன்பேர்
கோப்புடனே கூறுவதா முற்று. (39)

உற்றுநின் சேவடியை யுய்வதோர் காரணத்தால்
பற்றுன்று மின்றிப் பவக்கடலின்—தொத்தறுப்பார்
வேதமுடித் தேசிகனே வேத விழுப்பொருளாம்
மாதவனை நண்ணுவரே மன். (40)

மன்னு மறையனைத்து மாகுருவின் பாற்கேட்டாங்
குன்னியத னுட்பொருள்க ளத்தனையு—துன்னுபுகழ்
பெற்றுலுந் தூப்புற் பெருமானை நண்ணுதார்
கற்றுரே காசினியில் வம்பு. (41)

வம்பார் குழன்மாதர் வான்கலவி யாசைதன்னுல்
அம்பாய பட்டலைந்து நின்றேனை—தன்பாத
தாமரைமேற் காதலையே தந்தடிமை கொண்டருள்வான்
தூயமனன் றூப்புலவ னின்று. (42)

இன்றுமுதல் யாவரையு மெண்ணே னிறையென்று
சென்றுசே ணுடர் மிகப்போற்றக்—குன்றெடுத்த
வேங்கடமால் வித்தகத்தால் வேதாந்த தேசிகனுய்
ஈங்குதித்த வேற்ற மறிந்து. (43)

அறிந்தறிந்து நற்கலைக ளாய்ந்தப் பொருளிற்
செறிந்தபெருஞ் சிந்தையராய்ச் செவ்வே—சிறந்தபுகழ்த்
தூப்புனகர் வந்துதித்த தூய்மனத்தன் பாதமே
காப்பென்பார் காப்பரென் றும். (44)

என்று மினியெமக்கோ ரின்பக் கதியிதுவே
குன்ற மெடுத்தபிரான் குற்றமில்சீர்—நன்றுக
வேத்துங் கவிவாதி சிங்கரையே யெப்பொழுதும்
நாத்தழும்ப நாமுரைப்போ நன்று. (45)

நன்றிதுவாந் தீததுவா மென்றுன்று நன்கறியா
தின்றறுதி யாகவே யென்னெஞ்சம்—வென்றிமிகும்
வேதமுடித் தேசிகனை வேருக வேத்தியபின்
தீதில்மதி பெற்றதிப்போ தீது. (46)

ஈதேயாம் வேண்டும் பயனிதுவே சாதனமும்
ஈதேமற் றெல்லா மெமக்கென்று—சாதுவராய்த்
தண்புனல்சூழ் தூப்புற்கோன் றுளிணையே நண்ணுவார்
மண்மிசைவாழ் வானவரே மற்று. (47)

மற்றென்றும் யான்வேண்டேன் மானிடர்காண் மாநிலத்துக்
குற்றமில்சீர்த் தூப்புனகர்க் கோமான்றன்—எத்திசையும்
கொண்டாடி யேத்துங் குணங்களுக்கே யெஞ்ஞான்றுந்
தொண்டானேன் றேற்று வினை. (48)

வினையனைத்துந் தீருமே வேமே துயரம்
மனைமனைவி யாசையுமா ளும்மே—தனையுணர்ந்து
செங்கமல நாபனையும் சேரலா மேவாதி
சிங்கரைத்தன் சிந்தைதனிற் சேர்த்து. (49)

சேர்ப்பரேற் றந்நெஞ்சிற் சிக்கெனவே சீராருந்
தூப்புனகர் வந்துதித்த தூயவனைக்—காப்பரவர்
காசினியி லுள்ளாரைக் கன்ம மறுத்திட்டு
மாசில்மன மெய்தவும்வைப் பார். (50)

வைப்பார் மனந்தன்னின் மாநிலத்து மாதவத்தோர்
எப்பொழுது மெங்கள் பெருமானை—அற்புதமாந்
தேசுடைய வேதாந்த தேசிகனைச் சீர்மிகுந்த
மாசின் மதியுடையோர் வாழ்வு. (51)

வாழ்விதுவே யுந்தமக்கு வம்மி னுலகத்தீர்
தாழ்வெங்கும் வாரா தளர்ச்சிநில்லா—சூழ்வினைகள்
சேரச்சி தைந்திடுமே திண்ணமிது வாழ்த்துமினோ
ஆரணத் தேசிகரை யாய்ந்து. (52)

ஆய்ந்துரைக்க லாமணிக ளாழ்கடலு ளித்தனையென்
றுய்ந்துரைக்க லாமமரர் கோன்புகழும்—ஏய்ந்தசீர்
வேதமுடித் தேசிகனுர் வீறுடைய வண்குணங்கள்
ஓதமுடி யாவெவர்க்கு மோர்ந்து. (53)

ஓரா ரறத்தை யுணரார் பெரும்பொருளைப்
பாரார் பயனுன வின்பத்தைச்—சீராரும்
வீட்டையும் வேண்டாரே வேதாந்த தேசிகர்தம்
பாட்டினைப் பாடு மவர். (54)

அவரவர் தந்த மறிவளவின் மாலைத்
தவநெறிக ளால்வணங்கிச் சார்வார்—எவரேனும்
தூயமறை யோர்வணங்குந் தூப்புனகர்க் கோமானை
மேயறிவான் மேவுவரே யிங்கு. (55)

இங்கிருந்தா லேதமென் னெந்தமக்கு வாதிசிங்கர்
செங்கமல பாதமுஞ் சீர்வடிவும்—அங்கமலக்
கைகளும் வாயுங் கருணைமிகு கண்ணிணையும்
கைகனி போற்காணக் கூடில். (56)

கூடி லவர்குணத்தைக் கூறவே யெந்தமக்குத்
தேடி லவர்பதத்தைச் சென்னிதனிற்—சூடத்
துலங்கொளிசேர் தூப்புல்வருந் தூயோ னருளால்
வலங்கொள்பத மெய்தலாம் வான். (57)

வானிற் றிகழு மதியோ கதிரவனோ
ஊனமிலா வோமத் தொளியழலோ—மாநிலத்தில்
சோதியவை மூன்றுமொன்றாய்த் தோன்றினவோ தூப்புனகர்
வாதிசிங்கத் தேசிகராய் வந்து. (58)

வந்து கருணையால் வானவர்கோன் வன்படைகள்
ஐந்து மனைத்துலகு முய்யவே—செந்தார்க்
கவிவாதி சிங்கராய்க் காசினியைத் தேசிற்
றவிவின்றித் தாங்கின தாம். (59)

தாங்கி யுலகனைத்துந் தானருவாய் நின்றபிரான்
ஓங்குபுகழ் வேங்கடக்கோ னுந்தமக்குத்—தீங்கேதும்
வாராத வண்ணமிவ் வாதிசிங்க ராயினன்
பாருலகீர் பாங்குடனே வந்து. (60)

வந்தென் றன் வன்னெஞ்சின் மன்னி யிருந்தானை
எந்தையெதி ராச ரிணையடியைக்—கொந்தலரும்
சோலைசூழ் தூப்புனகர் வந்துதித்த தூயவனைக்
காலமெலாங் காண்பன் களித்து. (61)

களிக்கும தென்றுகொலோ கண்களாற் கண்டு
துளிக்கு நறுந்துழாய்க் கண்ணி—ஒளிக்கொளும்
அண்டர்கோ னென்ன வடியார்க் கருள்புரியும்
கொண்டலார் தூப்புற்கோ வை. (62)

கோவைக் கனியொத்த வாயுங் குளிர்விழியும்
தாவந் தவிர்க்கு முறுவலும்—பாவந்தீர்
வேதமுடித் தேசிகன்றன் மெய்யொளியு மேவாதார்
சாதுவரைக் காணார் தளர்ந்து. (63)

தளர்த்திமற் றென்றத் தரித்துநீ நெஞ்சே
கிளர்த்தியுடன் கேடில்சீ ரானை—அளத்தற்
கரியானை யம்மானை யன்புடனே தூப்புற்
பெரியானை யெப்பொழுதும் பேசு. (64)

பேசுமினோ கூச்சமின்றிப் பேரின்பம் வேண்டினீர்
தேசுடைய செந்தா மரையடியைப்—பாசமொன்றும்
நில்லாது தூப்பு னிமலனையே நாடோறும்
சொல்லாதார் சூழ்வினை தோற்றார். (65)

தோற்று தவர்க்கேதுந் தொல்வினை யெஞ்ஞான்றும்
மேற்றான் வருவது மொன்றுண்டோ—ஆற்றுத
ஆர்வத்தால் வேதமுடி யாரியனைப் பற்றுகையே
சீருற்ற வீட்டிற் சிறப்பு. (66)

சிறப்பு முயிர்க்கிதுவே சேமமு மீதே
அறப்பொருளு மாம்வீடு மீதே—மறப்பின்றி
மன்னியசீர் தூப்புல்வரு மாமறையோன் பாதத்தைச்
சென்னிதனிற் சேர்ப்பதுவே செவ்வி. (67)

செவ்வியராய்ச் செங்கண்மால் சேவடியைச் சேவிப்பார்
அவ்வப் பயனை யடைந்திடுவார்—அவ்வாறு
சிந்தைதனிற் றூப்புல்வந்த தேசிகனை நண்ணுவரேல்
அந்தமில்வீட் டின்பமவர்க் காம். (68)

அவர்க்காந் தெளிவிசும்பி லந்தமில்பே ரின்பம்
எவர்க்கேனு மித்துணிவுண் டாகில்—எவர்க்கும்
கவிவாதி சிங்கரல்லாற் காப்பார்மற் றில்லை
அவமாமற் றோர்பேசுஞ் சொல். (69)

சொல்லார் சுருதிமுடித் தேசிகன் றொல்புகழை
எல்லா விடத்திலு மெப்பொழுதும்—நல்லார்கள்
கோட்டிதனிற் கூட்டீரேற் கோதின்மனத் தீரும்மைக்
காட்டினில வாக்குவதே கா. (70)

காரீரும் மாருயிரைக் கைகுழிந்து போகாமே
பாரீ ருலகியலைப் பாங்குடனே—வாரீர்
சுருதிமுடித் தேசிகனைத் தூய்மனத்த ராகிப்
பரிவுடனே பாவித் திரும். (71)

இரும்பொழில்சூழ் தூப்புல் வருமெம் பெருமானை
அரும்பெறலா வானைமாற் ருர்க்கு—விரும்புவார்க்
காரா வமுதை யனைத்துலகும் போற்றிசெய்யும்
சீரானைச் செப்புதல்சே மம். (72)

சேமங்கொ டுப்புத் திருவேங் கடமுடையான்
தாமன்பி னுற்சமைத்த நற்கலைகள்—ஆமென்
றறிந்தா ரறிவா ரறியாதா ரிங்குப்
பிறந்தார் பெரும்பார மாய். (73)

பெரும்பாரம் பூமிக்குப் போக வுதித்திங்
கரும்பாவ மெந்தமக்குத் தீர்த்த—சுரும்பாரும்
நீள்சோலைத் தூப்பு னிமலனுர் தம்முடைய
தாளே நமக்கென்றுஞ் சார்வு. (74)

சார்வு நமக்கென்று சாதுசனந் தாமேத்துஞ்
சோர்விரு தாரம்மை மைந்தனுஞ்—சீர்மிகுந்த
வாதிசிங்கத் தேசிகனை வாழ்த்தாத மானிடரே
சாதிகளி லொன்றிலுங்கூ டார். (75)

கூடார் வினைகளுடன் கொண்டிரார் துன்பத்தைத்
தேடார் சிரீதரனை யன்றியே—நாடாரே
சீர்மல்கு வேதாந்த தேசிகனைப் போற்றியே
பாருலகிற் பாங்கொடுவாழ் வார். (76)

வாழ்வா ரவரெங்கும் வையகத் தார்போற்றத்
தாழ்வொன்று மின்றித் தளர்ச்சியாச்—சூழ்வினைகள்
வேருடனே போக்குவரே வேதாந்த தேசிகன்பேர்
சீருடனே சிந்திப்ப ரேல். (77)

சிந்தித் தடங்குமோ செங்கமலப் பூவுதித்த
அந்தமில்சீர் மங்கை தனக்கன்பன்—கந்தமிகு
தண்டுழாய்த் தார்மார்பன் போலதீ தமர்க்கென்றும்
கொண்டல்கவி வாதிசிங்கக் கோ. (78)

கோவாகி வானவர்க்கு குற்றமிலாத் தொல்லருளால்
ஓவாது வேங்கடத்தி லோங்கிநின்—றுவாவென்
றெம்மை யளிப்பா னிரும்பொழில்சூழ் தூப்புல்வரு
செம்மையுடை வாதிசிங்கத் தேவு. (79)

தேவ ரசுரர்களுந் தேசுடைய வானவரும்
பூவுலகிற் புண்ணியரும் போற்றிசெய—மூவுலகுக்
கீசனெழில் வேங்கடக்கோ னேரார் திருமணியிக்
காசினியைக் காக்குமே வந்து. (80)

காக்குமென்று மெம்மைக் கருக்குழியில் வீழாமே
தீர்க்கும் வினையனைத்துஞ் சேராமே—ஏற்கும்
பெரும்புகழோ னீசன் பிறந்தான் சிறந்த
சுரும்பமருஞ் சோலைசூழ்தூப் புல். (81)

தூப்புனகர் நாதன் றுலங்கொளிசேர் சேவடியே
காப்பென்னக் கன்மங் கழியுமே—மூப்பில்லா
இன்பம் பெருகுமே யிப்புவியி லெவ்வுயிர்க்கும்
துன்ப மதுதொலையு மே. (82)

தொலையாத தொல்வினைகள் சூழ்பவ வாழி
சிலையாற் சிதைக்கவற்றோ விங்கு—துலையில்லாக்
கோதில்புக ழாரியர்கள் கூறுங் குணமிக்க
வாதிசிங்கர் மன்னருளா லன்று. (83)

மன்னருளால் வாதிசிங்க ரிங்குரைத்த நற்கலைகள்
உன்னி யுணர்ந்திட வல்லவர்கள்—துன்னுஞ்
சுருதிமுடி யுட்பொருளைச் சோரா தறிவர்
அருமையா மற்றோ ரறிவு. (84)

அறிவரோ வாழ்வா ரருமறையின் சீரை
நெறிதா னினைந்திடவல் லாரோ—சிறியராய்
வேதமுடித் தேசிகன்றன் வீறுடைய நற்கலைகள்
ஓதி யுணரா தவர். (85)

உணரார் மறைப்பொருளை யுத்தமரைச் சேரார்
பணவா ளரவணைப் பள்ளி—புணர்வானைப்
போற்றியெ ழாரந்தோ புல்லியராய் வாதிசிங்கர்
மாற்றமறி யாமனிசர் மாய்ந்து. (86)

மாய்ந்துமாய்ந் திவ்வுலகின் மன்னிய பல்பிறப்பிற்
றோய்ந்துழல்வீர் சொல்லுகேன் வம்மினோ—ஆய்ந்தொருகால்
வேதமுடித் தேசிகனார் மெய்யுரையை நண்ணினால்
பாதகங்க ளோடும் பறந்து. (87)

பறக்குமே பாவம் பவக்கடலும் வற்றும்
இறக்குமே இவ்வுலகிற் றுன்பம்—மறப்பின்றி
வாதிசிங்கர் வார்த்தைகளை வைப்பரேற் றந்நெஞ்சிற்
கோதில்குணங் கொண்டிருக்க லாம். (88)

கொண்டிருக்க லாமே குறைகடல்சூழ் வையகத்தை
விண்டலத்தில் வீற்றிருக்க லாமேதான்—தொண்டுபட்டுத்
தொல்புகழ்சேர் தூப்புல்வந்த தூய்மறையோன் செய்தகலை
அல்லும் பகலு மறிந்து. (89)

அறிந்து மறையோ ராரணத்தின் பொருளைச்
சிறந்த மனத்திற் சேமித்துப்—புறந்தொழார்
வண்பொழில்சூழ் தூப்புனகர் வந்துதித்த வாதிசிங்கர்
எண்பெரிய சீர்மொழிகண் டார். (90)

கண்டார் கரையைக் கடந்தார் பவக்கடலை
அண்டாத வார்வ மடைந்திட்டார்—வண்டாரும்
கொந்தலர்பூந் தூப்புல்வருங் குற்றமில்சீர் வாதிசிங்கர்
செந்தமிழ்நூல் சிந்தித் தவர். (91)

சிந்தித் தவர்மொழியைச் சிந்தாதே நாடோறும்
வந்தித் தவர்மலர்ப் பாதத்தை—அந்தமில்சீர்
தூப்புனகர் வந்துதித்த தூய்மறையோர் தொல்லருளால்
கோப்புடனே யாங்களித்தோ மின்று. (92)

இன்றறிந்தோ மெந்தமக்கோ ரின்பமிலை யீதன்றி
இன்றறிந்தோ மெய்த்தவமு மீதென்றே—குன்றாத
தொல்புகழ்சேர் தூப்புல்வாழ் தூயன் மலர்ப்பதத்தை
நல்குவதே நாளும் பிற. (93)

பிறவித் துயரறும் பேரின்பஞ் சேரும்
குறையொன்று மில்லாக் குணத்து—மறையவர்கள்
போற்றுமிந்த வாதிசிங்கப் புண்ணியரை யல்லாது
தோத்திரித்துச் சொல்லா தவர்க்கு. (94)

சொல்வதுமுன் னாமந் தொழுவதுமுன் பாதமலர்
நல்குவது முன்னுடைய நற்குணமே—தொல்லருளுக்
கெம்மையிலக் காக்கி யீனமா மெம்பரிசு
செம்மைசெய் தேசிகனே யின்று. (95)

இன்றென்றன் பாக்கியமோ வேரார் வரதகுரு
நன்ருன தொல்லருளோ நாரணன்றன்—குன்ருத
நன்னினைவோ நானின்று வாதிசிங்கர் நல்லடியை
மன்னுமனம் பெற்றவி தம். (96)

தம்மை வணங்கினுர்க் கெஞ்ஞான்றுந் தம்முடைய
தன்மை யளிக்குமிரா மாநுசர்போல்—உம்மை
வணங்கு மடியேற்கு வாதிசிங்க ரேநீர்
இணங்கும் வகையருள்வீ ரின்று. (97)

என்று மெனக்குநீ யீன்றெடுத்த தாய்தந்தை
நன்றளிக்கு நற்குருவு நற்கதியுங்—குன்றெடுத்த
மாயனைப்போன் மற்று மறைமகுட தேசிகனே
தூயமனத்தோர்க்குநீ தேவு. (98)

தேவ ரொடுமுனிவர் தேசுடைய யோகியரு
மேவி யடிபரவு மெய்த்தவனே—காவிமலர்க்
கண்ணுர் மயக்கிற் கலங்கா வகையருளாய்
கண்ணுளா தாப்புற் கனி. (99)

கனிவாய்க் கவிவாதி சிங்கரிப் பார்க்கோர்
நுனியார் திகிரிபோ னூக்கப்—பனிபோலக்
கூருயிற் றன்றே குமதிகடங் கோதுகுலம்
வீறுடைத்தே வேத முடி. (100)

ஸ்ரீ:

ஸ்ரீமதேராமாநுஜாய நம:

தேசிகர் நூற்றந்தாதி.

குறிப்புரை.

தனியன்கள்.

(1) சீர் ஒன்று - சிறப்புப் பொருந்திய; தூப்புல் - தூப்புல் குடியில் அவதரித்த; திருவேங்கடம் உடையான் - வேதாந்த தேசிகர்; பார் ஒன்ற - பூமியில் நிலைத்திருக்கும்படி; சொன்ன - செய்தருளிய; பழமொழியுள் - பழமையான வேத ஸாரமாகிய நூல்களுள்; ஓரொன்றுதானே - ஒவ்வொரு கிரந்தமே; தாரணியில் வாழ்வார்க்கு - இப்பூமியில் வாழும் மனிதர்களுக்கு; வான் - வைகுந்தத்தை; ஏறப்போம் அளவும் - ஏறியடையும் வரைக்கும்; வாழ்வு - வாழ்வாக; அமையாதோ - பொருந்தாதோ? (பொருந்துமென்றபடி). இத் "தேதிக மாலைத் தனிய"னின் விரிவுரையைச் "சீரொன்று தூப்புற்றனியன் மாலை" (திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கவெளியீடு. 34) என்பதில் தெளிவாகக் காணலாம்.

(2) பழவினை - ஊழ்வினை, "அக்கேபோ லங்கை யொழிய விரலழுகித், துக்கத் தொழுநோ யெழுபவே - யக்கா, லலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற, பழவினை வந்தடைந்தக் கால்."—(நாலடியார், தீவினையச்சம் 3); பரவாதி - புறச்சமயி, "பறந்துபுக் குப்பர வாதிக டுன்னும் படுநரகுன்" —(திருநூற்றந்தாதி 51); தொல்வினை - பழவினை, "தொல் வினை தொடர்ந்து தருசூழ் பிறவியென்னும் வல்வினை தொடர்ந்து"—(பிரபோத். பஞ்சா 38); தொடரா - பின்பற்ற மாட்டா; தொழுதெழுநீ நன்னெஞ்சே - "அவன், துயரறு சுடரடி தொழுதெழு என்மனனே."—(திருவாய்மொழி 1-1-1) "எம்பெருமானுடைய ஆச்ரிதஜந ஸமஸ்தது:காபநோதந ஸ்வ பாவமான திருவடி மலர்களிலே ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ் தோசித ஸர்வசேஷ வ்ருத்தியையும் பண்ணி உஜ்ஜீவியென்று

தம்முடைய திருவுள்ளத்தைக் குறித்து அருளிச்செய்கிருர்.'' –(ஆருயிரப்படி.) "இதுக்கு அவ்வருகே விக்ரஹவைலக்ஷண்யம் சொல்ல ஒருப்பட்டுக் கீழ்நின்ற நிலையைக் குலுக்கி 'அவன்' என்று அவ்வருகே போகிருர்; (துயரறு) - 'துயரறுக்கும்' என்று முன்புள்ள முதலிகள் அருளிச் செய்யும்படி; ஸமஸ்தது:காப் நோதந ஸ்வபாவமான திருவடிகள்; ஸகலாத்மாக்களுடையவும் து:கத்தைப் போக்குகையே ஸ்வபாவமான திருவடிகள். 'துயரறு சுடரடி' என்று எம்பெருமானுர் அருளிச்செய்யும்படி :—'வ்யஸநேஷு மநுஷ்யாணும் ப்ருசம்பவதி து:கித:' என்ருல் து:கநிவ்ருத்தியும் அவனதாயிருக்குமிறே; இவர் துயரறத்தான் துயர் தீர்ந்தானுயிருக்கை. இத்தால், இவர் மயர்வற அவன் துயரற்றபடி. (சுடரடி) - நிரவதிக தேஜோரூபமான திவ்யமங்கள விக்ரஹத்தைச் சொல்லுகிற்து. (சுடர்) - பஞ்ச சக்திமயமான புகரைச் சொல்லுகிறது. (அடி) - சேஷபூதன் சேஷிபக்கல் கணிசிப்பது திருவடிகளையிறே. ஸ்தநந்தய ப்ரஜை முலையிலே வாய் வைக்குமாபோலே, இவரும் 'உன் தேனே மலருந்திருப்பாதம்' என்கிற திருவடிகளிலே வாய் வைக்கிருர். (தொழுது) - நித்யஸம்ஸாரியாய்ப் போந்த இழவெல்லாம் தீரும்படி ஸ்வரூபாநுரூபமான வ்ருத்தியிலே அந்வயித்து, (எழு) - 'அஸந்நேவஸபவதி' என்னும் நிலைகழிந்து, 'ஸந்தமேநம்ததோவிது': என்கிறவர்கள் கோடியிலே எண்ணலாம் படியாக உஜ்ஜீவிக்கப்பார். அடியிலே தொழாமையால் வந்த ஸங்கோசம் தீரும்படி அடியிலே தொழுது உஜ்ஜிவியென்கிருர். (என்மனனே) - இப்போதாயிற்று தம்மைக் கண்டது; 'அருளினன்' என்று நின்ற வித்தனையிறே முன்பு. இருவர் கூடப் பள்ளியோதியிருந்தால், அவர்களிலே ஒருவனுக்கு உத்கர்ஷமுண்டானுல், மற்றையவன் தனக்கு அவனோடே ஒரு ஸம்பந்தத்தைச் சொல்லிக்கொண்டு கிட்டுமாபோல 'மநஏவமநுஷ்யாணும் காரணம் பந்தமோக்ஷயோ:' என்கிறபடியே நெடுநாள் பந்த ஹேதுவாய்ப் போந்தது இப்போது முந்துற்ற நெஞ்சாய் முற்பட்டு நிற்கிறபடியாலே அத்தோடே தமக்கு ஒரு ஸம்பந்தத்தை ஆசைப் பட்டு 'என்மனனே' என்கிருர்...... 'தொழுதெழு' என் கையாலே - ப்ராப்திபலமான கைங்கர்யத்தைச் சொல்லிற்று; 'என்மனனே' என் கையாலே பரிசுத்தாந்த:கரணனே அதிகாரி யென்னுமிடம் சொல்லிற்று."—(ஈடு முப்பத்தாருயிரப்படி);

" நல்லைநெஞ்சே! நாம் தொழுதும் நம்முடை நம் பெருமான் " —(அறிவுதரும் பெரிய திருமொழி 1-7-9), " சோதியநந்தன் கலியிற்றெழுதெழ நின்றனரே."—(தேசிகமாலை, மெய்விரத நன்னிலத்து மேன்மை. 26), " நாதமுனிகழலே, நாளுந் தொழுதெழுவோம் நமக்கார் நிகர் நானிலத்தே."—(தேசிக மாலை, அதிகாரஸங்கிரஹம். 6).

(3) எந்தை - எம்ஸ்வாமி; தந்தையொடு தாயாகிக் காப்பர்—" அன்னையாய் அத்தனாய் என்னை யாண்டிடும், தன்மையான்."—(கண்ணிநுண்சிறுத்தாம்பு. 4), " மேலாத் தேவர்களும் நிலத்தேவரும் மேவித்தொழும், மாலார்வந்து இன நாள் அடியேன் மனத்தே மன்னினார், சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும், மேலாத்தாய்தந்தையும் அவரே இனி யாவாரே."—(திருவாய்மொழி 5-1-8); தாரணி—பூமி; வாயார வாழ்த்து - " எண்திசையும் அறிய இயம்புகேன், ஒண்தமிழ்ச் சடகோபனருளையே."—(கண்ணிநுண் சிறுத் தாம்பு. 7.)

நூல்.

(1) எல்லா நூல்களும் மங்கலமொழி முதல் வகுத்துக் கூற வேண்டுவது மரபாதலால், 'வேதமுடி' என்று தொடங்கினார். கம்பநாட்டாழ்வான் இயற்றியருளிய 'ஆழ்வார் நூற்றந்தாதி' என்கிற 'சடகோபரந்தாதி' 'வேதத்தின் முன்செல்க' என்று தொடங்கியுள்ளது காண்க. வேதம் - ஆதிநூல். வித்தென்னும் பகுதியடியாகத் தோன்றிய பெயர் என்பர். வித் - ஞானம். " இது பரதகண்டத்து ஆஸ்திகர்களால் கொண்டாடப்பெறும் நூல். இது இருக்கு, எஜுஸ், சாமம், அதர்வணம் என்று நான்கு பிரிவை யுடையது. இது ஞானகாண்ட, கர்மகாண்ட வகையால் ஈச்வரனை யும், அவனை உபாஸிக்கும் யஞ்ஞாதிகளையும் கூறும். இதற்கு இராவணன் சந்தமுதலியவகுத்தான். இது சிக்ஷை, வியாகரணம், நிருத்தம், சந்தஸ், சோதிஷம், கல்பம் என ஆறு அங்கங்களை யுடையது. இதனைச் சோமுகன் என்னும் அசுரன் திருடிச் செல்லப் பின் விஷ்ணுமூர்த்தி அன்ன உருவமாய்ப் பிரமனுக்கு உபதேசித்தனர். இதன் முடிவு உபநிஷத்துக்கள். மீமாம்சா சாஸ்திரிகள் வேதம் சிருட்டிக்கப்பட்டன அல்ல அநாதி என்பர்.

நியாயவேதாந்தியர் ஈச்வரவாக்கியம் என்பர். கடவுள் வேதங்களைப் பிரமனுக்கு உபதேசிக்கப் பிரமன் அதனை இருடிகளுக்கும் அவ்விருடிகள் அதனைத் தம் சீடருக்கும் உபதேசித்தனர் என்பர்.'' —(அபிதான சிந்தாமணி.); தேசிகன் - அழகன் (தேசிகம்-அழகு) "வடிவழகார்ந்த வண்தூப்புல் வள்ளல்"—(பிள்ளையந்தாதி. 20). குரு. "பற்றற்றவன் கொடுக்கும் பண்டமனைத் தினையும் பற்றுதலுந் தேசிகர்க்குப் பாங்கு"-(சைவ. ஆசா. 88). "பூருவா சாரியர்கள் போதமநுட் டாநங்கள், கூறுவார் வார்த்தைகளைக் கொண்டுநீர்—தேறி, இருள்தருமா ஞாலத்தே யின்பமுற்று வாழும், தெருள்தருமா தேசிகனைச் சேர்ந்து."—(உபதேசரத்தினமாலை. 72.) "அருள்பெற்ற, நாதமுனி முதலான நந்தேசிகரையல்லால், பேதை மனமேயுண்டோ பேசு."—(உபதேசரத்தினமாலை. 36), "தேசிகர்பால் கேட்ட செழும் பொருளை"—(ஷ௸. 57), "யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த வுலகம் புகும்"—(திருக்குறள். துறவு. 6 "தானல்லாத வுடம்பை யானென்றும், தன்னோடியைபில்லாத பொருளை எனதென்றுங்கருதி அவற்றின்கட் பற்றுச் செய்வதற் கேதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பான் வானோர்க்கும் எய்தற்கரிய வீட்டுலகத்தை யெய்தும். மயக்கம் அறியாமை. அதனைக் கெடுத்தலாவது தேசிகர்பாற் பெற்ற உறுதி மொழிகளானும் யோகப்பயிற்சியானும் அவை யானெனதன்மை தெளிந்து, அவற்றின்கட் பற்றை விடுதல்.") தேசாந்தரி, வணிகன். (3, 4 பிங்கல 3678) "தமிழில் 'தேசிகன்' என்னும் சொல்லுக்கு வணிகன் என்றும், ஆசான் என்றும், இரு பொருள்கள் உள. "தேசிகன் வணிகன் ஆசான்"—(சூடாமணி நிகண்டு.) நம் தேசிகனை ஆசான் என்றமட்டில் உணர்வது போதாது. உலகமறிந்த வணிகர்களுக்கெல்லாம் இவன் உயர்ந்த கொண்டு விலை செய்யும் வணிகன். விலையுள்ள பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கி அவை கிடையாத வேறிடங்களில் கொண்டுபோய் உயர்ந்த விலைக்கு விற்று நல்ல லாபத்தை அடைபவன் வணிகன் என்று உலகம் அறியும். விலையில்லாத (அதாவது யாரும் விலைமதிக்கவும் கொடுக்கவும் முடியாத) பொருள்களை (சாஸ்திரதத்வங்களையும் அர்த்தங்களையும்) யாரும் அறியாத (அதாவது வேதசாஸ்திரங்களில் மறைபொருளாகக் கிடந்த) இடங்

களில் தேடி வாங்கி (மனத்தில் கொண்டு) இவைகிடையாது தவிக்கும் இடங்களாகிய சம்ப்ரதாய நிஷ்டர்களுக்கு அவர்களுடைய பக்திச்ரத்தையாகிய விலைக்கு மட்டில் விற்று அவன் த்ரவ்ய லாபம் அடைவதைப்போல் அன்றிக்கே படிப்போரும், கேட்போரும் அனுஷ்டிப்போரும் ஆத்மலாபம் அடையச் செய்வதாகும் இவன் விசித்திர வாணிபம் இருந்தபடி. தேசிகன் என்னும் வடமொழிச் சொல்லுக்கு வழி காட்டுபவன் என்பது தாதுப் பொருள். கார்யாகார்யங்களையும் விதி நிஷேதங்களையும் தன்னை அடுத்தவனுக்கு எடுத்துக்கூறி அவனை நல்வழிப்படுத்தி இவ்வுலகிலுள்ள மட்டும் பாபதோஷங்கள் இல்லாத நல்வாழ்வும் பிறகு மோக்ஷபர்யந்தமான நற்கதியும் சித்திக்கும்படி வழிகாட்டுபவன் ஆசான் ஆதலின் அவனுக்குத் தேசிகன் என்பது பெயராயிற்று. பட்டப்பெயராகவோ காரணப் பெயராகவோ மற்றவர்கள் தேசிகன் என்ற சொல்லைத் தங்கள் பெயருடன் சேர்த்துக் கொண்டபோதிலும் இச்சொல் இடுகுறிப் பெயராக இவன் ஒருவனுக்கே தமிழ் மொழி வழங்கும் நாடுகளிலும் பிற நாடுகளிலும் அமைந்து கிடக்கும் திறம் ஒன்றே இவனைப் பரமாச்சாரியன் ஆக்கித்தருகிறது." "சீலங் கவர்ந்திடுந் தேசிகர்" என்பது ரஹஸ்ய ஸந்தேசப் பாசுரம்.—(அமிருதரஞ்சனி. 15) இதற்கு "சீலங்கவர்ந்திடும் என்கிற பாட்டாலே ஸதாசார்யப்ரஸாதமடியாக தனக்கு வருகிற பரமபுருஷார்த்த லாபத்தை அநுஸந்திக்கிறுன். (சீலங்கவர்ந்திடு மென்றது)—ஆத்ம குணங்களையும் ஆசாரத்தையும் அங்கீகரிக்குமவர்கள் என்றபடி. (தேசிகர் என்றது)—ஆச்ரிதரை வழியல்லா வழிபோகாதபடி விலக்கி நல்வழி காட்டுகைக்கு நிலவர் என்றபடி."—(ரஹஸ்ய ஸந்தேச விவரணம்) என்று நம் வேதாந்த குருவே வியாக்கியான மிட்டுள்ளார். "மருளற்ற தேசிகர் வானுகப் பாலிந்த வையமெல்லா, மிருளற் றிறைவ னிணையடி பூண்டுய வெண்ணுதலாற், றெருளுற்ற செந்தொழிற் செல்வம் பெருகிச் சிறந்தவர்பா லருளுற்ற சிந்தையினுலழி யாவிளக் கேற்றினரே."—(தேசிகமாலை. அதிகாரசங்கிரகம், 37) "தெருளார் மறைமுடித் தேசிக னேயெங்க டுப்புற்றேவே." —(பிள்ளையந்தாதி 12.) "அருள்தரு மாரண தேசிகனே யெங்க டுப்புற்றேவே."—(பிள்ளையந்தாதி. 18); வேதியர் - வேதமுணர்ந்தோர்; வேதியர் குலத்தரசே - "நல்வேதியர்கள்

தொழும் திருப்பா தனிராமாநுஜன்"—(இராமாநுச நூற்றந்தாதி. 105); சாதுசனங்களுக்கு - ஸ்ரீவைஷ்ணவர்கட்கு, "வாதியர் மன்னுந்தருக்கச் செருக்கின் மறைகுலையச் சாதுசனங்க ளடங்க நடுங்கத் தனித்தனியே, யாதி யெனுவகை யாரண தேசிகர் சாற்றினர்நம், போத மருந்திரு மாதுட னின்ற புராணனையே"—(தேசிகமாலை. அதிகாரசங்கிரகம். 13) "சாதுசனம் வாழவென்று சாற்றியநற்ப்ரபந்தசாரம்"—(தேசிகமாலை. பிரபந்தசார சிறப்புத்தனியன், சாதுக்கள். "தம்பிறப்பாற் பயனென்னே சாதுசனங்களிடையே" —(திருவாய்மொழி 3-5-4.), "சாதுசனத்தை நலியும்"—(திருவாய்மொழி 3-5-5); தாவளம்— இருப்பிடம் (தெலுங்கு), வசிக்குமிடம். "பூவளருந்திரு மாது புணர்ந்தநம் புண்ணியனுர், தாவள மான தனித் திவஞ் சேர்ந்து தமருடனே."—(தேசிகமாலை. பரமபத சோபானம். 18); போது - பூ, மலரும் பருவத்தரும்பு. "காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி,மாலை மலருமிந் நோய்."—(திருக்குறள். காமத்துப்பால். பொழுது கண்டிரங்கல். 7); பாதம் - திருவடி, "அவர்பாதம் வணங்கினற்கு,"; நின்னடியையென்று நினைந்திருப்பார் பாதம் - "எந்தை பிரான் தன்னை, பாதம் பணிய வல்லாரைப் பணியுமவர் கண்டீர், ஓதும் பிறப்பிடை தோறும் எம்மையாளுடையார்களே."—(திருவாய்மொழி 3-7-3), "எந்தைபிரான் தனக்கு, அடியாரடியார் தம்மடியாரடியார் தமக் கடியாரடியார்தம், அடியாரடியோங்களே."—(திருவாய்மொழி 3-7-9); சென்னி - தலை; மலர் - பூ.

(2) மலர்மகள்கோன் - திருமாமகள் கேள்வன், திருமால்; மன்னி - பொருந்தி; கருமம் - கடமை; மலம் - அழுக்கு, பற்று, ஆர்வம், செற்றம் முதலியவற்றிற்கும் மலமெனக் கூறுவர்; வேதாந்த தேசிகன் - "எழில் வேதாந்தாரியன்"—(தேசிகமாலை, திருச்சின்னமாலை சிறப்புத்தனியன்), "மின்னுறு நூலமர் வேங்கட நாதனந் தேசிகனே"—(தேசிகமாலை, பன்னிரு நாமம் சிறப்புத்தனியன்), "சீர்கொண்ட தூப்புற் றிருவேங்க டாரியன்."—(ஷை, ஷை), "சிட்டர்தொழும், வேதாந்த தேசிகனை—(தேசிகமாலை. கீதார்த்தசங்கிரகம். சிறப்புத் தனியன்), "கீதை மொழிந்தருளும் வேதாந்த தேசிகனுர்."—(ஷை. ஷை), "சீராரும்வேதாந்த தேசி கர்கோன்,"—(தேசிக

மாலே. ஆகார நியமம். சிறப்புத்தனியன்.), "ஞானியர்கள், சென்னியணி சேர் தூப்புல் வேதாந்த தேசிகனே," "தூப்புல் வருநிகமாந்தாசிரியன்"—(வாழித்திருநாமம்), "வேண்பெரிய விரிதிரைநீர் வையத் துள்ளே வேதாந்த வாரியனென் றியம்ப நின்ருேம்." —(தேசிகமாலே, அமிருதாசுவாதினி. 37), "சந்தமிகு தமிழ்மறையோன் றூப்புற் ருேன்றும் வேதாந்த குரு."—(தேசிகமாலே. பிரபந்தசாரம். 18), "தீதற்ற நற்குணப் பாற்கடற் ருமரைச் செம்மலர்மேன், மாதுற்ற மார்பன் மருவவின் கீதையின் வண்பொருளேக், கோதற்ற நான்மறை மௌலியி ஞசிரி யன்குறித்தான், காதற் றுணிவுடை யார்கற்கும் வண்ணணங் கருத்துடனே."—(தேசிகமாலே. கீதார்த்தசங்கிரகம் 21), "மெய்விரத நன்னிலத்து மேன்மை யேத்தி வேதாந்த வாசிரியன் விளங்கினுனே."—(தேசிகமாலே. மெய்விரத நன்னிலத்து மேன்மை. 28), "பெருவேலியா மெம்பிரான் பேசுபய வேதாந்த தேசிகன்"—(அழகர்பிள்ளேத் தமிழ். பழிச்சினர்ப்பரவல். 12), "செந்தமிழு மாரியமுந் தேர்ந்த பொதுத் தேசிகனே, யெந்தவிதச் சித்து மியற்ற வல்லாய்.", "தேசிக னிதயக் கோயிற் செழுமலர் மிசைவார்", "செந்தமிழ்ப் புலவ ரேத்துந் தேசிகப் பெருமான்," "மருள்புகா நிலேத் தேசிகன்," "சருவ சித்தியு மெய்தித் தேசிகன் றன்னேயே நிகர்," "தேசிக னென்னுமாசான்," "புவனி போற்று நந் தேசிகன்"—(ஸ்ரீலஸ்ரீ தண்டபாணிசுவாமிகள்); வேருகா தேத்துவார் - "தேவுமற்றறியேன்," "வேருென்றும் நான் அறியேன்" என்ற நிலேயிலுள்ளோர்; பாதாம்புயம் - திருவடித் தாமரை; பற்று - அடைக்கலம், "பற்றுக பற்றற்ருன் பற்றினேயப்பற்றைப், பற்றுக பற்றுவிடற்கு,"—(திருக்குறள். துறவு. 10), "கட்டப் பொருள்விரித்த காசினியி லுன்மறையி, னிட்டப் பொருளியம்பு மின்பொருளேச் - சிட்டர்தொழும், வேதாந்த தேசிகனே மேவுவார் தங்கடிருப், பாதாம் புயமடியேன் பற்று.", "கீதை மொழிந்தருளும் வேதாந்த தேசிகனுர், பாதாரவிந்தமலர் பற்று"—(தேசிகமாலே, கீதார்த்தசங்கிரகம். சிறப்புத் தனியன் கள்); நமக்குப்பற்று—ஸ்ரீ வைஷ்ணவர்களாகிய அனேவருக்குந் தஞ்சமாகும்.

(3) பற்று - "இல்லதும் உள்ளதும், அல்லது அவனுரு,

எல்லையில் அந்நலம், புல்குபற்றற்றே."—(திருவாய்மொழி 1-2-4), "அற்றது பற்றெனில், உற்றது வீடுஉயிர், செற்றது மன்னுறில், அற்றிறை பற்றே."–(ஷை 1-2-5), "பற்றிலன் ஈசனும், முற்றவும் நின்றனன், பற்றிலையாய் அவன் முற்றிலடங்கே." —(ஷை 1-2-6); பராங்குசன் - பிறமதங்களாகிய யானைகளைத் தமது பிரபந்தங்களிற் கூறிய தத்துவார்த்தங்களாற் செருக்கடக்கி அவற்றிற்கு மாவெட்டியென்னுங் கருவிபோல இருக்கும் நம் மாழ்வார். "பாடுவ தெல்லாம் பராங்குசனை நெஞ்சத்தாற், றேடுவதெல் லாம்புளிக்கீழ்த் தேசிகனை—ஓடிப்போய்க், காண்ப தெலா நங்கையிரு கண்மணியை யான்விரும்பிப், பூண்பதெலா மாறனடிப் போது."—(பெருந்தொகை. பொருளியல். 1823), "தேன ருமகிழ்த் தொடையலு மவுலியுந் திருக்கிளர் குழைக் காதும், கான ருமலர்த் திருமுகச் சோதியுங் கயிரவத் துவர்வாயும், மோன மாகிய வடிவமு மார்பமு முத்திரைத் திருக்கையும், ஞான தேசிகன் சரண்தா மரையுமென் னயனம்விட் டகலாவே." —(ஷை 1824); பராங்குசனையே பற்றும் - "பூமன்னுமாது பொருந்திய மார்பன் புகழ்மலிந்த, பாமன்னுமாறனடி பணிந் துய்ந்தவன்"–(இராமாநுச நூற்றந்தாதி. 1), "மாமலர் மன் னிய மங்கை மகிழ்ந்துறை மார்பினன்ருட், டுமலர் சூடியதொல் லருண் மாறன் றுணையடிக்கீழ், வாழ்வை யுகக்கும்."—(பிள்ளை யந்தாதி. 1); அன்பாலடைபவர் - "அன்பன் தன்னை அடைந்தவர்கட்கெல்லாம், அன்பன் தென்குருகூர் நகர்நம்பிக்கு, அன்பனுய்."—(கண்ணிநுண் சிறுத்தாம்பு. 11); ஆளாகும் அன்பர் - "என் நம்பிக்கு ஆள், புக்ககாதல் அடிமைப் பய னன்றே"—(கண்ணிநுண் சிறுத்தாம்பு. 9), "நகர்நம்பிக்கு ஆள், உரியனுய் அடியேன் பெற்ற நன்மையே."–(கண்ணிநுண் சிறுத்தாம்பு. 3); என்பால் - என்னிடத்து; இசைந்து - உடன்பட்டு.

(4) இசைந்தேன் - ஒப்பினேன்; மண்மிவரையேத்த - "பற்றிப், பொருந்தாதான் மார்பிடந்து பூம்பாடகத்துள், இருந் தானை ஏத்தும் என் நெஞ்சு."—(இயற்பா. இரண்டாந் திரு வந்தாதி. 94); ஏத்த - புகழ; கசிந்து - ஈடுபட்டு; என் செய்கேன் - என்ன செய்வேன்; பசுந்துளவ மாலையான் - பசுமையாகிய துளசி மாலையைத் தரித்த எம்பெருமான்; தன்னி

லும் - "அன்பர்க்கே யவதரிக்கு மாய னிற்க வருமறைக டமிழ் செய்தான் ருளே கொண்டு, துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டுந் தொல்வழியே நல்வழிக டுணிவார் கட்கே."—(தேசிக மாலை. அதிகார சங்கிரகம். 21); அறையும் - சப்திக்கும், முறையிடும்; தூப்புல் இறை - தூப்புற் கோமான், ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன், "நையும் மனம் உன் குணங்களை யுன்னி என் நா இருந்து எம், ஐயனி ராமாநுசன் என்றழைக்கும் அருவினையேன், கையும் தொழும் கண் கருதிடும் காணக்கடல் புடைசூழ், வையமிதனில் உன் வண்மை என்பால் என் வளர்ந்ததுவே."—(இராமாநுச நூற்றந்தாதி. 102).

(5) இறை - ஆள்பவன், நாயகன், ஈசுவரன், அரசன்; அகற்றும் - போக்கும்; தேசு - ஒளி, பிரகாசம்; கறையில் - அழுக்கற்ற, குற்றமற்ற; குணங்கொள் கடவுள் - "குன்றனைய குற்றம் செயினும் குணங்கொள்ளும், இன்று முதலாக என் நெஞ்சே!—என்றும், புறனுரையே யாயினும் பொன்னாழிக் கையான், திறனுரையே சிந்தித் திரு."—(இயற்பா. முதல் திருவந்தாதி. 41.); மறையனைத்தும் வாழ்வித்த - பகவ தாராதநரூபமான கர்மங்களை முக்கியமாய் வெளியிடுவதால் கர்ம காண்டம் எனப் பெயர்கொண்ட பூர்வ மீமாம்ஸையும், அக் கர்மங் களால் ஆராதிக்கப் பெறும் பகவானை முக்கியமாய்ப் பேசுவதால் ப்ரஹ்ம காண்டம் எனப் பெயர்பெற்ற உத்தர மீமாம்ஸையும் ஒரே சாஸ்திரம் ஆகும் என்பது போதாயனர், ஆளவந்தார், ஸ்ரீ பாஷ்யகாரர் முதலிய முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்டதை நன்கு நிலைநிறுத்தி வேதமனைத்தும் வாழச் செய்தவர். "கனை கடல்போ லொருநீராஞ் சுருதி ரத்தைக் கவந்தனையு மிராகுவை யும் போலக் கண்டு, நினைவுடனே நிலைத்தரும மிகந்து நிற்கு நீசர்நிலை நிலைநாடா வண்ண மெண்ணி, வினைபரவு சைமினியார் வேத நூலை வேதாந்த நூலுடனே விரகாற் கோத்த, முனையுடைய முழுமதிநம் முனிவர் சொன்ன மொழிவழியே வழியென்று முயன்றிட் டோமே."—(தேசிகமாலை. பரமதபங்கம். 35.); சீயம் - சிங்கம். "வலிமிக்கசீயம்."—(இராமாநுச நூற் றந்தாதி. 88.); வையகத்தில் - நிலவுலகத்தில்; ஆய்ந்து - ஆராய்ந்து.

(6) மங்கையர் கோன் - திருமா மகள் கணவன், திருவுக்

குந் திருவாகிய செல்வன்; அம்புயத்தாளிணை - திருவடித் தாமரை; சாய்ந்த - ஈடுபட்ட; பெருங் குணத்தர் - சான்றோர்; விரும்புவர் - ஆசைப்படுவர்; வேதாந்த குரு - "சந்த மிகு தமிழ்மறையோன் றூப்புற் றோன்றும், வேதாந்த குரு."—(தேசிகமாலை. பிரபந்தசாரம். 18.)

(7) குருமாமணி - சிறந்த விலக்ஷணமான மாணிக்கம்; "தோளாத மாமணி."—(தேசிகமாலை. பரமபத சோபானம். 21.); குலவு - விளங்குகின்ற; வரை - மலை; மார்பன் - "திருவுடன் வந்த செழுமணி போற்றிரு மாலிதய மருவிடம்."—(தேசிகமாலை. அதிகார சங்கிரகம். 8.); திருமா மகள் கணவன் - "தேனுர் கமலத் திருமக ளுதன்."—(தேசிகமாலை அதிகார சங்கிரகம். 26.), "பூவள ருந்திரு மாது புணர்ந்த நம் புண்ணியனூர்."—(தேசிகமாலை. பரமபத சோபானம். 18.), "தரும வரும் பயனுய, திருமகளார் தனிக்கேள்வன், பெருமை யுடைய பிரானுர், இருமைவினை கடிவாரே."—(திருவாய் மொழி. 1-6-9.); தூப்புல் வரும் குன்றுக்குணத்தன் - "குணக்குலமோங்கு மிராமா னுசன்குணங் கூறுந்தூப்பு லனுக்கன்."—(பிள்ளையந்தாதி. 9.); குன்று - குறைவில்லாத, பூரணமான. "கையில் கனியென்னக் கண்ணனைக் காட்டித் தரிலும் உன்தன், மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான் நிரயத், தொய்யில் கிடக்கிலும் சோதி விண்சேரிலும் இவ்வருள் நீ, செய்யில் தரிப்பன் இராமாநுச! என்செழுங் கொண்டலே."—(இராமாநுச நூற்றந்தாதி. 104.)

(8) "வாய் அவனையல்லது வாழ்த்தாது கைஉலகம், தாய வனை யல்லது தாம்தொழா—பேய்முலைநஞ்சு, ஊணுக வுண்டான் உருவொடு பேரல்லால், காணுகண் கேளா செவி"—(முதல் திருவந்தாதி. 11.); தேருது-தெளியாது, நிச்சயிக்காது; சென்னி வணங்காது - "சென்னி வணங்கச் சிறுபனி சோரவெங் கண்ணிணைகள், வெந்நரகங்களும் வீய வியன்கதி யின்பமேவத், துன்னு புகழுடைத் தூப்புற் றுரந்தன் றூமலர்த்தாண், மன்னிய நாள்களு மாகுங்கொன் மாநிலத் தீர்நமக்கே."—(பிள்ளையந்தாதி. 2.); சேறு ஆரும் - சேறுநிறைந்த; நின்மலன் - "இப்படி ஸௌலப்ய ஸௌசீல்யங்கள் உண்டானாலும், ஆச்ரித தோஷத்தைக் காணுமாகில் அணுகக் கூசார்களோ என்னில்,

(நின்மலன்) "அவிஜ்ஞாதா" என்றும், "என்னடியார் அது செய்யார்" என்றும் சொல்லுகிறபடியே ஆச்ரிதருடைய தோஷ தர்சநமாகிற சரண்யதோஷ மில்லாதவன். ஸர்வஜ்ஞனு யிருக்கச் செய்தே ஆச்ரித தோஷத்தைக் காணுன் என்றது, காணுமதுவும் இவர்களுடைய தோஷத்தைக் கழிக்கைக் குறுப்பாம் என்றபடி. 'விமலன் என்று தொடங்கி இவ்வஞ்சு பதங்களாலே நாராயண சப்தத்தில் உபாயத்வப்ராப்யத்வங்களுக்கு உபயுக்தமான உபய லிங்கத்வமும் உபயவிபூதி நிர்வாஹத்வமும் சொல்லிற்றுயிற்று." —(முநிவாஹந போகம்.); தோளல்லது தொழாதோள் - "தோள் அவனையல்லால் தொழா."—(முதல் திருவந்தாதி. 63.); தேசுடைய தோள் - "தேசுடைய சக்கரத்தான் சங்கினுன் சார்ங்கத்தான்."—(மூன்ருந் திருவந்தாதி. 21.); கூருது......வணங்காது - "புவனமெங்கும், ஆக்கிய கீர்த்தி இராமாநுசனை அடைந்தபின் என், வாக்கு உரையாது என் மனம் நினையாது இனி மற்றென்றையே." (இராமாநுச நூற்றந்தாதி. 56.)

(9) வாணன்......மாற்றினுன் - "மூவுலகும் பூத்தவனே! என்று போற்றிட வாணன் பிழை பொறுத்த தீர்த்தனை"—(இராமாநுச நூற்றந்தாதி. 22.) "விறல் வாணன் ஆயிரம் தோள் துணித்தீர்."—(திருவாய்மொழி. 2-4-2.); மாளாத - அழியாத; மாற்றினுன் - அழித்தான், கண்டித்தான், விலக்கினுன்; வான ருளான் - சிறந்த கிருபா மூர்த்தி, அளவிட வரிய பெருகு மருளான்; தூப்புல் வளல் - "வண்தூப்புல் வள்ளல்"—(பிள்ளையந்தாதி. 20.)

(10) வள்ளல் - வரையாது கொடுப்போர், கொடையாளர்; மணிவண்ணன் - எம்பெருமான்; "நீல ரத்நம் போன்ற வடிவையுடையவன்." ("மணிவண்ணு")—அபரிச் சேதியனு யிருக்கச் செய்தேயும் முன்தானையிலே முடிந்து ஆளலாம்படி யிருக்கை. கீழ்ச்சொன்ன வ்யாமோஹம் வடிவிலே நிழலிடுகை. இந் நீர்மையின்றிக்கே காதுகனுனலும் விட வொண்ணுத வடிவழகு. பெண்கள் பிச்சுக்கு நிதானமான வடிவென்னவுமாம். "மாலாய்ப் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணளனை" என்னக்கடவதிறே.—(திருப்பாவை. 26. மூவாயிரப்படி.); மாயன் - "மாயனை"—(திருப்பாவை. 5.); பவம் - சம்ஸாரம்;

அள்ளல் - குழைசேறு, நெருக்கம்; கள்ளமனம் - "கள்ளம் மனம் விள்ளும் வகை கருதிக் கழல் தொழுவீர்"—(பெரிய திருமொழி. 7-9-1.); சேவடி - சிவந்தபாதம். "சேவடி செவ்வி திருக்காப்பு."—(திருப்பல்லாண்டு. 1.); உதித்தான் - அவதரித்தான்; பரன் - உயர்ந்தவர்களுக்குள்ளும் உயர்ந்தவன். "தூப்புல் மாபூருடன்"—(பிள்ளையந்தாதி. 8.); "தூப்புற்றேவே"—(ஷை. 12.), "தூப்புன்மாலே."—(ஷை. 13.); கள்ளமனம் தீர்த்து - "விளக்காகி வேங்கட வெற்பினில் வாழும் விரைமலராள், வளக்காதல் கொண்டுறை மார்பன் றிறத்து முனதடியார், துளக்காத லில்லவர் தங்க டிறத்திலுந் தூய்மை யெண்ணிக், களக்காதல் செய்யு நிலைகடி யாய்தூப்புற் காவலனே."—(பிள்ளையந்தாதி. 16.)

(11) பரன் நாரணன் - உயர்வற வுயர்நலமுடையவன், அயர்வறு மமரர்கட்கதிபதி; நாரணன் - விட்டுணு, "கள்ள கந்தளித்த மலர்த்தலைச் சேக்குங் கடவுணரனன் முதலானோர்" (தனிகை. நந்தி. 3.), நாராயணன்—(நீரையிடமாக வுடையவனென்றபடி, நாராயண:, நாரம் - நீர். அயந - இடம்.) "நாராயணன்பர ஞமவ னுக்கு நிலையடியோஞ், சோரா தனைத்துமவனுடம் பென்னுஞ் சுருதிகளாற், சீரார் பெருந்தகைத் தேசிகரெம்மைத் திருத்துதலாற், றீரா மயலகற் றுந்திறம் பாதெளிவுற்றனமே."—(தேசிகமாலை. அமிருதரஞ்சனி. 17.); அவன் பாதத்திற்கு ஆட்செய்கை உரம் - கைங்கரியமே புருஷார்த்தம். பரதத்த்வம் ஸ்ரீமந் நாராயணன். அநந்யார்ஹசேஷத்வமேஸ்வரூபம். குணாநுபவஜநித ப்ரீதிகாரித கைங்கர்யமே புருஷார்த்தம். அஹங்கார மமகாரங்கள் தத்விரோதி. தந் நிவ்ருத்திக்கும் கைங்கர்ய ஸித்திக்கும் ஸர்வஸுலபனான ஸர்வேச்வரன் திருவடிகளே உபாயம். ஜிதேந்த்ரியத்வம் தொடக்கமாகக் கைங்கர்ய பர்யந்தமாக உபாயபலம். ஸகலவேத தாத்பர்யம் இவையே; உரம் - பலம்; ஓர்தல் - ஆராய்தல், நிச்சயித்தல், அறிதல், தெளிதல்; ஓரார் - ஆராய்ந்து அறியார்; சிரமம் - கஷ்டம்; தீர்க்க - நீக்க. "இடுக்கண் டீர்த்தசேவடி"—(சேதுபு. சேதுச. 1.); மார்க்கம் - வழி, சமயம்; மால் - திருமால், "திருமலைமால் திருமணியாய்ச் சிறக்க வந்தோன்"—(வாழித் திருநாமம்.); வந்துதித்து மார்க்கமிது வென்றுரைத்

தான்—“ சீராரும் வேதாந்த தேசி கர்கோன் செழுமறையி னுட் பொருளைச் சிந்தை செய்தே, யாராய்ந்து வாழ்வுறவிப் புவியோர் தங்கட் கன்புடனே யாகார நியதி சொன்னன் ”—(தேசிகமாலை. ஆகார நியமம். சிறப்புத்தனியன்.); மால்—ஆச்ரித விஷயத்தில் வ்யாமோஹத்தை யுடையவன். “மணிவரை யூர்ந்த மங்குன் ஞாயிற், றணிவனப் பமைந்த பூந்துகில் புனைமுடி, இறுவரை யிழிதரும் பொன்மணி யருவியின், நிறனொடு மாறுந் தார்ப் புள்ளுப்பொறி புனைகொடி, தண்ணளி கொண்ட வணங் குடை நேமிமால்.”—(பரிபாடல். 13 : 1-6, “ நீலவரைக்கட் பரந்த இளஞாயிற்றினது அழகுபோலும் அழகமைந்த பீதாம் பரத்தையும், நீலவரையை ஊர்ந்த இளஞாயிற்றினது அழகு போலும் அழகமைந்த புனைமுடியையும், அவ்வரையி னின் றிழியும் பொன்மணிகளையுடைய அருவியின் நிறத்தொடு மாறுகொள்ளும் தாரினையும், புள் எழுதிய புனைகொடியையு , முடையையாய் விண்ணின்கண் நின்று அளித்தற்றொழிலைக் கொண்டமாலே !).

(12) அடியவர் - பரன் திருவடிக் கடவாதே வழிபடுவார். “ பண்டை நாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும், கொண்டு நின் கோயில் சீய்த்துப் பல்படிகால் குடிகுடி வழி வந்து ஆட்செய்யும், தொண்டர்.”—(திருவாய்மொழி 9-2-1), “ குடிக்கிடந்தாக்கஞ் செய்து நின்தீர்த்த அடிமைக் குற்றேவல் செய்து உன்பொன் அடிக்கடவாதே வழிவருகின்ற அடியர் ” —(ஷை 9-2-2), “தொடர்ந்து குற்றேவல்செய்து தொல்லடிமை வழி வரும் தொண்டர்.”—(ஷை 9-2-3), “ நம்முடையடியர் ”—(ஷை 9-2-7), “ தேட்டருந்திறல் தேனினைத் தென்னரங்கனைத் திருமாது வாழ், வாட்டமில் வனமாலை மார்வனை வாழ்த்தி மால்கொள் சிந்தை யராய், ஆட்டமேவி யலந்தழைத்து அயர்வெய்தும் மெய்யடியார் கள் ”—(பெருமாள் திருமொழி 2-1), “ தோடுலா மலர்மங்கை தோளிணை தோய்ந்ததும் சுடர்வாளியால், நீடுமாமரம் செற்றதும் நிரைமேய்த்ததும் இவையே நினைந்து, ஆடிப்பாடி அரங்கவோ ! என்றழைக்கும் தொண்டர்”—(ஷை 2-2), “ஏறடர்த்ததும் ஏனமாய் நிலம் கீண்டதும்முன் இராமனாய், மாறடர்த்ததும் மண்ணளந்ததும் சொல்லிப்பாடி வண் பொன்னிப்பேர், ராறுபோல் வரும் கண்ண நீர் கொண்டு அரங்கன் கோயில் திருமுற்றம் சேறுசெய் தொண் டர்.”—(ஷை 2-3), “ தோய்த்ததண் தயிர் வெண்ணெய் பாலுடன்

உண்டலும் உடன்றுய்ச்சி கண்டு, ஆர்த்த தோளுடை எம்பிரான் என்னரங்கனுக்கு அடியார்களாய், நாத்தழும்பெழ நாரணா வென்றழைத்து மெய்தழும்பத் தொழுது, ஏத்தி இன்புறும் தொண்டர்'' —(ஷை 2-4), "ஆதியந்த மனந்த மற்புதமான வானவர் தம்பிரான், பாதமா மலர்சூடும் பத்தியிலாத பாவிகள் உய்ந்திட, தீதில் நன்னெறி காட்டி எங்கும் திரிந்து அரங்கனெம் மானுக்கே, காதல் செய்தொண்டர்."—(ஷை 2-6), "மாலையுற்ற கடல் கிடந்தவன் வண்டுகிண்டு நறுந்துழாய், மாலையுற்றவரைப் பெருந் திரு மார்வனை மலர்க்கண்ணனை, மாலையுற்றெழுந்தாடிப் பாடித் திரிந்து அரங்கனெம்மானுக்கே, மாலையுற்றிடும் தொண்டர்"—(ஷை 2-8), "மொய்த்துக்கண் பனிசோர மொய்கள் சிலிர்ப்ப ஏங்கி யிளைத்து நின்று, எய்த்துக் கும்பிடு நட்டமிட்டெழுந்து ஆடிப்பாடி யிறைஞ்சி என், அத்தனச்சனரங்கனுக்கு அடியார்கள்"—(ஷை 2-9), "அல்லிமாமலர் மங்கைநாதன் அரங்கன் மெய்யடியார்கள்." —(ஷை 2-10), "அடியார்" என்கிற இத்தாலே த்ரீதீயாக்ஷரத்திலே சொன்ன ஜீவவர்க்கமும், ஜீவர்களுக்கு ஈசுவரனைக் காட்டில் வேறுபாடும், அந்யோந்யம் பிரிவும் காட்டப்படுகிறது. 'அடியார்' என்றால் ஸர்வஸாதாரணமாக சதுர்த்தியில் சொன்ன தாதர்த்யவான்களை யெல்லாம் காட்டிற்றேயாகிலும், இங்கு 'அடியார்' என்கிறது 'யோஹ்யேநம் புருஷம் வேத தேவோ அபிநதம் விது:' என்னும்படி அபரிச்சேத்ய மாஹாத்ம்யரான சேஷத்வஜ்ஞாநரஸிகரை."—(ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த முநிவாஹந போகம்.), "அருடரு மடியர்பான் மெய்யை வைத்துத், தெருடர நின்ற தெய்வநாயக"—(தேசிக மாலை. மும்மணிக்கோவை. 1), "திருமா லடியவர்க்கு மெய்யனுர்"—(ஷை. ஷை. 2), "நின்றனக் குநிகர் நின்னடி யடைவார்." —(ஷை. ஷை. 10); நால்வேத மெய்ப்பொருளா நாரணன்— "ஸர்வே வேதா யத்பதமாமநந்தி" (எல்லா வேதங்களும் எந்தப் பதத்தைப் பேசுகின்றனவோ), "வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" (எல்லா வேதங்களாலும் நானே அறியப்படுபவன்), நாராயண பரா வேதா:" (வேதங்களெல்லாம் நாராயணனைப் பேசுபவை), "உளன், சுடர்மிகு சுருதியுள்"—(திருவாய்மொழி 1-1-7), "மறையாய நால்வேதத்துள் நின்ற மலர்ச் சுடரே." —(திருவாய்மொழி 3-1-10), "ஓதுவாரோத் தெல்லாம் எவ்

வுலகத்து எவ்வெவையும் சாதுவாய் நின் புகழின் தகையல்லால் பிறிதில்லை "—(ஷை 3-1-6), "வீடாக்கும் பெற்றியறியாது மெய் வருத்திக், கூடாக்கி நின்றுண்டு கொண்டுழல்வீர்!—வீடாக்கும், மெய்ப்பொருள்தான் வேதமுதற் பொருள்தான் விண்ணவர்க்கு, நற்பொருள்தான் நாரா யணன்."—(இயற்பா நான்முகன் திருவந்தாதி. 13), "இனியறிந்தேன் ஈசர்க்கும் நான்முகற்குந் தெய்வம், இனியறிந்தேன் எம்பெருமான்! உன்னை—இனியறிந் தேன், காரணன் நீ கற்றவைநீ கற்பவைநீ நற்கிரிசை, நாரணன் நீ நன்கறிந்தேன் நான்."—(ஷை. ஷை. 96); சால - மிகவும்; இருளனைத்தும் ஈங்கு அகற்றியே—"பேரிருள் சீப்பன" —(சடகோபரந்தாதி. 2), "ஆதித்யராமதிவாகர அச்யுத பாநுக்களுக்குப் போகாத உள்ளிருள் நீங்கி, சோஷியாத பிறவிக்கடல் வற்றி, விகஸியாதபோதிற் கமலம் மலர்ந்தது வகுளபூஷண பாஸ்கரோதயத்திலே"—(ஆசார்யஹ்ருதயம்), ராமகிருஷ்ணாதி அவதாரங்கள் உலகத்தை நல்வழிப் படுத்துதலிற் பயன்பட்டவிதம் போதாதென்று அதன்பின் எம்பெருமான் பிரபஞ்சத்தவரைப் பிறவிப் பெருங்கடலினின்று கரையேற்றிக் கைப்பற்றுதற்கு ஆழ்வாராசார்யர்களை அவதரிப்பிப்பான் என்பது ஐதிகியம்; நாரணனும் சால, அருள்செய்த வேதாந்த வாரியரோடொவ்வான்—"அன்பர்க்கே யவதரிக்கு மாயனிற்க வருமறைகடமிழ்செய்தான் குளே கொண்டு, துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டுந் தொல்வழியே நல்வழிகடுணிவார் கட்கே,"—(தேசிக மாலே. அதிகார சங்கிரகம். 2 ஸ்ரீமதுரகவிகள் ஆழ்வார் திருவடி வாரத்திற்கு வரும்போது கண்ணன் இப்பூமியிலேதான் எழுந்தருளி யிருந்தான்; இதையறிந்தும் மதுரகவிகள் அவனைப் புறக்கணித்து, ஆழ்வாரையே சிறந்த கதியாகப் பற்றினதால் ஆயன் நிற்க, என்னப்பட்டது.) "நின்னிற் சிறந்த நின்றாளிணையவை"—(பரிபாடல் 4-62. வீடளிக்குங்கால் நின்னினுஞ் சிறந்த நின்தாளிணையை யுடையை.) "ஐந்தறிவார், இருளொன் றிலா வகை யெம்மனந் தேற வியம்பினரே,"—(தேசிகமாலே அதிகாரச்சுருக்கு 11), "மறைநூல் தந்த ஆதியர் அருளால் தேற இயம்பினர்"—(ஷை, ஷை, 12), "துணை ஆம்பரனை வரிக்கும் வகை அன்பர் அறிவித்தனர்"—(ஷை, ஷை, 18). "ஒவ்வான்" என்பதை நன்கு ஆராய்ந்து தெளிக.

(13) வினை - பாபம். "வினைகா ளுமக்கினி வேறோ ரிடந் தேட வேண்டும்"—(பிள்ளையந்தாதி, 7.), "மங்கிய வல்வினை நோய்காள்"—(பெரியாழ்வார் திருமொழி 5-2-4) "இருவினை பற்றறவோடும்"—(இராமாநுசநூற்றந்தாதி 43.); சகத்தில் - உலகத்தில்; சதிர் - பெருமை, சிறப்பாக; சதிராக - நேர்த்தியாக; வ்யாவ்ருத்தமாக. "எந்தை, எதிராசனின்னருளுக் கென்று மிலக்காகிச் சதிராக வாழ்ந்திடுவர் தாம்"—(உபதேச ரத்தினமாலை. 73); உய்விக்கும் - உஜ்ஜீவிப்பிக்கும்; அகற்றி உய்விக்கும்—"மயக்கும் இருவினை வல்லியில்பூண்டு மதிமயங்கித், துயக்கும் பிறவியில் தோன்றிய என்னை துயரகற்றி, உயக்கொண்டு நல்கும் இராமாநுச!"—(இராமாநுசநூற்றந்தாதி. 101); உத்தமர் - அனைவரினும் மேம்பட்டவர், "எங்கள் தூப்புல், மெய்த்தவன் உத்தமன்."—(பிள்ளையந்தாதி, 6.) "உத்தமன் - இத்தை, இவர்களுக்கு ஒரு உபகாரம் பண்ணின ுகவன்றிக்கே தன் பேறாக நினைத்திருக்கிறபடி; பிறரை ஹிம்ஸித்துத் தன் வயிற்றை வளர்க்க வேணுமென்று இருக்குமவன் - அதமன்; 'பிறரும் ஜீவிக்கவேணும், நாமும் ஜீவிக்க வேணும்' என்று இருக்குமவன் - மத்யமன்; தன்னையழிய மாறியாகிலும் பிறர் ஜீவிக்கவேணுமென்று இருக்குமவன் - உத்தமன். "பக்தாநாம்" ("நதேரூபம் நசாகாரோ நாயுதாநி நசாஸ்பதம், ததாபிபுருஷாகாரோ பக்தாநாம்த்வம் ப்ரகாசசே." தேவரீருடைய திவ்யாத்மஸ்வரூபமானது தேவரீருக்கு அன்று. தேவரீருடைய திவ்ய மங்கள விக்ரஹமும் தேவரீருக்கு அன்று. தேவரீருடைய திருவாழி முதலான ஆயுதங்களும் தேவரீருக்கு அன்று. ஆச்ரித விரோதி நிரஸநத்துக்காகவே. தேவரீருக்கு ஸ்தானமான பரமபதமும் தேவரீருக்கன்று. ஆனபோதிலும் அப்ராக்ருத திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவராய்க் கொண்டு தேவரீர் ஆச்ரிதர்களுக்காகவே ப்ரகாசிக்கிறீர்.—(ஜிதந்தாஸ் தோத்ரம், 5). "அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்" ("அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம் த்வாம் வாஸீதேஸலக்ஷ்மணாம், நதுப்ரதிஜ்ஞாம் ஸம்ச்ருத்யப்ராஹ்மணேப்யோவிசேஷத:"—(ஸ்ரீ மத்ராமாயணம். ஆரண்யகாண்டம். 10-17. பிராட்டியைப் பார்த்துச் சக்ரவர்த்தித் திருமகன் வார்த்தை.—ஸீதையே! நான் எல்லாவற்றுலும் ரக்ஷிக்கத்தக்க ப்ராணனையாகிலும் எனக்கு சரீர

பூதனை இலக்குவனையாகிலும், என் ஆத்மாவில் பாதியான உன்னையாகிலும் விடுவேன். பிரதிஜ்ஞையை ஒருவன் பொருட்டுச் செய்து பின்பு அதை நழுவவிடமாட்டேன். ப்ரஹ்மஜ்ஞாநிகள் விஷயத்திற் செய்யப்பட்ட ப்ரதிஜ்ஞையையோ விசேஷமாகக் கைவிடவேமாட்டேன்) என்றிருக்கை,"—(திருப்பாவை, 3, மூவாயிரப்படி.); வைம்மின் - வையுங்கள்; வைகல் - தினந்தோறும். "வைகலும் வெண்ணெய், கைகலந்து உண்டான், பொய்கலவாது என் மெய்கலந்தானே."—(திருவாய்மொழி 1-8-5). "மாக வைகுந்தத்து மகிழ்வெய்துவர் வைகலுமே"—(ஷ 5-10-11). "வைகல் திருவண்வண்டூர் வைகும் இராமனுக்கு"—(திருவாய்மொழி நூற்றந்தாதி. 51). "வைகலும் வைகல்வரக் கண்டு மஃதுணரார், வைகலும் வைகலை வைகுமென்—றின்புறுவர், வைகலும் வைகற்றம் வாழ்நாண் மேல்வைகுதல், வைகலை வைத்துணரா தார்."—(நாலடியார். அறன்வலியுறுத்தல். 9).

(14) மறையவர் - வேதமுணர்ந்த பிராமணர், வேதாந்தி; கலந்து - சேர்ந்து. "திருக்கலந்து சேரும் மார்ப!, தேவதேவ தேவனே!, இருக்கலந்த வேதநீ ஆகிநின்ற நின்மலா!, கருக்கலந்த காளமேக மேனியாய! நின்பெயர், உருக்கலந்தொழிவிலாது உரைக்குமாறு உரைசெயே."—(திருச்சந்தவிருத்தம் 103); நாமங் கருதினுல் - "துஞ்சும்போது அழைமின் துயர் வரில்நினைமின் துயரிலீர்சொல்லிலும் நன்றும், நஞ்சுதான் கண்டீர் நம்முடைவினைக்கு நாராயணா வென்னும்நாமம்." —(பெரிய திருமொழி 1-1-10); சாதுசனம்-சாதுக்கள்; சதிர்-க்ருதக்ருத்யம், பெருமை; "கேசவன்தமர் கீழ்மேலெம ரேழெழுபிறப்பும், மாசதிரிதுபெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா!" —(திருவாய்மொழி 7-1-1). "தமர்கள் கூட்ட நல்வினையை நாசஞ்செய்யுஞ் சதிர்மூர்த்தி தமர்கள்தமர்கள் தமர்களாம் சதிரே வாய்க்க தமியேற்கே."—(திருவாய்மொழி 8-10-9.); கைகலந்து - "இப்படி "தீவதங்க்ரி முத்திசிய" என்கிற ச்லோகத்திலே முமுக்ஷுவான அதிகாரியினுடைய அநந்ய தேவதாகத்வமும், அநந்ய ப்ரயோஜநத்வமும், இவன் ஸர்வஸ்வாமி திருவடிகளை உத்தேசித்துப் பண்ணுகிற அஞ்ஜலிக்குக் காலநியமமும், இத்தால் உபலக்ஷிதமான தேசநியமமும், வர்ணாச்ரமாதிகார நியமமும், ப்ரகாரநியமமும், ஆவ்ருத்திநியமமும் என்றவிவை

இல்லாத படியையும், இதினுடைய ஆசுகாரித்வமும், அசேஷ தோஷநிவர்த்த கத்வமும், அசேஷ கல்யாண காரணத்வமும், அநுபந்திரக்ஷகத்வமும், அக்ஷய பலப்ரதாநத்வமும், பலரூபஸ ஜாதீய பரிணதிமத்த்வமும் என்கிற ப்ரபாவங்களையும், இது அநந்யப்ரயோஜ நனைப்ரபத்தி நிஷ்டனுக்கும் ப்ரயோஜநாந்தர பரனுக்கும் நிற்கிற நிலைகளையும் அநுஸந்தித்தால், கைகளைக் கூட்டின அஞ்சலி ஒருவருக்கும் கைவிட வொண்ணாதபடி நிற்கும்.''-(அஞ்சலிவைபவம்). "கண்ணன் கழலிணைக் கூப்பிய கையின் பெருமைதனை, யெண்ணங் கடக்க வெழுனைத் துறைவ ரியம்புதலாற், றிண்ண மிதுவென்று தேறித் தெளிந்தபின் சின்மதியோர், பண்ணும் பணிதிகள் பாற்றிப் பழந்தொழில் பற்றினமே.''—(தேசிகமாலை. அமிருதாசுவாதினி. 24. கைகளைக் கூப்புவது அஞ்சலி. ஈதோர் அடையாளம். இது கண்டு பகவானுக்கு உண்டாகும் மகிழ்ச்சி உரைக்குந்தரமன்று. எம் பெருமானிடம் பரந்யாஸம் செய்தவன் தன்னைக் காத்துக்கொள்ள வேறொரு காரியமும் செய்யாதவாறு நிற்கும் நிலையையும் காட்டுவது இவ்வடையாளம்.) "ஐச்வர்யமக்ஷரகதிம் பரமம் பதம்வா கஸ்மைதஞ்சலிபரம் வஹதேவிதீர்ய, அஸ்மை நகிஞ்சிதுசிதம் க்ருதமித்யதாம்ப த்வம் லஜ்ஜஸே கதய கோயமுதாரபாவ:''—(ஸ்ரீகுணரத்நகோசம். 58. "ஹே அம்மா! கைகூப்புதல் என்கிற அஞ்சலியைச் செய்தவனுக்கு ஜாத்யாதி வைஷம்யமன்றி யில் இஹலோகைச்வர்யம், கைவல்யம், பரமபதம் இவைகளெல்லா வற்றையும் நீர் கொடுத்தாலும் "இவ்வளவு சுமைசுமந்தவனுக்கு இதுதானா நாம் கொடுக்கிறது. சரியானகூலி நாம் கொடுக்க வில்லையே'' என்று வெட்கப்படுகிறீர். இவ்வளவு ஔதார்யம் எங்கிருந்து உம்மால் அப்யஸிக்கப்பட்டதோ நீர்தான் சொல்ல வேணும்.'') "ஹஸ்தீச துக்க விஷதிக்த பலாநுபந்தி ந்யாப்ரஹ் மகீட மபராஹத ஸம்ப்ரயோகே, துஷ்கர்மஸஞ்சய வசாத்துரதி க்ருமேந: ப்ரதியஸ்த்ர மஞ்சலிரஸௌ தவநிக்ரஹாஸ்த்ரே.'' -(ஸ்ரீவரதராஜபஞ்சாசத். 30. "அத்தீச துக்க மாமால மார்ந்த பலமுற்ற தாகி யமர, எத்தாலுந் தாக்க வியலாததாகி யிறையாதி கீடம் வரையே, வித்தார மாமெம் வினையால் விலக்க வொண்ணாத தாகி யிலகு, மத்தாவு னிக்ர கத்தம் மெதிர்க்கு மம்பெங்க ளிவ்வஞ் சலியே.,''—"ஏ! ஹஸ்தீச! துக்கம் என்கிற விஷத்தால் பூசப்பட்ட

(ஸம்ஸார) பலத்துடன் (பலம் - பாணத்தின்முனை) சம்பந்தப் பட்டிருக்கிறதும், பிரமன் முதல் புழுவரையிலும் ஒருவராலும் எவ் விதமும் தடுக்க முடியாததாய் தன் கார்யத்தை முடித்துக் கொள் வதில் ஸாமர்த்யமுடையதும், விஸ்தாரமாக பாவங்களைச் செய் திருக்கும் அடியோங்களால் விலக்க முடியாததுமான உன் நிக்ர ஹாஸ்த்ரத்திற்கு ப்ரத்யஸ்த்ரம் அடியோங்களுடைய இந்த அஞ்சலியே.—தவிர வேறே யொன்றுமில்லை.")

(15) சதிர் - சாதுரியம், "சார்வது சதிரே"—(திருவாய் மொழி 2-10-1 "திருமலையைக் கிட்டுமிதுவே இவ்வாத்மாவுக்குச் சதிர்; அல்லாதவையெல்லாம் இளிம்பு. "கண்ணுக்கிலக்கான விஷயங்களைவிட்டு வேறே சிலவற்றைப் பெறுகைக்கு யத்நியா நின்றிகோளீ" என்று நினைத்திருக்குமதுவே இளிம்பு;" இதுவேசதிர்" - ஈடு.), "சதிரிளமடவார்"—(திருவாய்மொழி 2-10-2. "சதிரையுடையரார்யிருப்பர்கள் - பிறரை யகப்படுத்திக் கொள்ளுகைக்கீடான விரகையுடையராயிருப்பர்கள், செத்துக் காட்டவுங்கூட வல்லராயிருக்கை. சதிரையும் பருவத்தினிளமை யையுங்காட்டியாயிற்று அகப்படுத்துவது. கீழே "கிளரொளி யிளமை" என்றதே, அப்பருவங்கண்டவிடத்தே இழுத்துக் கொள்ளும் முதலைகளாயிற்று விஷயங்கள்," - ஈடு); மதி - புத்திதத்துவம், அறிவு. மதிநுட்பம் - இயற்கையாகிய நுண் ணறிவு, "மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம், யாவுள முன்னிற் பவை,"—(திருக்குறள், அமைச்சு. 6. "இயற்கை யாகிய நுண்ணறிவைச் செயற்கையாகிய நூலறிவோடு உடைய அமைச்சர்க்கு மிக்கநுட்பத்தையுடைய சூழ்ச்சிகளாய் முன்னிற் பனயாவையுள. மதிநுட்பமென்றது பின்மொழி நிலையல். அது தெய்வந்தரவேண்டுதலின் முற்கூறப்பட்டது.) மதியாவது மூவகைப்படும், அதமம் மத்யமம் உத்தமம் என்று. அவற்றில் அதமமதியாவது தேவதாந்தரங்களுக்கு சேஷமென்றிருக்கை. மத்யமமதியாவது எல்லாம் அவன் மூர்த்தியாகையால் எல்லாத் தெய்வங்களுக்கும் நாம் சேஷமென்றிருக்கை. உத்தமமதியாவது எம்பெருமானுக்கே சேஷமென்றிருக்கை. "துய்யமதி - பெற்ற மழிசைப்பிரான்"—(உபதேசரத்தினமாலை. 12. "என் மதிக்கு விண்ணெலாமுண்டோவிலை"—(நான்முகன் திருவந்தாதி 51.) என்று தாமும் ஆதரித்துப்பேசும்படியாயிறே யிருப்பது. மதிக்குத்

தூய்மையாவது - தேவதாந்தரங்கள்பக்கல் பரத்வபுத்தியாகிற மாலிந்யமற்றிருக்கை"); மானிடர் - மனிதப்பிறவியடைந்தோர்; அந்தோ - "யாவராணுகப்பெறுவார்? இனியந்தோ!"—(திருவாய்மொழி 9-8-9), "அந்தோ! அணுகப்பெறுநாள் என்று எப்போதும் சிந்தை கலங்கித்திருமால் என்று அழைப்பேன்." —(திருவாய்மொழி 9-8-10); மயங்குவதே-அறிவுகலங்குதலே; சதிர்த்து - "அன்பனுயடியேன் சதிர்த்தேனின்றே"—(கண்ணி நுண்சிறுத்தாம்பு, 5. "அபூர்ணமானபகவத் விஷயத்திலே அடியனுமவனுகாதே பூர்ணரான வாழ்வாருக்கு அடியேனுய் சதுரனுனேனென்கிருர். ஸ்திரீகளை விச்வஸித்து இளிம்பனை நான் ஆழ்வாரைப்பற்றி இன்று சதுரனுனேனென்றுமாம் - நஞ்ஜீயர்வியாக்கியாநம்." "சதிர்த்தேன் - ஈச்வரசேஷமான வாத்ம வஸ்துவை என்னதென்றிருக்கைக்கும் இதரவிஷயப்ரவணனுகைக்கும் மேற்பட சதிர்க்கேடில்லையிறே. அவற்றைவிட்டு பகவச்சேஷத்வத்தளவிலும் நில்லாதே ஆழ்வாரளவும் வருமவனும்படியான சதிரையுடையவனுனேன். ஆசார்யர்களை நம்பியென்கைக்கும், அவர்களழைத்தால் அடியேன் என்கைக்கும் ஹேது ச்ரீ மதுர கவிகள் வாஸனையாய்த்து. - நம்பிள்ளை ஈடு." "சதிர்த்தேன் - சதிரையுடையனுனேன். ஈச்வரசேஷமான வாத்ம வஸ்துவை என்ன தென்றிருக்கைக்கும் இதரவிஷயப்ராவண்யத்துக்கும் மேற்பட சதிர்க்கேடில்லையிறே. அவற்றைவிட்டு பகவத் விஷயத்தளவிலே நில்லாதே ஆழ்வாரளவும் வரும்படியான சதிரையுடையனுனேன், - பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம்," "சதிர்த்தேன் - சதிரனுனேன், "மோக்ஷயிஷ்யாமி" என்றவன் முழங்கைத்தண்ணீர் பார்த்திராதே" (பகவற்கீதை 18-66) ஆழ்வாருடையப்ரபாவத்தையிட்டு வென்றேன். (நம்பிக் கன்பனுய்சதிர்த்தேன்) - "மாற்பால் மனம் சுழிப்பமங்கையர் தோள்கைவிட்டு"—(மூன்ருந்திருவந்தாதி. 14) என்கிறபடியே ஆழ்வாருக்கன்பனுய் அந்யவிஷயங்களைவென்றேன், (நம்பிக்கன்பனுயடியேன்)—ஆத்மாத்மீயங்களிரண்டும் ஆழ்வாரதாய்த்து, அவர்தாம் "யானேநீ என்னுடைமையும் நீயே"—(திருவாய்மொழி 2-9-9) என்று தத்விஷயத்திலே ஸமர்ப்பித்தாப்போலே, (மடவாரையும் நம்பினநான் சதிர்த்தேன்)—அவர்கள் சதிரிளமடவாராகையாலே இளிம்புபட்டநான், ஆழ்வாரையண்டைகொண்டு

சதிரனுய்விட்டேன். - அழகிய மணவாளப்பெருமாள் நாய னார் வ்யாக்யானம்.)

(16) தாரணி - பூமி. "தசரதன் மதலையாய் வருதுந் தாரணி.-(இராமாவதாரம், பாலகாண்டம், திருவவதாரப் படலம். 22); பவம் - ஸம்ஸாரம். "நிறுத்தார் பவத்தி னெடுநா ளுழன்றமை கண்டு—(தேசிகமாலை. பரமபதசோபானம். 4. "ஆராய்ந்துபார்த்து நிறைந்த ஸம்ஸாரத்தில் வெகுகாலம் வருந்தியது கண்டு,"), "ஊனேறு பவக்குழியை வெறுத்து," —(தேசிகமாலை, பரமபதசோபானம், சிறப்புத்தனியன், "சரீரத்தையே வ்ருத்திசெய்கிற ஸம்ஸாரமாகிய படுகுழியை வெறுத்துத்தள்ளி,"); காதல் - பக்தி, ஆசை; புவி - பூமி, "நிறையிரும்புவியை முன்போனிலைபெற நிறுவிற்றன்றே." —(கூர்மபு, அந்தகா 6); புண்ணியர் - ஸ்ரீ தேசிகனை இடை விடாது அநுபவிக்கும் பாக்கியசாலிகள், தருமவான்கள், "புண்ணியம் புரிந்தோர்"—(இராமா. பால. நகரப். 5), "புண்ணிய!"—(பால. பரசுராமப், 40.)

(17) அந்தமில் பேரின்பவானுட்டு அமரர் - "வந்தவர் எதிர்கொள்ள மாமணி மண்டபத்து, அந்தமில்பேரின்பத்து அடியர்"—(திருவாய்மொழி 10-9-11); அந்தமில் பேரின்பம் - முடிவில்லாத நிரதிசயவின்பம்; அமரர் - "த்ரிபாத்விபூதி யோகத்தைப்பற்றச் சொல்லுகிறது. பரம ஸாம்யாபந்நராயிருக் கையாலே ஓலக்கமிருந்தாலாயிற்று, அவர்களுக்கும் அவனுக்கும் வாசியறியலாவது; பிராட்டி மாராலேயாதல், ஸ்ரீ கௌஸ்துபாதி களாலே யாதல் சேஷியென்று அறியுமத்தனை -(திருவாய்மொழி 1-1-1.) ஈடு," தேன்ஆரும் - தேன்நிரம்பிய; புகழ் - கீர்த்தி, "புகழும் நல் ஒருவன்"—(திருவாய்மொழி 3-4-1), "நாள் தோறும் பாடிலும் நின்புகழே பாடுவன்"—(முதல் திருவந் தாதி, 88), "புகழொன்று மால்"—(திருவாய்மொழி நூற்றந் தாதி. 24); நாதன் - எப்பொருட்குமிறைவன். "சங்குசக்கரம், அங்கையில்கொண்டான், எங்கும் தானுய, நங்கள்நாதனே." —(திருவாய்மொழி 1-8-9, "நங்கள் நாதனே - நம்மையெழுதிக் கொள்ளுகையே ப்ரயோஜநமாக. - ஈடு,). "நாதன் ஞாலங்கொள், பாதன் என்னம்மான், ஓதம்போல்கிளர், வேதநீரனே." —(திருவாய்மொழி 1-8-10); கவிஞர் சிங்கம் - "கச்சிநகர்

வந்துதித்த, பொய்கைப்பிரான் கவிஞர்போரேறு "—(முதல் திருவந்தாதி, தனியன், "கவிஞர் போரேறு என்கையாவது- கவிச்ரேஷ்டர் என்றபடி, முதலாழ்வார்கள் மூவரில் முதலானவராகையாலே 'ஆதிகவி' என்னும்படியான அதிசயத்தையுடையராயிருப்பர். படைத்தான் கவியாலும், பரகாலகவியாலும் 'செஞ்சொற்கவிகாள்' என்றும், 'செந்தமிழ் பாடுவார்' என்றும் கொண்டாடப்படுமவராய் நாட்டிற்கவிகளுக்கும் விலக்ஷணகவியாயிருப்பர். 'இது பொய்கையார் வாக்கிற்கண்டுகொள்க' என்றிறே தமிழ் கூறுவது. அந்த வேற்றமெல்லாவற்றையும் பற்ற 'கவிஞர் போரேறு' என்கிறது."); பா - பாட்டு, தூய்மை; கவிஞர் சிங்கத்தின்பா - "நொண்டிச்சிந்து, "சிங்கம் வருகிறதைப் பார் கவிவாதி சிங்கம் வருகிறதைப்பார். (சிங்). வேதாந்தாசார்ய ரென்று வேதியர்கள் விருதூத, வேதவொலி முழங்க, வாதியர்கள் பயந்தோட, (சிங்). ஸர்வார்த்தஸித்தி என்னும் கவசமணிந்து கொண்டு, சததூஷணி என்னும் கர்ஜனைகள் செய்துகொண்டு, (சிங்). பரமதபங்கமென்னும் பற்களின் ஒளிவீச, பரவாதியர்கள் பல முகமாய்ப் பயந்தோட (சிங்). ந்யாயஸித்தாஞ்ஜனம் ந்யாய பரிசுத்தி என்னும், ஜ்ஞானக்கண்கள் ஒளிவீச மௌனமாய் வாதியர்கள் நிற்க, (சிங்), ஐந்துரக்ஷை என்னும் அங்கை உகிரைக் கண்டு, அஞ்சியே வாதியர்கள் பஞ்சுபோல் பறந்தோட. (சிங்). திருவடிதொழுதேத்தும் நரஸிம்மதாஸன் தன்னை, அருள்மழை பொழிந்திட அன்புடனே நோக்கம்கொண்டு, (சிங்)"—(தமிழர் தொழுவேதாந்த வாசிரியன், திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியீடு 16), "பா வளருந்தமிழ்"—(தேசிக மாலை, பரமபதஸோபானம், 18.)

(18) இன்பம் பெறலாம் - "நாவினுல் நவிற்றின்ப மெய்தினேன்"—(கண்ணிநுண் சிறுத்தாம்பு. 2). "அடியையடைந்து உள்ளம்தேறி, ஈறிலின்பத்திருவெள்ளம் யான் மூழ்கினன்"—(திருவாய்மொழி 2-6-8.) "இன்பம் வளர"—(திருவாய்மொழி 2-7-9); இமையோர் - இமையவர் - கண்யாதவர், எப்பொழுதும் எம்பெருமானையே ஸேவித்துக் கொண்டிருப்பவர், அகநோக்காகிய ஞானக்கண் குவியாதவர், பரமபதத்தில் எம்பெருமானை ஸேவிப்பதற்குப் பிரதிபந்தகமொன்றுமில்லாமையாலே அங்கு அவனைக்கண்டு ஆநந்திப்

பதையே பொழுதுபோக்காகவுடைய விண்ணுலகத்து அடியார்கள். இமை - ஒளி, "மாசுஅற இமைக்கும் உறவினர்"—(திருமுருகாற்றுப்படை 128. எக்காலத்தும் நீராடுதலின் அழுக்கற விளங்கும் வடிவினையுடையவர் - நச்சினார்க்கினியருரை), தேவருடைய மேனிகள் எப்போதும் மழுங்காமல் மிக்க ஒளியைப் - பிரகாசத்தை உடைத்தாய் இருக்கும். "இருளிரியச்சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி"—(பெருமாள் திருமொழி 1-1), "விடுசுடர் இமைக்கும் பூணன்"—(சீவகசிந்தாமணி 213) "கதிர்பரந்து இமைக்கும் மேனியன்" (சீவகசிந்தாமணி 950), "மணிபரந்து இமைக்கும் மேனியன்"—(சீவகசிந்தாமணி 2266), "இமை" என்னும் உரிச்சொல் "ஒளி - பிரகாசம்" என்னும் பொருளைச் சுட்டுகின்றது. "இமையோர்தலைவா!"—(திருவிருத்தம். 1. "ஸ்வ ஸ்வாமி பாவஸம் பந்தம் ஒத்திருக்கச்செய்தே, அநாதி கர்மவசத்தாலே நாங்கள் இழந்துகிடக்க, நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணும்படி ஸர்வஸமனா ஸர்வ ஸ்வாமியானவனே". (உபகாரஸங்க்ரஹம்.); அம்புவி - அங்கண்மா ஞாலம்; இன்பம் - "நின்றவண் கீர்த்தியும் நீள்புனலும் நிறைவேங்கடப்பொற், குன்றமும் வைகுந்த நாடும் குலவிய பாற்கடலும், உன்தனக்கு எத்தனையின்பந்தரும் உன்னிணைமலர்த்தாள், என்தனக்கும் அது இராமாநுச! இவை ஈந்தருளே."—(இராமாநுச நூற்றந்தாதி. 76). "இடுமே இனிய சுவர்க்கத்தில்? இன்னும் நரகிலிட்டுச் சுடுமே? அவற்றைத் தொடர்தருதொல்லை சுழல் பிறப்பில், நடுமே? இனி நம் இராமாநுசன் நம்மை நம் வசத்தே விடுமே? சரணமென்றால் மனமே? நையல்மேவுதற்கே.",—(இராமாநுச நூற்றந்தாதி 98); 'இன்பம்...ஆளலாம்'- "நீதியனு போகநெறி நின்றுநெடு நாளதினி றந்து சகதண்டமுழுதுக், காதிபர்க ளாயரசு செய்துளநி னைத்ததுகி டைத்தருள்பொ றுத்துமுடிவிற் சோதிவடி வாயழிவில் முத்திபெறு வாரெனவு ரைத்தசுரு தித்தொகைகளே."—(இராமாவதாரம், காப்பு முதலியன. 19.); செம்பவளவாயான் - சிவந்த பவழம்போன்ற வாயையுடையவன். "செம்பவளத்திரள்வாய்"—(பெருமாள்திருமொழி. 10-8); செம்பவள...வேதாந்த தேசிகன் - "வடிவழ கார்ந்தவண் டுப்புல்வள்ளல்"—(பிள்ளையந்தாதி. 20); சிந்திப்பார்க்கு - "சிந்தையாலும் சொல்லா

லும் செய்கையினலும் தேவபிரானையே, தந்தைதாயென்றடைந்த வண்குருகூரவர் சடகோபன்"—(திருவாய்மொழி 6-5-11), "சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத்தன்மை தேவபிரானறியும், சிந்தையினல் செய்வதானறியாதனமாயங்கள் ஒன்றுமில்லை, சிந்தையினல் சொல்லினல் செய்கையால் நிலத்தேவர் குழுவணங்கும், சிந்தைமகிழ் திருவாறன்விளையுறை தீர்த்தனுக்கு அற்றபின்னே."—(திருவாய்மொழி 7-10-10), "நல்லோர், சீரினில் சென்று பணிந்தது என் ஆவியும் சிந்தையுமே."—(இராமாநுச நூற்றந்தாதி. 68), "சிந்தையிஞேடு கரணங்கள் யாவும் சிதைந்து முன்னுள், அந்த முற்றாழ்ந்தது கண்டு அவையென்தனக் கன்றருளால், தந்த அரங்கனும் தன்சரண் தந்திலன் தானது தந்து எந்தை இராமாநுசன் வந்தெடுத்தனன் இன்று என்னையே."—(இராமாநுச நூற்றந்தாதி. 69), - "பெயரினையே, புந்தியால் சிந்தியாது ஓதியுருவெண்ணும், அந்தியாலாம் பயனங்கென்?"—(முதல்திருவந்தாதி. 33), "மூப்புஉன்னைச், சிந்திப்பார்க்கில்லை திருமாலே."—(முதல்திருவந்தாதி, 75); இன்று - "திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் திகழும், அருக்கனணி நிறமும் கண்டேன் - செருக்கிளரும், பொன்னழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன், என்னழி வண்ணனன்பால் இன்று"—(மூன்றுந்திருவந்தாதி. 1), "இன்றே கழல் கண்டேன் ஏழ்பிறப்பும் யானறுத்தேன்" (ஷெ. 2), "அறியார் சமணர் அயர்த்தார் பவுத்தர், சிறியார் சிவப்பட்டார் செப்பில் - வெறியாய, மாயவனை மாலவனை மாதவனையேத்தாதார், ஈனவரேயாதலால் இன்று"—(நான்முகன் திருவந்தாதி. 6), "இன்றாக நாளையேயாக இனிச்சிறிதும், நின்றாக நின்னருள் என்பாலதே - நன்றாக, நான் உன்னையன்றியிலேன் கண்டாய் நாரணனே! நீ யென்னை யன்றியிலை."—(நான்முகன் திருவந்தாதி. 7), "ஒன்றே செய்யவும்வேண்டும் அதுவும் நன்றே செய்யவும் வேண்டும் அதுவும் இன்றே செய்யவும் வேண்டும்."

(19) நிகமம் - வேதம். "நிகமமெனிலொன்றுமற்றுநாடொறு"—(திருப்பு. 145. நியமமாகவுணர்தற்கருவி என்க.); நிகமாந்த தேசிகன் - வேதாந்த தேசிகன்; துயரம் - துன்பம் "இம்மூன்று - மருந்துயரங் காட்டு நெறி.—(திரிகடுகம். 5), துக்

கம். "துயரமேதரு துன்பவின்ப வினைகளாய்".—(திருவாய்மொழி. 3-6-8); எண்ணுவார் ஒன்று மடையாருறுதுயரம் - "விழுமிய அமரர் முனிவர் விழுங்கும் கன்னற் கனியினை, தொழுமின்தூய மனத்தராய் இறையும் நில்லா துயரங்களே." —(திருவாய்மொழி 3-6-7); குன்றெடுத்த மாயன் - "குன்ற மேந்திக் குளிர்மழை காத்தவன், அன்று ஞாலம் அளந்த பிரான் பரன், சென்று சேர் திருவேங்கடமாமலை, ஒன்றுமே தொழ நம் வினை ஓயுமே."—(திருவாய்மொழி 3-3-8.); மாயன் - அதிசயச் செய்கையன். "மாயன் என்னெஞ்சினுள்ளான் மற்றும் யவர்க்கும் அஃதே, காயமும் சீவனும் தானே காலும் எரியும் அவனே." —(திருவாய்மொழி 1-9-6); மலரடிக்கீழ்வாழ்ச்சி - "நின் தாளிணைக்கீழ், வாழ்ச்சி"— (திருவாய்மொழி 3-2-4.); வாழ்ச்சி - வாழ்க்கை, செல்வம், வாழ்தல், வாழ்நாள்; பெறுவர் - அடைவர்; மாயும் - மறையும்; மற்று - அசைநிலை, பிறிது, வினைமாற்று. இம்மூன்று பொருளையுந் தரும் இடைச்சொல்.

(20) மற்றொன்றுஞ் சேரா - "மற்றொருபேறுமதியாது". —(இராமாநுச நூற்றந்தாதி 57); "மற்றொன்றும் வேண்டா மனமே!"—(திருமாலைத்தனியன்); மனக்கவலை - மனத்தின் கணிகழுந் துன்பங்கள். "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந் தார்க் கல்லான், மனக்கவலை மாற்றலரிது."—(திருக்குறள் கடவுள் வாழ்த்து. 7. "தாள் சேராதார் பிறவிக் கேதுவாகிய காம வெகுளி மயக்கங்களை மாற்ற மாட்டாமையின், பிறந்து அவற்றான் வருந் துன்பங்களுள் அழுந்துவரென்பதாம்."); சித்தம் - மனம்; தெளியும் - தெளிவுபடும்; தூப்புனகர் வந்துதித்த தூயமனத்தர் - "தூப்புற் புனிதர்"—(பிள்ளையந்தாதி. 7); தூயமனத்தர் - "புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை, வாய்மையாற் காணப் படும்."—(திருக்குறள். வாய்மை. 8. "ஒருவனுக்கு உடம்பு தூய்தாந் தன்மை நீரானே யுண்டாம்; அதுபோல மனந்தூய்தாந்தன்மை வாய்மையானுண்டாம். காணப்படுவதுள்ளதாகலின், உண்டாமென்றுரைக்கப் பட்டது. உடம்பு தூய்தாதல் வாலாமை நீங்குதல். மனந்தூய்தாதல் மெய்யுணர்தல். புறந்தூய்மைக்கு நீரல்லது காரணமில் லாதாற்போல, அகந்தூய்மைக்கு வாய்மையல்லது காரணமில்லை யென்றவாறாயிற்று. இதனானே துறந்தார்க்கு இரண்டு தூய்மை

யும் வேண்டுமென்பதூஉம் பெற்றும்.") தூப்புற்கோமான் இல்லறத்துறவியிறே. மாந்தர்க்குப் பொதுவுணர்வு மனங் காரணமாகவுண்டாம். மனந்தூய ளுதலாவது விசேட வுணர்வு புலப்படுமாறு இயற்கையாய அறியாமையினீங்குதல். மனந்தூயராயினூர்க்கு மக்கட்பேறு நன்றும். நிலைபெற்ற வுயிர்கட்கு மனத்தது நன்மை செல்வத்தைக் கொடுக்கும். ஒருவற்கு மனநன்மையானே மறுமையின்பமுண்டாம். ஒருவன் தன் மனத்தொடு பொருந்த வாய்மையைச் சொல்வானாயின் அவன் தவமுந் தானமும் ஒருங்கு செய்வாரினுஞ் சிறப்புடையன். தத்தமக்கு இயலுந் திறத்தான் அறமாகிய நல்வினையை ஒழியாதே அஃதெய்துமிடத்தானெல்லாஞ் செய்க. இயலுந் திறமாவது இல்லறம் பொருளளவிற் கேற்பவும், துறவறம் யாக்கைநிலைக் கேற்பவுஞ் செய்தல். ஓவாமை இடைவிடாமை. எய்துமிடமாவன மனம் வாக்குக் காயமென்பன. அவற்றுற் செய்யும் அறங்களாவன முறையே நற்சிந்தையும் நற்சொல்லும் நற்செயலுமெனவிவை. இதனுல் அறஞ் செய்யுமாறு அறியலாம். அவ்வாற்றுன் அறஞ்செய்வான் தன் மனத்தின்கட் குற்றமுடையனல்லனுக; அனைத்தளவே அறமாவது; அஃதொழிந்த சொல்லும் வேடமும் அறமெனப்படா, ஆரவார நீர்மைய. குற்றம் தீயன சிந்தித்தல். பிறரறிதல்வேண்டிச் செய்கின்றனவாகலின், ஆகுல நீரவென்றுர். மனத்து மாசுடையனுய வழி அதன் வழியவாகிய மொழி மெய்களாற் செய்வன பயனிலவென்பதும் கூறுமலே விளங்கும்; சேர்ப்பரேல் - இடைவிடாது நினைப்பரேல்.

(21) தேசு - அழகு, ஒளி, கீர்த்தி, ஞாநம், பெருமை, விசிட்டம்; குணத்தன் - "உணர்ந்த மெய்ஞ்ஞானியர் யோகந் தொறும் திருவாய்மொழியின் மணந்தரு மின்னிசை மன்னுமிடந் தொறும் மாமலராள், புணர்ந்த பொன் மார்வன் பொருந்தும் பதி தொறும்புக்கு நிற்கும், குணந்திகழ் கொண்டல்."—(இராமாநுச நூற்றந்தாதி. 60); குணத்திற்கு உருகும் என் நெஞ்சு - "நையும் மனம் உன் குணங்களை யுன்னி"—(இராமாநுச நூற்றந்தாதி. 102.)

(22) நெஞ்சு - மநம். "அஞ்சன்மினும்மை நானவனி தோயுமு, னெஞ்ச வீட்டிடுவனிவ் விறைவன்றன்னையு, நெஞ்சுறத் தந்தைபானிறுத்தி நானுமவ், வஞ்சகப் பிறப்பினை மாற்றுவே

No. 113306

னென்றுள்."—(மகாபாரதம். ஆதிபருவம். குருகுலச் சருக்கம். 70)., "எம்பிரானைத் தொழாய் மடநெஞ்சமே!" (திருவாய்மொழி 1-10-3) "நெஞ்சமே! நல்லைநல்லை."—(ஷை. 1-10-4), "நெடியானே! என்று கிடக்கும் என் நெஞ்சமே" —(ஷை. 3-8-1) "நெஞ்சமே நீள்நகராக இருந்த என், தஞ்சனே! —(ஷை. 3-8-2), "நல்லை நெஞ்சே! நாம் தொழுதும் நம்முடை நம் பெருமான்"—(பெரிய திருமொழி 1-7-9); நெகிழ்ந்து - இளகி, உருகி. "சேவடிநோக்கி - விரும்பியுண்ணெகிழ"—(கூர்மபு. அரியய. 16); நினையாமல் - தியானிக்காமல்; நெஞ்சு நெகிழ்ந்து - "கருமமும் கருமபலனுமாகிய காரணன் தன்னை, திருமணிவண்ணனைச் செங்கண்மாலினைத் தேவபிரானை ஒருமை மனத்தினுள் வைத்து உள்ளம் குழைந்தெழுந்தாடி, பெருமையும் நாணும் தவிர்ந்து பிதற்றுமின் பேதைமை தீர்ந்தே."—(திருவாய்மொழி 3-5-10); அஞ்சும்படியாக - "அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ, தஞ்ச லறிவார் தொழில்."—(திருக்குறள். அறிவுடைமை. 8. "அஞ்சப்படுவதனை அஞ்சாமை பேதைமை யாம்; அவ்வஞ்சப்படுவதனை அஞ்சுதல் அறிவார் தொழிலாம். பாவமும் பழியும் கேடும் முதலாக அஞ்சப்படுவன பலவாயினும், சாதி பற்றி அஞ்சுவதென்றார். அஞ்சாமை எண்ணுது செய்து நிற்றல். அஞ்சுதல் எண்ணித் தவிர்தல்."), "அஞ்சுவ தோறு மறனே யொருவனை, வஞ்சிப்ப தோரு மவா.—(திருக்குறள் அவா வறுத்தல் 6. "மெய்யுணர்தலீருகிய காரணங்களெல்லா மெய்தி அவற்றுன் வீடெய்தற்பாலனுய ஒருவனை மறவிவழியாற் புகுந்து பின்னும் பிறப்பின்கண்ணே வீழ்த்துக் கெடுக்கவல்லது அவா. ஆகலான், அவ்வவாவை அஞ்சிக்காப்பதே துறவறமாவது. அநாதியாய்ப் போந்த அவா, ஒரோவழி வாய்மை வேண்டலை யொழிந்து பராக்காற்காவாறுயின் அஃதிடமாக அவனறியாமற் புகுந்து பழைய வியற்கையாய் நின்று பிறப்பினை யுண்டாக்குதலான், அதனை வஞ்சிப்பதென்றார். காத்தலாவது வாய்மை வேண்டலை இடைவிடாது பயின்று அது செய்யாமற் பரிகரித்தல்."), "அஞ்சும்"—(திருக்குறள். பகைமாட்சி 3. ஒருவன் அஞ்ச வேண்டாதவற்றிற்கு அஞ்சா நிற்கும்."); உள்ளடக்கி - "ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி, னெழுமையு மேமாப் புடைத்து,"—(திருக்குறள். அடக்கமுடைமை. 6. "ஆமை

போல ஒருவன் ஒரு பிறப்பின்கண் ஐம்பொறிகளையுமடக்க வல்லனுயின் அவ்வன்மை அவனுக்கு எழுபிறப்பின்கண்ணும் அரணுதலை யுடைத்து. ஆமை ஐந்துறுப்பினையும் இடர்புகுதாமல் அடக்குமாறுபோல இவனும் ஐம்பொறிகளையும் பாவம் புகுதாமலடக்கவேண்டுமென்பார், ஆமைபோலென்ருர்."), "உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான், வரனென்னும் வைப்பிற்கோர் வித்து."—(திருக்குறள். நீத்தார் பெருமை. 4. "திண்மையென்னுந் தோட்டியால் பொறிகளாகிய யானையைந்தனையும் தத்தம் புலன்கண்மேற் செல்லாமற் காப்பான் எல்லா நிலத்தினும் மிக்கதென்று சொல்லப்படும் வீட்டு நிலத்திற்கு ஓர் வித்தாம்."), "வாரிசுருக்கி மதக்களிறைந்தினையும், சேரிதிரியாமல் செந்நிறீஇ - கூரிய மெய்ஞ்ஞானத்தால் உணர்வார்காண் பரேமேலொருநாள், கைந்நாகம் காத்தான் கழல்."—(முதல் திருவந்தாதி. 47. பொய்கையார்மாலை. திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்க வெளியிடு. 24-பக்கம் 97-ல் இதன் விளக்கம் காண்க.), "அடல்வேண்டு மைந்தன்புலத்தை விடல்வேண்டும், வேண்டிய வெல்லா மொருங்கு."—(திருக்குறள் துறவு. 3. "வீடெய்துவார்க்குச் செவி முதலிய ஐம்பொறிகட்குரியவாய ஓசை முதலிய ஐம்புலன்களையும் கெடுத்தல் வேண்டும். கெடுக்குங்கால் அவற்றை நுகர்தற்பொருட்டுத் தாம் படைத்த பொருள் முழுதையும் ஒருங்கே விடுதல் வேண்டும். புலமென்றது அவற்றை நுகர்தலை. அது மனத்தைத் துன்பத்தானும் பாவத்தானுமன்றி வாராத பொருள்கண் மேலல்லது வீட்டு நெறியாகிய யோக ஞானங்களிற் செலுத்தாமையின், அதனை யடல்வேண்டுமென்றும், அஃது அப்பொருள்கண்மேற் செல்லின் அந்நுகர்ச்சி விறகுபெற்ற தழல்போல் முறுகுவதல்லது அடப்படாமையின், வேண்டிய வெல்லாமொருங்குவிடல் வேண்டுமென்றுங் கூறினுர்."); அன்பர் - அன்புடைய மஹான்கள், "அன்பிலாரெல்லாந் தமக்குரிய ரன்புடையா, ரென்பு முரியர் பிறர்க்கு."—(திருக்குறள். அன்புடைமை. 2. "அன்பிலாதார் பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப் பொருளானுந் தமக்குரியர்; அன்புடையார் அவற்ருனேயன்றித் தம்முடம்பானும் பிறர்க்குரியர். என்பு முரியராதல் "தன்னகம் புக்க குறுநடைப் புறவின் றபுதியஞ்சிச்சீரை புக்கோன்" முதலாயினுர்கட் காண்க."), "அன்பன்

தன்னை அடைந்தவர்கட்கெல்லாம், அன்பன் தென்குருகூர் நம்பிக்கு, அன்பனாய் "—(கண்ணிநுண் சிறுத்தாம்பு. 11).

(23) அன்பராயாதரிக்கும் - "ஐயன்கழற்கு அணியும் பரன்தாளன்றியாதரியா மெய்யன்"—(இராமாநுச நூற்றந்தாதி 13); ஆரியர்காள் - சிறந்த அனுஷ்டானமுள்ளவர்களே!; "ஓராண் வழியா யுபதேசித் தார்முன்னோர், ஏரா ரெதிராச ரின்னருளால் - பாருலகில், ஆசையுடை யோர்க்கெல்லா மாரியர் காள் கூறுமென்று, பேசி வரம்பறுத்தார் பின்."—(உபதேசரத்தின மாலை. 37. ஆரியர்காள்—ஆசார்யர்களே! 'கார்யங்கருண மார்யேண' என்கிறபடியே நீங்களும் கேவல க்ருபையாலே உபதேசித்துப் போருங்கோள்.), "அரிய, அருளிச் செயல் பொருளை ஆரியர்கட்கிப்போ, தருளிச் செயலாய்த் தறிந்து"—(உபதேசரத்தின மாலை. 46), "ஆரியர்காள், என்றனக்கு நாளும் இனிதாக நின்றது"—(ஷை 59); போற்றுமின் - போற்றுங்கள், துதியுங்கள், வணங்குங்கள், பேணுங்கள், மங்களா சாஸனஞ் செய்யுங்கள்; ஏத்தவே - துதிக்கவே; இன்பமிகு வேதியர்கள் ஏத்தவே அம்புவியில் வந்துதித்த வள்ளல் - "தாழ்வொன்றில்லா மறைதாழ்ந்து தலமுழுதும் கலியே, ஆள்கின்ற நாள் வந்து அளித்தவன்......வாழ்கின்ற வள்ளல்." —(இராமாநுச நூற்றந்தாதி. 16), "இராமாநுசன் புகழோதும் நல்லோர், மறையினைக்காத்து இந்த மண்ணகத்தே மன்னவைப்ப வரே."—(ஷை 9), "அடல் கொண்ட நேமியன் ஆருயிர் நாதன் அன்று ஆரணச் சொற், கடல் கொண்ட வொண்பொருள் கண்டளிப்ப பின்னும் காசினியோர், இடரின்கண் வீழ்ந்திடத் தானுமவ் வொண் பொருள் கொண்டு அவர்பின், படருங்குணன் எம் இராமா நுசன்."—(ஷை 36), "சுருதிகள் நான்கும் எல்லை, யில்லா அற நெறி யாவும் தெரிந்தவன் எண்ணருஞ்சீர், நல்லார் பரவும் இராமா நுசன்."—(ஷை 44), "புன்மையிலோர், பகரும் பெருமை இராமா நுச!—(ஷை 48), "ஆனது செம்மையறநெறி பொய்ம்மையறு சமயம், போனது பொன்றி இறந்தது வெங்கலி......இராமாநுசன் இத்தலத்துதித்தே."—(ஷை 49), "நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது தென்குருகை வள்ளல், வாட்டமிலா வண்தமிழ் மறை வாழ்ந்தது."—(ஷை 54), "தொகையிறந்த, பண்தரு வேதங்கள் பார்மேல் நிலவிடப் பார்த்தருளும் கொண்டலைமேவித்

தொழும் குடியாம் எங்கள் கோக்குலமே."—(ஷ 55), "நல்தவர் போற்றும் இராமாநுசனை."–(ஷ 57), "பேதையர் வேதப்பொருளி தென்று உன்னி பிரமம் நன்றென்று, ஓதி மற்றெல்லாவுயிரும் அஃதென்று உயிர்கள் மெய்விட்டு, ஆதிப்பரனேடொன்றுமென்று சொல்லுமவ்வல்லலெல்லாம், வாதில் வென்ருன், எம் இராமாநுசன் மெய்ம்மதிக்கடலே."—(ஷ 58), "எங்களிராமாநுசமுனி வேழம் மெய்ம்மை, கொண்ட நல்வேதக் கொழுந்தண்டமேந்திக் குவல யத்தே மண்டி வந்தேன்றது."—(ஷ 64), "மறையவர் தம் தாழ் வற்றது......இராமாநுசன் தந்த ஞானத்திலே"—(ஷ 65), "நல்லார் பரவும் இராமாநுசன்."—(ஷ 80), "ஓதிய வேதத்தின் உட்பொருளாய் அதனுச்சி மிக்க, சோதியை நாதனென அறியாது உழல்கின்ற தொண்டர், பேதைமை தீர்த்த இராமாநுசனை." —(ஷ 85), "எம் இராமாநுசன், மண்ணின் தலத்து உதித்து மறைநாலும் வளர்த்தனனே." —(ஷ 95), "நல்வேதியர்கள் தொழும் திருப்பாதனி ராமாநுசனை." —(ஷ 105); வள்ளல் எதிராசன் - "வள்ளல் இராமானுசனென்னும் மாமுனியே." —(இராமாநுச நூற்றந்தாதி. 16), "கொள்ளக் குறைவற்றி லங்கி கொழுந்து விட்டோங்கியவுன், வள்ளல் தனத்தினல் வல் வினையேன் மனம் நீ புகுந்தாய்."—(ஷ 27), "செறுகலியால், வருந்திய ஞாலத்தை வண்மையினுல் வந்தெடுத்தளித்த, அருந் தவன் எங்களிராமாநுசனை"—(ஷ 32), "வண்மை இராமானுச!" —(ஷ 71), "நிறைபுகழோருடனே, வைத்தனன் என்னை இராமானுசன் மிக்க வண்மை செய்தே."—(ஷ 72), "வண்மை யினுலும்..ஞானமுரைத்த இராமானுசனை"—(ஷ 73), "வண்மை இராமானுசற்கு"—(ஷ 77), "உன்னுடைய, கார்கொண்ட வண்மை இராமானுச!"—(ஷ 83), "உணர்வின்மிக்கோர், தெரியும் வண்கீர்த்தி இராமானுசன்"—(ஷ 87), "பின்னருளால் பெரும் பூதூர் வந்த வள்ளல்"—(தேசிகமாலை. அதிகார சங் கிரகம். 3); எதிராசன் வண்புகழே - "பழியைக் கடத்தும் இராமாநுசன் புகழ்பாடி"—(இராமாநுச நூற்றந்தாதி. 7), "இராமாநுசன் புகழோதும் நல்லோர்" (ஷ 9), "வஞ்சர்க்கரிய "இராமாநுசன் புகழன்றி"—(ஷ 28), "இராமாநுசன் புகழ் மெய்யுணர்ந்தோர்"—(ஷ 29), "இராமாநுசன் தன்நயப்புகழே" —(ஷ 34), "எம் இராமாநுசன் தொல்புகழ், சுடர்மிக்கெழுந்து"

—(ஷி 61); எதிராசன் வண்புகழே சிந்திக்கும் தூப்புன கர்ச்சிங்கம் - "மாறன் றுணையடிக்கீழ், வாழ்வை யுகக்கு மிராமா னுசமுனி வண்மைபோற்றுஞ், சீர்மைய னெங்கடுப் புற்பிள்ளை."—(பிள்ளையந்தாதி. 1. நம்மாழ்வாருடைய திருவடிகளையே உபாயமாகவும் பலனாகவும் நாடி நின்று பெருமை பெற்றவர் ஸ்ரீபாஷ்யகாரர். ஸ்ரீபாஷ்யம் முதலிய தம் ஸூக்திகளின் வாயிலாக உலகுக்கு க்ஷேமத்தைச் செய்தருளிய இந்த ஸ்ரீபாஷ்யகாரருடைய ஔதார்ய குணத்தை வாயாரப் புகழ்ந்து பேசுமவர் ஸ்ரீதேசிகன்.), "உத்தர வேதியுள் வந்துதித்த, செய்ய வண் மேவிய சீரரு ளாளரைச் சிந்தைசெய்யு, மெய்யவ னெந்தை யிராமா னுசனருண் மேவிவாழு, மைய னிலங்குதூப் புற்பிள்ளை."—(பிள்ளையந்தாதி. 4. பிரமனுடைய அசுவமேதயாக வேதியில் வந்து திருவவதரித்த பெருந்தேவி நாயகனான பேரருளாளனையே எப்பொழுதும் தொழும் பெருமையை உடையவரான ஸ்ரீபாஷ்யகாரருடைய கிருபையையே தமக்கு ஆதாரமாகக் கொண்டு வாழும் ஸ்ரீதேசிகன்.), "மாநிலத் தோதிய மாமறை மன்னிய நற்கலைக, ளானவை செப்பு மரும்பொரு ளத்தனை யேயருளுந், தூநெறி காட்டு மிராமா னுசமுனித் தோத்திரஞ்செய், யூனமி றூப்புலம் மான்."—(பிள்ளையந்தாதி. 3. ஸகல ஜீவராசிகளுக்கும் ஹிதமான அம்சங்களையே போதிக்கும் வேதங்கள், அவற்றைத் தழுவி நிற்கும் சாஸ்திரங்கள் ஆகிய இவற்றின் உண்மைப் பொருளை உலகுக்கு வெளியிட்டு ப்ரபத்தி மார்க்கத்தையும் காட்டிக் கொடுத்த ஆசார்யச்ரேஷ்டரான ஸ்ரீபாஷ்யகாரரின் புகழை வாய் வெருவிப் பேசி மகிழ்ந்து நிற்பவரான ஸ்ரீதேசிகன்.), "இராமா னுசமுனி யின்னுரை சேருந்தூப்புற், புனிதர்."—(பிள்ளையந்தாதி. 7. ஸ்ரீபாஷ்யகாரருடைய திவ்ய ஸூக்திகள் தம்முள்ளத்தில் குடி கொள்ளப் பெற்ற ஸ்ரீதேசிகன்.), "குணக்குல மோங்கு மிராமா னுசன் குணங் கூறுந்தூப்பு, லணுக்கன்."—(பிள்ளையந்தாதி. 3. அளவற்ற நற்குணங்கள் நிரம்பப் பெற்ற ஸ்ரீபாஷ்யகாரருடைய பெருமையையே பேசுமவரும் தூப்புலில் தோன்றிய பாகவத ச்ரேஷ்டருமான ஸ்ரீதேசிகன்.), "ஆரண நூல்வழிச் செவ்வை யழித்திடு மைதுகர்க்கோர், வாரண மாயவர் வாதக் கதலிகண் மாய்த்தபிரா, னேரணி கீர்த்தி யிராமா னுசமுனி யின்னுரைசேர், சீரணி சிந்தையி னேஞ்சிந்தி யோமினித் தீவினையே."—(தேசிக

மாலை. அதிகாரசங்கிரகம். 4. வேதாந்த சாஸ்த்ரத்தின் வழியின் நேர்மையைக் கெடுப்பவர்களான ஹைதுகர்களுக்கு நிகரற்ற யானையாய் வந்து அவர்களுடைய வாதமாகிய வாழை களை ஒழித்த உபகாரகரும், உலகுக்கே பொருந்திய அலங்கார மாய் உள்ள புகழையுடைய வருமான ஸ்ரீபாஷ்யகாரருடைய் இனிய ஸூக்திகளில் பொருந்திய சிறப்புப் பெற்ற மனத்தை யுடையோமானேம். இனிமேல் கொடிய கர்மங்களை மனத்தாலும் நினைக்கமாட்டோம்.), "அடற்புள் ளரசினு மந்தணர் மாட்டினு மின்னமுதக், கடற்பள்ளி தன்னினுங் காவிரி யுள்ள முகந்தபிரா, னிடைப்பிள்ளை யாகி யுரைத்த துரைக்கு மெதிவரனுர், மடைப் பள்ளி வந்த மணமெங்கள் வார்த்தையுண் மன்னியதே." —(தேசிகமாலை. பரமபத சோபானம். 1. வேத வேதாந்தங் களிற் காட்டிலும் இனிய அமுதமாகிய பிராட்டி அவதரித்த திருப் பாற்கடலாகிய படுக்கையிடத்திற் காட்டிலும், காவிரிக் கரையில் உள்ள திருவரங்கம் முதலிய திவ்விய தேசங்களில் மனம் மிக மகிழ்ந்து எழுந்தருளியுள்ள எம்பெருமான் இடைச்சிறுவனுய் அவதரித்து வெளியிட்ட பகவத்கீதையின் தாத்பர்யத்தையே தம் பாஷ்யங்களில் விளக்கியவரான யதிகளுள் சிறந்த ஸ்ரீபாஷ்யகார ருடைய திருமடைப்பள்ளி வழியாக வீசிய வாசனை யாம் வெளி யிடும் க்ரந்தங்களுள் மன்னியுள்ளது. ஸர்வேசுவரனை எம்பெரு மான் கோப குமாரனுகிக் கண்ணனுய்த் திருவவதரித்து உரைத்தது ஸ்ரீபகவற்கீதை. அதற்கு வியாக்கியானம் இட்டருளினர் ஸ்ரீபாஷ்ய காரர். கீதோப நிஷதாசார்யனை கண்ணன் அருளிச் செய்த தையே அருளிச்செய்யும் இராமாநுசன். அதாவது, இடைப்பிள்ளை யாகி யுரைத்ததையே இராமாநுசனுகி யுரைக்கும். எதிராச னுடைய திருவாக்கு கண்ணனுடைய கீதைக்கு ஒப்பு எனவு மொன்று. கண்ணபிரான் பலராமனுக்குத் தம்பியாக அவதரித்த தனுல் அவனை "ராமாநுஜன்" என்பர். ஸ்ரீபாஷ்யகாரரை இளைய பெருமாளுடைய அபராவதாரமென்று சொல்லுவது போலவே கண்ணபிரானுடைய அபராவதாரமென்றும் நிர்வஹிப் பர். இதனைப் "பெரும் பூதூர் வந்த வள்ளல்"—(வேதாந்த தீபிகை. 25-ஆம் ஸம்புடம். பக்கங்கள். 519-521. கண்ணனும் ஸ்ரீபாஷ்யகாரரும் என்ற பகுதி) என்ற எமது கட்டுரையில் பரக்கக் காண்கலாம். "உரைத்த துரைக்கும்"

என்ற சொல்லாற்றலால் இவரது ஒருமையே மொழியு நீர்மை நன்கு புலனுகும். "இப்படி ரஹஸ்யத்ரயத்தைப் பற்றின கீழு மேலுமுள்ள பாசுரங்களெல்லாம் வேதாந்தோதயந ஸம்ப்ரதாய மான மடப்பள்ளி வார்த்தையை ஆசார்யன் பக்கலிலே தாங்கேட் டருளினபடியே கிடாம்பி அப்புள்ளார் அடியேனைக் கிளியைப் பழக்குவிக்குமாபோல பழக்குவிக்க அவர் திருவுள்ளத்திலிரக்கமடி யாகப் பெருமாள் தெளிய ப்ரகாசிப்பித்து மறவாமற்காத்துப் பிழையறப் பேசுவித்த பாசுரங்கள்."—(ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம், ஆசார்யக்ருத்யாதிகாரம்.) ஸ்ரீபாஷ்யகாரருடைய திருமடைப்பள்ளியில் அந்தரங்க கைங்கர்யம் செய்து வந்து அவரிடமே ஸகலார்த்தங்களேயும் கற்றறிந்த கடாம்பியாச் சான் வழியாக நம் ஸம்ப்ரதாயம் தழைத்தோங்குவதுபற்றி "மடைப்பள்ளி வந்த மணம்" என்னப்பட்டது. உண் ணக்கடவ உயர்ந்த பண்டங்களேச் சேமித்துத் திரும டைப்பள்ளியில் வைத்து அனைவருக்கும் வழங்குமாறு போல கற்றறிந்து அநுபவிக்க வேண்டிய வேதாந்தத்தின் ரஹஸ்யார்த்தங்களே யெல்லாம் ஸ்ரீபாஷ்யகாரர் கடாம்பி யாச்சானுக்கு உபதேசித்து, அவர் முகமாய் உலகுக்கு வழங்கச் செய்தபடியால் அவருக்கு மடைப்பள்ளி யாச்சானெனத் திருநாமம் வந்தது என்றும் கூறுவர் பேரறிஞர்.), "அலர்ந்த வம்பு யத்தி ருந்து தேன ருந்தி யின்னக லல்கு லார சைந்த டைந்த நடைகொ ளாத தனமெனே, நலந்த விர்ந்த தாலதென்கொ ளுவின் வீறி ழந்ததா லுவ ணங்கு நாதர் தந்த நாவின் வீறி ழந்ததென், சலந்த விர்ந்து வாது செய்து சாடி மூண்ட மிண்டரைச் சரிவி லேனெ னக்க ஊைத்து ரைத்த வேதி ராசர்தம், வலந்த ருங்கை நாய ஞர்வ ளக்கிசைந்த கீர்த்தியால் வாரி பால தாம தென்று மாசில் வாழி வாழியே."—(தேசிகமாலே. அமிருதாசுவாதினி.

33. ஸ்ரீபாஷ்யகாரருடைய திருவடிகளில் ஈடுபட்ட இருவர் அவரது புகழைப்பற்றி ஸம்பாஷித்ததாக அமைந்துள்ளது இப்பாசுரம். ஒருவர் :—அன்னம் மலர்ந்த தாமரைப்பூவில் வீற்றிருந்து அதில் உள்ள தேனைப் பருகி அழகிய அகன்ற அல்குலேயுடைய ஸ்திரீகளின் அசைந்து நடக்கும் நடையைக்கொள்ளாமல் வருந்தி வாடிக்கிடப்பதன் காரணம் என்ன? மற்றவர் :—தன் பெரு மையை அது இழந்துவிட்டதால் தான் வருந்திக்கிடக்கின்றது.

ஒருவர் :—அது எவ்வாறு பெருமை இழந்தது? மற்றவர் :—தன் நாவிற்குள்ள பாலையும் நீரையும் பிரிக்கும் சக்தியை இழந்து விட்டதால் இவ்வாறு வருந்துகின்றது. ஒருவர் :—வாக்குக்குத் தேவதையாகிய நாமகள் கணவனை பிரமனால் அளிக்கப்பெற்ற நாவின் அந்தச் சக்தியை ஏன் இழந்தது? மற்றவர் :—கூறுகின்றேன் கேளும். அடிக்கடி வாதத்திற்கு வந்த முரடர்களான வாதிகளை குற்றமில்லாது வாதம் செய்து ஜயித்து, இன்னும் யாவர் வாதம்புரிய வந்தாலும் தளரமாட்டேன் என்று கர்ஜித்துக் கூறிய ஸ்ரீபாஷ்யகாரருடையதும் அடைந்தவர்களுக்குப் பலத்தைத் தரும் கையையுடைய எம்பெருமானுடைய சங்கம் போன்றதுமான கீர்த்தி உலகமெங்கும் பரவியதால் ஜலம் முழுதும் பாலாகிவிட்டதாம். ஜலம் முழுதுமே பாலாகிவிட்டதால் பாலிலிருந்து நீரைப் பிரிக்கும் சக்திக்கு உபயோகமே ஏற்படாமல் பயனற்றுப் போய்விட்டதை எண்ணி இந்த அன்னம் வருந்தி நிற்கின்றது. எக்காலத்திலும் குறைவுபடாத அந்தப் புகழ் வாழுக்கடவது.), "வாழி யருளாளர் வாழியணி யத்திகிரி, வாழி யெதிராசன் வாசகத்தோர்—வாழி, சரணு கதியெனுஞ் சார்வுடன் மற் றென்றை, யரணுகக் கொள்ளாதா ரன்பு."—(தேசிகமாலை. மெய்விரத நன்னிலத்து மேன்மை. 1), "ஆகாரத் திருவகையா நன்றுந் தீது மருமறைகொண் டெதிராச ரிவைமொழிந்தா, ராகாத வழிவிலக்கி யாக்குங் கண்ண னனைத்துலகும் வாழவிது சாற்றி வைத்தான்."—(தேசிகமாலை. ஆகார நியமம். 1); தூப்புனகர்ச்சிங்கம் - "ஏராரு மெதிராச ரருளினாலே யெதிர்ந்தவர்கள் சிங்கமென விங்கு வந்தோன், சீராரும் வேங்கடவன் றூப்புற் பிள்ளை."—(தேசிகமாலை. ஆகார நியமம். சிறப்புத்தனியன்.)

(24) சிங்கமுகத்தான் - "அழகியான்தானே அரியுருவன்" (நான்முகன் திருவந்தாதி. 22); தோத்திரியா - துதிக்காத.

(25) கடைந்தான் கடலை - "அமரர்கள் தொழுதெழ அலைகடல் கடைந்தவன்"—(திருவாய்மொழி 1-3-11); இடந்தான் பின்னேனமாப்பூமி - "இடந்தது பூமி"—(முதல் திருவந்தாதி. 39), "ஏனச் சொல்லாயினுமாக எறிதிரைவையம் முற்றும் ஏனத்துருவாய் இடந்த பிரான் இருங்கற்பகம் சேர்,

வானத்தவர்க்கும் அல்லாதவர்க்கும் மற்றெல்லாயவர்க்கும் ஞானப் பிரானையல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே.”—(திருவிருத்தம். 99), “கோலமலர்ப்பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ!, நீலவரை இரண்டு பிறைகவ்வி நிமிர்ந்ததொப்ப, கோலவராக மொன்ருய் நிலம் கோட்டிடைக்கொண்ட எந்தாய்!, நீலக்கடல் கடைந்தாய்! உன்னைப் பெற்று இனிப்போக்குவனே?”—(திருவாய்மொழி 10-10-7.); வருத்தம் - துன்பம்; வையத்து - பூமியில்; திருத்தம் - ஒழுங்கு. “திருத்தம் பெரியவர்” —(தேசிகமாலே, அமிருதாசுவாதினி 20. திருந்திய ஜ்ஞாநம் அநுஷ்டாநம் இவற்ருல் பெரிய மஹரிஷிகள்); தேவு - தெய்வம், தேவாந்தன்மை. “தேவிற் சிறந்த திருவள்ளுவர்”—(திருவள்ளுவமாலே 39.); தூப்புல் வாழ் - தூப்புல் மாநகரில் நித்ய வாஸஞ் செய்யும்.

(26) தேவர் - சுரர், விண்ணுலகத்து உள்ளவர், விளங்குபவர், “நஞ்சடவெழுதலு நடுங்கி நாண்மதிச், செஞ்சடைக் கடவுளை யடையுந் தேவர் போல்.”—(இராமாவதாரம், பாலகாண்டம், வேள்விப்படலம் 50.), “சிவன்றேவர்க்கிறைவன் போல”—(அபிதா. சிவரக. அபுத்திபூருவ. 4); முனிவர் - மநநசீலர், கடவுளை எப்பொழுதும் தியானஞ் செய்பவர், திரிகால ஞானமுடையவர்; பத்தர் - பக்தர், பாகவதர்; தேவர் முனிவர் களும் சித்தர்களும் பத்தர்களும் - “அந்தரத்தமரர்கள் கூட்டங்கள் இவையோ? அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ?”—(திருப்பள்ளியெழுச்சி. 7), “மாதவர் வானவர் சாரணர் இயக்கர் சித்தரும் மயங்கினர்”—(திருப்பள்ளியெழுச்சி. 9); பூவின் மழை பொழிந்து போற்றியே - புஷ்ப வருஷத்தைச் சொரிந்து துதித்து, “விற்கொண்ட மழைய ஞன் மேற், பூமழை பொழிந்து வாழ்த்தி விண்ணவர் போயினரே.” —(இராமாவதாரம். பாலகாண்டம். தாடகைவதைப் படலம். 76), “புனித மாதவ ராசியின் பூமழை பொழிந்தார்.” —(இராமாவதாரம். பாலகாண்டம். வேள்விப்படலம் 56); தாவி - கடந்து; உலகளந்தமால் - திரிவிக்கிரமன். இந்த இருபத்தாருவது பாசுரம் திரிவத்திகிரிப் பேரருளாளப் பெருமாள் திருமஞ்சனங்கண்டருளுங் காலத்து அநுஸந்திக்கப்பெறும் கட்டியத்தில் இன்றும் ஸேவிக்கப்பெறுவதாயின் இந்நூற்றந்தாதியின்

தொன்மையும் பெருமையும் ஆன்றோர்களாற் போற்றி வரப் பெற்றுள்ள பெற்றியும் கூறுமலே விளங்கும்.

(27) குரு - "குருப்யஸ்ததிகுருப்யச்ச நமோவாக மதீமஹே, வ்ருணீமஹேச தத்ராத்யௌ தம்பதீ ஜகதாம்பதீ."—(ஸ்ரீகுரு பரம்பராஸாரம். ஆசார்யர்களின் பொருட்டும், அவர்களின் ஆசார்யர்களின் பொருட்டும், நம: என்கிற வார்த்தையை அடிக்கடி சொல்லுகிறோம். அந்த ஆசார்யபரம்பரையில் எல்லாவற்றிற்கும் காரணமாகிய லோகங்களுக்கு சேஷிகளான பிராட்டியும் எம்பெருமானுமாகிய தம்பதிகளை ஆச்ரயிக்கிறோம்.), "தமிமம் ஸர்வ ஸம்பந்நம் ஆசார்யம் பிதரம் குரும்"—(பா. ஸ. 41-21. ஸஹா தேவன் வார்த்தை. அப்படிப்பட்ட இந்த அக்ரபூஜையை அடைவதற்குத் தகுந்த ஸர்வாகாரங்களினாலும் பூர்ணரான ப்ரும்ம வித்யையை உபதேசம் செய்தவராயும் தகப்பனாராயும் வேதாத்யயனம் செய்வித்தவராயும் இருக்கிற.), "மமாப்யகில லோகாநாம் குருர் நாராயணோ குரு:"—(வி. பு. 5-1-14. எல்லா லோகங்களுக்கும் ஆசார்யனாகிய நாராயணன் எனக்கும் ஆசார்யன்), "த்வமேவ பந்துச்ச குருஸ்த்வமேவ" (நீரே பந்துவும் நீரே ஆசார்யனும்.), "இவர்கள் தேஹேந்த்ரியாதி வ்யதிரிக்தனாய் நித்யனாயிருப்பானொரு ஆத்மாவுண்டு. இச்சேதநா சேதநங்களிரண்டுமொழிய இவற்றுக்கந்தர்யாமியாய் சேஷியாயிருப்பானொரு பரமாத்மாவுண்டு. இப்பரமாத்மாவையொழிய இவ்வாத்மாவுக்குத் தானும் பிறரும் ரக்ஷகராக மாட்டாரென்ற தத்வத்தையும், அநாதிகால மந்தாதியாக ஸம்ஸரித்துப் போந்தவடியேனுக்கு இனியொரு கர்ப்பவாஸாதிக்லேசம் வாராதபடி திருவடிகளைத் தந்து ரக்ஷித்தருளவேணுமென்று ஆசார்யன் ப்ரஸாதித்த குருபரம்பரா பூர்வக த்வயத்தாலே ஸ்ரீமானான நாராயணன் திருவடிகளை சரணமாகப் பற்றி ஆத்மாத்மீயங்களையும் அவற்றைப் பற்றவருஞ் சுமைகளையும் அங்கே ஸமர்ப்பிப்பதென்று ஹிதத்தையும், ஸதாசார்யன் காட்டிக்கொடுக்கக் கைக்கொண்ட வெம்பெருமானினி நம்மையொருபடிக்குங் கைவிடானென்கிற தேற்றத்தோடே யிங்கிருந்த காலம் அபவர்க்க பூர்வாங்கமான நிரபராதாநுகூல வ்ருத்தியோடே நடப்பதென்று உத்தரக்ருத்யத்தையும் ஸங்க்ரஹருசிகளுக்குச் சுருங்கவருளிச் செய்வார்கள்."—(ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம். ஆசார்ய க்ருத்யாதிகாரம்.), "தன் குருவின் றளிணைகள்

தன்னிலன் பொன்றில்லாதார்''—(உபதேசரத்தினமாலை. 60), "மருளாமிருளோட மத்தகத்துத் தன்றுளருளாலே வைத்தவராய், தனக்கு வகுத்த விஷயமான ஆசார்யனுடைய அங்க்ரி யுகளந் தன்னிலே யாய்த்து ப்ரபத்திபண்ண ப்ராப்தம். "அவன் றுளிணையே யுன்னுவதே சாலவுறும் என்றிறே இருப்பது." "ஞான மநுட்டான மிவை நன்றுகவேயுடைய, னை குருவை யடைந்தக்கால்''—(உபதேசரத்தினமாலை. 61. "அஜ்ஞாந நிவர்த்தகனுய் ஆசாரப்ரவர்த்தகனுயிருக்கிற ஆசார்யனை உபா யோபேய பாவேந தமேவ சரணம் வ்ரஜேத்" என்கிறபடியே தனக்கு ப்ராப்யனுகவும் ப்ராபகனுகவும் அத்யவஸித்து ஆச்ர யித்தக்கால். அடைந்தக்கால் - கெடுமரக்கலம் கரைசேர்ந்தாற் போலே அஞ்சினுன் புகலிடமான ஆசார்யாபிமாநத்தை அவன் ப்ரஸாதத்தாலே ப்ராபிக்கப் பெற்றுல், தங்களுக்காகச் சரண வரணம் பண்ணி ரக்ஷிக்குமவனைத் தாங்கள் சரணமாக அடைந் தக்கால்; குருவை யடைந்தக்கால் - குருரேவ பரம்ப்ரஹ்மம் என்றும், "பீதகவாடைப் பிரானுர் பிரமகுருவாகி வந்து" என்றும் சொல்லுகிறபடியே குருதரனை குருவை ஆச்ரயித்தக் கால். இப்படி அலப்யலாபமானது லபிக்கப்பெற்றுல், அந்த ஆச்ரயண ராஜகுல மாஹாத்ம்யத்தாலே ஸ்ரீய:பதியானவன், ஸ்வப்ராப்தியைப் பண்ணிக் கொடுக்கும்.); தாய் - அண்ணன் றேவி, ஊட்டுந்தாய், குருவின்றேவி, செவிலித்தாய், தன்றேவியை யீன்றுள், நற்றுய், பாராட்டுந்தாய்; தாயின் சகோதரிக்கும் பெயர் கூறுவர்; புனல் - நீர்; தொல் - பழமை; தூய்மறை - "தொல் வகை காட்டுந் துணிந்ததூ மறையே''—(தேசிகமாலை. மும்மணிக்கோவை. 4.), "தூமறையி னுள்ளம்.''—(ஷெ. ஷெ. 5.); கோப்பு - பலதிறப்பட்ட பாங்கு.

(28) கூறிமுடியாக்குணத்தன் - எண்பெருக்கந்நலத்தி னன், "திசையனைத்தும், ஏறுங்குணன்" (இராமாநுச நூற்றந்தாதி. 46.), "ஏரார்குணத்தெம்மிராமாநுசன்.'' —(ஷெ. 74.); நாறுதுழாயான் - "நாற்றத்துழாய்முடி நாரா யணனன்''—(திருப்பாவை. 10.) "எரிநகை யிடையிடு பிழைத்த நறுந்தார்ப், புரிமலர்த் துழாஅய் மேவன் மார்பினேய்''—(பரி பாடல் 13, 59-60. "நிறத்தால் எரியை யொத்த வெட்சிமலரை யிடையிட்டுக் கட்டின புரிமலர் நறுந்தார்த்துழாயை மேவலை

யுடைய மார்பினேய்.''), "நக்கலர் துழாஅய் நாறிணர்க் கண்ணியை.''—(பரிபாடல். 4, 58. "பிணிவிட்டலர்ந்த துழாயது நாறிணராற் றொடுத்த கண்ணியையுடையை.''), "நாறிணர்த் துழாயோ னல்கி னல்லதை, ஏறுத லெளிதோ வீறுபெறு துறக்கம், அரிதிற் பெறுதுறக்க மாலிருங் குன்றம், எளிதிற் பெறலுரிமை யேத்துகஞ் சிலம்ப''—(பரிபாடல். 15. 15-18. துழாய் மாலையை யுடைய திருமால் அருள் புரிந்தாலல்லாமல் துறக்கம் அடைதல் எளியதாகுமோ? அரிதிற் பெறுந்துறக்கத்தை எளிதிற்பெறச் செய்வதனால் திருமாலிருஞ்சோலை மலையை ஏத்தக்கடவேம்.); நண்ணும் - நெருங்கும், அடையும், பொருந்தும், எதிர்ப்படும், சேரும்; வீறு - உயர்ச்சி, சிறப்பு, பெருமை, பொலிவு, வெற்றி, வேறொன்றற்கில்லாவழகு, "அகிற், சேற ணிந்த முலைத்திரு மங்கைதன், வீற ணிந்தவன்.''—(இராமாவதாரம். பால காண்டம். ஆற்றுப்படலம். 2.); தூப்புல் அநந்தாரியனார் தொல்புகழ் சேர்மைந்தன் - "வேங்கடேச கண்டாம்சரான இவர் கலி 4370-க்கு மேல் சுக்ல ஞூ புரட்டாசி மீ ஞாயிற்றுக் கிழமை திருவோண நக்ஷத்திரம் சுக்ல ஏகாதசியில் ஸ்ரீ காஞ்சியில் அநந்தசூரிகளுக்குத் தோதாரம்மன் திருவயிற்றில் பன்னிரண்டு வருஷம் இருந்து அவதரித்தவர். இவரைப் புதன்கிழமையில் அவதரித்தவர் என்று சிலர் கூறுவர்.''—(அபிதாநசிந்தாமணி); "பிதா யஸ்யாநந்தஸூரி: புண்டரீகாக்ஷயஜ்வந:, பௌத்ரோ யஸ்தநய ஸ்தோதாரம்பாயாஸ்தஸ்ய மங்கலம்.''—(ஸ்ரீ நயினாராசார்யர் அருளிச்செய்த வேதாந்த தேசிகமங்களம். 3. அநந்தஸூரி என்கிற ஸ்வாமிக்கும் தோதாரம்மை யென்கிற தத்திவ்ய மஹிஷிக்கும் திருக்குமாரராயும் புண்டரீகாக்ஷஸோமயாஜிகளுக்குத் திருப்பேரனாராயும் திருவவதரித்தருளின ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் வாழ்க. யதிராஜ மாஹாநஸிகரான கிடாம்பியாச்சானுடைய ப்ரபௌத்ரியாய், ராமானுஜாசார்யர் என்பவருடைய பௌத்ரியாய், ஸ்ரீரங்கராஜப் பிள்ளான் என்கிற பத்மநாபாசார்யருடைய புத்ரியாய், வாதிஹம்ஸாம்புவாஹாசார்யர் என்கிற கிடாம்பியப் புள்ளாருடைய ஸஹோதரியுமான மங்கை தோதாரம்மை.); மைந்தனை - திருமகனை; மூப்பு - முதுமை; முன்னம் - முன்பே; பற்று - பிடி; அநந்தாரியர் - அநந்த சூரிகள், "புண்டரீகாக்ஷயஜ்வாவின் குமரர். தோதாரம்மன்

புருஷர்; திருவேங்கடமுடையான் கட்டளைப்படி திருவேங்கடஞ் சென்றிருக்கையில் சுவப்பனத்தில் திருவேங்கடமுடையான் பிராமணப் பிள்ளைபோல் வந்து திருமணிதர அதனை வாங்கி மனைவியிடந் தந்து அதனால் வேதாந்த தேசிகரைப் பெற்றவர்.—(அபிதானசிந்தாமணி.)

(29) பாவித்து - தியானித்து, அநுஸந்தித்து; நல்வடிவு - திவ்யதிருமேனி, "வடிவழ கார்ந்த வண் துப்புல்வள் ளல்" -(பிள்ளையந்தாதி. 20), திருமேனிவருணனை - வெண்பா - "வேண்டுவீ ரன்புபெறு வீரேப வக்கடலைத், தாண்டுவீர் ஞானத் தனிவிளக்கைத்—தூண்டுவீர், தானிவர்ண னையுரைக்குஞ் சாந்த வேதாந்தகுரு, மேனிவர்ண னையுரைக்க வே. தரு - இராகம் - முகாரி - தாளம் - சாப்பு - கண்ணிகள்.. (1) கதிர்வீசு மரவிபோற் காந்தி சேருந்திவ்ய கள விக்கிரக வேதாந்த - தேசிகரே, புதுமலர்ச்சியாகிய செந்தாமரை மலரைப் போன்ற பொன்னடியுள்ள—தேசிகரே. (2) களங்கமில்லாமல் மனோகரங் களாகிய திருக்கணைக்கால்களு மிலங்குந்—தேசிகரே, விளங்கி நிற்கிற நல்ல முழந்தாளுடைய திரு வேங்கடநாதார்ய—தேசிகரே. (3) திருவரையுமதிற் சார்த்தின திருப்பரிவட்டச் சேர்த்தியாலும் விளங்குந்—தேசிகரே, திருநாபிக்கமலமுந் திருவுத்தரியச் சேர்வும் சிறந்து விளங்குமெங்கள்—தேசிகரே. (4) மருவுமுந்நூலுந் திருமணிவடத்துடன் கூடும் மார்பினணிதுலங்குந்—தேசிகரே, திருவாழி திருச்சங்குந்திகழ் புஜங்களுடனே செழிப்பான நிகமாந்த—தேசிகரே. (5) பவித்ரங்களையணிந்த பங்கஜகர தீர்க்க பாணியுகம் பொருந்துந்—தேசிகரே, குவித்தே திருமந்திரமுங் கெண்டதுவய முச்சரிக் குந்திருப்பவளவாய்த்—தேசிகரே, (6) கிருபைக்குள்ளாய்க் கடாக்ஷிக்கிற திருக்கண்களென்றே கீர்த்திக்கவே வளருந்—தேசிகரே, உருகித் தற்காலங்கண்டு சார்த்தின பனிரண்டு ஊர்த்துவ புண்ட்ரங்களேற்குந்—தேசிகரே. (7) மண்டலந்தனிற் புகழ்கொண்ட கண்டாவதாரர் மவுலிமூடத் துலங்குந்—தேசிகரே, தொண்டர்கள் மனத்தன்பு கொண்டிடுஞ் சர்வ தந்திர சுவதந்தராரியரெங்கள்—தேசிகரே. கட்டளைக்கலித் துறை. வடத்தேறு கண்டுயில் கொண்டான் மடுவின் மணி யரவின், படத்தேறு தாண்மிதித்தாடியங் கோவியர் பாரமுலைக், குடத்தேறு மார்பர்தங் கண்டாவதாரரைக் கூப்புகையர்,

கடத்தேறுவார்கள் கவிவாதிசிங்கவரைக் கண்டவரே.''—(ஸ்ரீமத் வேதாந்த தேசிகவைபவப்பிரகாசிகைக் கீர்த்தனை.); நிற்றியேல் - நிலைநிற்பாயாகில்; முயன்று - வருந்தி; முத்தி - "இது சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என நான்கு. இவற்றுள் முதற்கூறிய மூன்றும் பதமுத்தி, மற்றது உண்மை முத்தி. இவற்றுள் சாலோகம் அவ்வுலகமடைந்து நித்தியசுகம் அநுபவித்தல். சாமீபம் இறைவனுக்கு அருகிலிருந்து சேவித்திருத்தல். சாரூபம் அவனது உருவத்தையடைந்து ஆநந்தமடைதல். சாயுச்சியம் அவ்விறைவனுடன் கலந்துங் கலவாமலும் பரமானந்தமனுபவித்தல். இவற்றை முறையே சரியை, கிரியை, யோகம், ஞானத்தில் முதிர்ச்சிபெற்றவர் அடைவர்"–(அபிதான சிந்தாமணி), மோக்ஷம். "முத்திக்கு அருள்சூட"—(தேசிக மாலை. அமிருதரஞ்சனி 3. மோக்ஷத்திற்குக் காரணமான பகவானுடைய திருவையைப் பெறுவதற்கு.) "பத்தருக்கு நிஷித்தகாம்ய கர்த்ருத்வம் ஸம்ஸாரஹேது. தத்வஞ்ஞாநமூல நிவ்ருத்தி தர்மகர்த்ருத்வம் மோக்ஷஹேது. பத்தன் முன்பு பண்ணின பந்தங்களுக்கெல்லாம் தன்னதிகாராநுகுணமாக ப்ரபத்யாதி ப்ராயச்சித்தம் பண்ணி, மேலபராதம் பண்ணுதே ப்ராப்தகர்மத்தையும் ஒருவழியாலே கழித்து முக்தனும்."–(தத்வ பதவி), "முத்திதரும், மூல மறையின் முடிசேர் முகில்வண்ணன்" —(தேசிகமாலை, அமிருதரஞ்சனி. 7), "முத்தி வழி தந்தார்"—(தேசிகமாலை. அமிருதரஞ்சனி. 9), "முத்தி தரு மெதிராசர் பொன்னடி."—(தேசிகமாலை, பிரபந்த சாரம். 16).

(30) முகுந்தன் - விட்டுணு. "முகுந்தன் வாசகங் கேட்பதன் முன்னமே"—(பாரத படையெழுச்சி. 2); துணிவு - ஆண்மை, தெளிவு, நிச்சயம், மநங்கலங்காமை; சோதி - தேஜஸ்வி. "திருமழிசை வந்தசோதி"—(தேசிகமாலை, அதிகாரசங்கிரகம். 1); பணிவோம் - வணங்குவோம்; பயம் - அச்சம்; போம் - போகும்.

(31) மாயும் - அழியும்; பாவம் - அக்கிரமம், விலக்கப்பட்ட தீவினை வடிவமாய்த் துக்கசாதநமாயிருப்பது; வீயும் - கெடும்; துயர் - கிலேசம், துன்பம்.

(32) வந்தித்து - வணங்கி, வழிபாடு செய்து; புந்தி -

மனம், புத்தி, அறிவு; தெள்ளியார் - அறிவுடையார், "திரு வேறு தெள்ளியராதலும் வேறு"—(திருக்குறள். ஊழ். 4. ஆதலாற் செல்வமுடையராதலும் வேறு. அறிவுடையராதலும் வேறு.) "உள்ளுவார் உள்ளத் துறையுமேயும்பர்கோன், தெள்ளியார் "உள்ளுவாருள்ளத்து உளன் கண்டாய்."—(மூன்றுந் திருவந்தாதி. 40), "உள்ளுதலுள்ளி யுரைத்த லுரைத்ததனைத் தெள்ளுத லன்றே செயற்பால."—(திருவள்ளுவ மாலை. 17. ஆதலால், நாம் இந்நூலைக் குறித்துச் செயக்கடவன நாம் இதன் பொருளைச் சிந்தித்துக் கொள்ளுதலும், சிந்தித்துப் பிறர்க்கு அதனைச் சொல்லுதலும், பிறராலே சொல்லப்பட்ட அதனைத் தெளிதலும் அன்றே. உள்ளுதல் எனவே கேட்டலும், தெளிதலெனவே அவ்வாறொழுகலும் அடங்கின.), "தெள்ளியார் பலர் கைதொழும் தேவனுர், வள்ளல் மாலிருஞ்சோலை மணாளனுர்."—(தையொருதிங்கட்பாமாலை. 4-1); தேசு - ஞானம், பெருமை.

(33) வாசம் - வாசனை; காசினி - பூமி. "காசினிமேல் வாதியரை வென்ற ரங்கர் கதியாக வாழ்ந்தருளு மெதிராசா"—(தேசிகமாலை. பிரபந்தசாரம். 14), "கையில் கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரிலும் உன்தன், மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான்"—(இராமாநுசநூற்றந்தாதி. 104); கருதும் - ஆசைப்படும். "கண்கருதிடுங்காண"—(இராமாநுசநூற்றந்தாதி. 102).

(34) கண்ணவரையே...எண்ணும் - "வாழ்த்துகவாய் காண்க கண் கேட்க செவி...தொல்லைமால்தன்னை, வழாவண் கைகூப்பி மதித்து."—(நான்முகன் திருவந்தாதி. 11); காதல் - பக்தி.

(35) அன்பாலவனை - "அன்பு ஆழியானை அணுகென்னும் நா அவன்தன், பண்பாழித்தோள் பரவியேத் தென்னும் - முன் பூழி, காணுனைக் காணென்னும் கண் செவிகேளென்னும், பூணாரம் பூண்டான் புகழ்."—(முதல் திருவந்தாதி. 72); அடைந்து மடநெஞ்சேயன்பாலவனை - "என்றும் விடலாழி நெஞ்சமே! வேண்டினேன் கண்டாய், அடலாழி கொண்டான் மாட்டு அன்பு."—(முதல் திருவந்தாதி. 71); மாயவன் - "மாயவனுந்தம் முனும்"—(திணைமாலை நூற்றைம்பது. 58).

(36) வாழ்ச்சி - வாழ்நாள்; இதுநெஞ்சே - "வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சும்."—(தேவார. திருநாவுக். தனித் திருத். 7); காழ்ச்சி - வன்மை; தாழ்ச்சி - தவறு, தாழ்வு, நீட்டிப்பு; சிரீதரன் - லக்ஷ்மியைத் திருமார்பில் தரிப்பவன். "617. ஸ்ரீதர: - மணிக்கு ஒளிபோலவும், மலருக்கு மணம் போலவும், மதிக்கு நிலவுபோலவும், அமுதத்துக்குச் சுவை போலவும் இயற்கையாகவுள்ள ஸம்பந்தத்தினுல் எப்பொழுதும் லக்ஷ்மியைச் சேர்ந்திருப்பவர். 'யோக்யனுயிருப்பவன் கீர்த்தியை எப்படி விடமுடியாதோ அப்படித்தான் இந்தப் பிராட்டியை விட முடியாது' (நஹிஹாதுமியம் சக்யா கீர்த்தி ராதமவதோயதா) என்பது ஸ்ரீமத் ராமாயணம்."—(ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாம பாஷ்யம்.)

(37) திருவத்தியூர் வரதன் - "உலகேத்தும் ஆழியான் அத்தியூரான்"–(இரண்டாந்திருவந்தாதி 95), "அத்தியூரான் புள்ளையூர் வான்"—(இரண்டாந்திருவந்தாதி. 96), "அத்தி கிரி, யிடமுடைய வருளாளர்."—(தேசிகமாலை, அடைக்கலப் பத்து. 2); சீர்அத்திகிரித்திருமால்"—(தேசிகமாலை. அருத்த பஞ்சகம். 3); "திருமால் திருவத்தி நகரானே."–(ஷை. ஷை. 6); வரதன் கழலிணையை...மன்னன் - "உத்தரவேதியுள் வந்துதித்த செய்யவண் மேவிய சீரருளாளரைச் சிந்தை செய்யும் மெய்யவன் எந்தை தூப்புற்பிள்ளை"—(பிள்ளையந்தாதி. 4).

(38) நானிலம் - நால்வகை நிலம்; அவை: குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தலென்பன. இப்பகுப்புப்பற்றிப் பூமிக்கு நானிலம் எனப்பெயர் கூறுவர்; ஈது - இது.

(39) இதம் - ஹிதம், மோக்ஷத்திற்கு ஸாதநமாக அநுட் டிக்கப் பெறும் உபாயம்; பேரின்பமிகுவீடு - அந்தமில் பேரின்ப மளிக்கும் மோக்ஷம்.

(40) உற்று - அடைந்து, பொருந்தி; சேவடி - சிவந்த திருப்பாதம்; உய்வது - உஜ்ஜீவிப்பது; பற்று - ஆசை, கதி, உரிமை, உபாயம்; பவக்கடல் - ஸம்ஸாரஸாகரம், பிறவிப் பெருங்கடல்; தொத்து - ஸம்பந்தம், தொடர்ச்சி, சார்பு; விழுப்பொருள் - சிறந்தநுண்பொருள்; வேதவிழுப் பொரு ளாம் மாதவன் - "வேதாந்தவிழுப்பொருளில், மேலிருந்த

விளக்கை.''—(பெரியாழ்வார் திருமொழி 4-3-11); மாதவன் - திருமால், 73. ஸ்ரீதேவியின்கணவர். திருமகள் தம்மைவிட்டு என்றும் அகலாமல் இருக்கப்பெற்றவர். ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் என்னும் ஆறு குணங்களும் சேர்ந்து உருவெடுத்திருப்பவளும், பகவானுடைய எல்லாச்சக்திகளுக்கும் தலைமையாக உலகங்களை நடத்தும் பராசக்தியும், பகவானுடைய மற்றச்சக்திகளை நடத்திக்கொண்டு சராசரங்கள் அடங்கிய உலக மனைத்தையும் வ்யாபித்திருப்பதனால் அனந்தையென்று சொல்லப் படுகிறவளும், தயாமூர்த்தியுமாகிய திருமகளுக்கும் ஸ்வாமி யென்பது. 169. 'மா' எனப்படும் பரமாத்ம ஞானத்தைக் கொடுப்பவர்; மௌனம், த்யானம், யோகம் இம்மூன்றும் பொருந் தினவர். 741. லக்ஷ்மிக்குக்கணவர். உலகங்களுக்கு லக்ஷ்மி தாயும் தாம் தந்தையுமாக உறவாயிருப்பவர் என்பது; மதுவென் னும் யாதவகுலத்தில் அவதரித்தவர்; மௌனம், தியானம், யோகம் இம்மூன்றும் உடையவர். 'பாரதனே'! மௌனத்தினு லும் தியானத்தினுலும் யோகத்தினுலும் நான் மாதவனுகிறேன்' என்று ஸ்ரீ மஹாபாரதம், உத்தியோகபர்வத்தில் சொல்லப்படு கிறது.''—(ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்); நண்ணு வரே - கிட்டுவர், பொருந்துவர்; மன் - அசைநிலை, திடம், மிகுதி.

(41) மன்னு - திடமான, நிலைபெற்ற, பொருந்தின; மாகுரு - மாதேசிகன்; உன்னி - நினைத்து; துன்னு - பொருந்திய, மிகுதியான; நண்ணுதார் - அடையாதவர், ஒன் றிக்கலவாதவர்; வம்பு - வஞ்சனை, வீம்பு. "வய்யம்சுமப்பதே வம்பு.''

(42) வம்பு - வாசனை; வம்பார்குழன்மாதர் - "வம்பு லாம்கூந்தல் மனைவி''—(பெரியதிருமொழி 1-6-4); வான் - வலிமையான; கலவி - கலத்தல்; காதல் - ஆசை.

(43) இன்றுமுதல் - "இன்று முதலாக என் நெஞ்சே.'' —(முதல் திருவந்தாதி. 40); இறை - பரமாத்மா; சேண் - உயர்ச்சி, தூரம்; வித்தகம் - ஆச்சர்யமான குணசேஷ்டிதம்; உதித்த - அவதரித்த; ஏற்றம் - தகுதியாயிருக்குந்தன்மை.

(44) செறிந்த - பொருந்திய, நிறைந்த; சிந்தை - மனம், நினைவு; செவ்வே - நேர்மையாக; காப்பு - பாதுகாவல், ரக்ஷை.

(45) கதி - உபாயம், பலன், வழி, ப்ரகாரம்; பிரான் - ஸ்வாமி, உபகாரி; நாத்தழும்ப - " நாத்தழும்ப நான்முகனும் ஈசனுமாய் முறையால், ஏத்த"—(பெரியதிருமொழி. 1-7-8.)

(46) உறுதி - உறைப்பு; வென்றிமிகும் வேதமுடித் தேசிகன் - " வென்றிப் புகழ்த்திரு வேங்கடநாத னெனுங் குரு" —(பிள்ளையந்தாதி. 5); தீதில்மதி - " தூய்மதி"—(உபதேசரத்தின மாலை. 12); மதி - ஞானம், புத்தி. " உன்னைப் பிறரறியார் என்மதிக்கு, விண்ணெல்லாமுண்டோவிலை ?"—(நான்முகன் திருவந்தாதி. 51.)

(47) சாதனம் - உபாயம்; சாதுவராய் - " சாதுவராய்ப் போதுமின்கள்"—(நான்முகன் திருவந்தாதி. 68); மண்மிசைவாழ்வானவர் - பூசுரர்; மற்று - அசைநிலை.

(48) மற்றொன்றும் யான்வேண்டேன் - " மற்றொன்றும் வேண்டாமனமே"— (திருமாலைத்தனியன்); தொண்டு - அடிமை; குணங்களுக்கே யெஞ்ஞான்றுந், தொண்டானேன் - " உயர்வறவுயர் நலமுடையவன் துயரறுசுடரடிதொழுதெழப்பாராயென்கிறார்; " அஹமஸ்யாவரோப்ராதா குணைர் தாஸ்யமுபாகத:" என்னுமாபோலே: இளையபெருமாளை 'நீர் இவர்க்கு என்னுவீர்?' என்ன, 'பெருமாளும் ஒருபடி நினைத் திருப்பர், நானும் ஒருபடி நினைத்திருப்பேன்' என்றார்; 'அவர் நினைத்திருக்கும்படியென்? நீர் நினைத்திருக்கும்படியென்?' என்ன, 'அவர் தம்பின்பிறந்தவனென்றிருப்பார்; நான் அவர் குணங்களுக்குத் தோற்று அடியேனாயிருப்பன்' என்றாரிறே; அப்படியே இவரும் 'உயர்வறவுயர்நல முடையவன் துயரறு சுடரடி தொழுதெழப்பாராய் நெஞ்சே!' என்கிறார். இவர் தாம் முற்படக்குணங்களிலே யிழிவானென்? என்னில்; தாம் அகப்பட்டதுறை அதுவாகையாலே இவரைக் குணத்தையிட்டாயிற்று வணங்குவித்தது."—(திருவாய்மொழி 1-1-1. ஈடு.)

(49) வினை - கருமம்; தீரும் - ஒழியும், நீங்கும்; துயரம் - துன்பம்; வேமே - எரிந்து போம்; மனை - வீடு, இரண்டாயிரத்து நானூறு குழிகொண்ட நிலமென்றும், பதினாறரைக்காற் குழிகொண்ட நிலமென்றுங் கூறுவர்; மனைவி - நாயகி; மனை மனைவியாசை - மண்ணாசை, பெண்ணாசை; மாளும் - இறந்து

படும்; தனையுணர்ந்து - சேதநன் நித்யனும் அணுவாய் ஜ்ஞாநாநந்தவிலக்ஷணனும் ஜ்ஞாநகுணகனும் ஏகரூபனும் பகவத் சேஷபூதனுயிருக்கும் இயல்பை நன்கு தெளிந்து; செங்கமல நாபன் - பத்மநாபன், பற்பநாபன், விஷ்ணு. "பத்மநாப:- 48. பிரம்மதேவருக்கும் பிறப்பிடமான காலரூபமான கமலத்தை நாபியில் உடையவர்; 'பகவானுடைய நாபியில் புஷ்கரமுண்டாகிறது; புஷ்கரம், புண்டரீகம், பத்மம், சக்ரம் என்னப்படுவது காலம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 198. நாபியில் பத்மத்தையுடையவர்; மேற்சொல்லிய பொன்மயமான கமலத்தை நாபியில் உடையவர். 'யோகநித்ரை செய்துகொண்டிருந்த அந்தப் பகவானுடைய நாபியில் பூமிரூபமான சிறந்ததும் அற்புதமுமான அஷ்டதளபத்மம் ஒருகால் ஸங்கல்பமாத்திரத்தினுல் உண்டாயிற்று. மேருமலையானது அதன் பொன்மயமான காயென்று சொல்லப்படுகின்றது' என்று கூறப்பட்டுள்ளது. 347. பதுமம்போன்ற நாபியை உடையவர்—(ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாஷ்யம்.); சிந்தை - மனம்.

(50) காப்பர் - ரக்ஷிப்பர்; மாசில் மனம் - குற்றமற்ற மனம், "மாசில் மனந்தெளி முனிவர்"—(தேசிக மாலை. அமிருதாசுவாதினி 27.)

(51) மாதவத்தோர் - சரணகதி நிஷ்டர்; தேசு - அழகு, ஒளி, கீர்த்தி, ஞானம், பெருமை; மாசின்மதி - "துய்யமதி" (உபதேசரத்தின மாலை 12); மதி - நுண்ணறிவு.

(52) வாழ்வு - சீவிதம்; வம்மின் - வாரீர்; ஆரணம் - வேதம்.

(53) மணி - இரத்தினம்; ஏய்ந்தசீர் - "ஏற்கும் பெரும் புகழ்வான வரீசன்" என்னுமாபோலே அங்குத்தைக்கு அநுரூபமாய்ப் பொருந்தியிருக்கிற அனந்த கல்யாண குணங்களையுடைய; ஓர்ந்து - ஆராய்ந்தறிந்து.

(54) அறத்தை......வீட்டை - "இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமி லின்பத்தழிவில் வீடும் நெறியறிந்து எய்துதற்குரிய மாந்தர்க்கு உறுதியென உயர்ந்தோரா னெடுக்கப்பட்ட பொருள் நான்கு: அவை அறம், பொருள், இன்பம், வீடென்பன. அவற்றுள் வீடென்பது சிந்தையு மொழியுஞ்

செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது இலக்கணவகையாற் கூறப்படாமையின், நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமே யாம்''; பாட்டினை-பெருமையை; பாடுமவர் - அநுபவிப்பவர்.

(55) தவம் - பிரபத்தி, "தஸ்மாந்ந்யாஸ மேஷாம்தபஸா மதிரிக் தமாஹு: ''—(தைத்ரீயம் 2.); தவநெறி - யோகமார்க்கம், - பக்தி மார்க்கம். "சார்வேதவநெறி''—(திருவாய்மொழி 10-6-9.) "தவமாவது மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கல் முதலியன''; மேயம் - ஞேயம், அறியத்தக்கது; மேவுவர் - பொருந்துவர்.

(56) ஏதம் - குற்றம், துன்பம்; செங்கமல......கண்ணிமையும் - "கட்டுரைக்கில் தாமரை நின் கண்பாதம் கையொவ்வா, சுட்டுரைத்த நன்பொன் உன் திருமேனி யொளி யொவ்வாது''—(திருவாய்மொழி 3-1-2); கைகனிபோற் காண - "கையில் கனி யென்னவே''—(இராமாநுச நூற்றந்தாதி. 103.)

(57) கூடில் - பெற்றால், சேர்ந்தால்; துலங்கு - பிரகாசித்து; வான் - பரமபதம்.

(58) வான் - ஆகாசம்; மதி - சந்திரன்; கதிரவன் - சூரியன்; அழல் - ஓமாக்னி; சோதியவை மூன்று - முச்சுடர், மூன்று சுடர். அவை அக்கிநி, ஆதித்தன், சந்திரன் என்பர்.

(59) வானவர்கோன்-அமரர்கட்கதிபதி; வன்படைகள் ஐந்து - பஞ்சாயுதங்கள்: சங்கு, சக்கரம், தண்டு, வாள், வில் என்பன, "அடையார் கமலத்து அலர்மகள் கேள்வன் கையாழி யென்னும், படையோடு நாந்தகமும் படர் தண்டும் ஒண் சார்ங்க வில்லும், புடையார்புரி சங்கமும் இந்தப் பூதலங் காப்பதற்கென்று, இடையே இராமாநுச முனியாயின இந்நிலத்தே,''—(இராமாநுச நூற்றந்தாதி 33.)

(60) தானருவாய் நின்ற பிரான் - "உளனெனில் உளன் அவனுருவம் இவ்வுருவுகள், உளனலனெனில் அவனருவம் இவ்வருவுகள், உளனென இலனென இவை குணமுடைமையில், உளனிரு தகைமையொடு ஒழிவிலன் பரந்தே.''—(திருவாய்மொழி 1-1-9); வேங்கடக்கோன் வாதி சிங்கராயினான் - "அன்றிவ் வுலகினை யாக்கி யரும்பொரு ளூல் விரித்து, நின்று

தன் னீள்புகழ் வேங்கட மாமலை மேவியும்பின், வென்றிப் புகழ்த் திரு வேங்கட நாத னெனுங் குருவாய், நின்று நிகழ்ந்துமண் மேனின்ற நோய்க டவிர்த்தனனே.''—(பிள்ளையந்தாதி 5.); வண்ணம் - விதம்; பாங்கு - அழகு, உரிமை, உறவு, நற் குணம், யோக்கியம்.

(61) வன்னெஞ்சம் - கடினமான நெஞ்சு, வலியநெஞ்சு; எதிராசர் - ஸ்ரீபாஷ்யகாரர். "மாறன் றுணையடிக்கீழ், வாழ்வை யுகக்கு மிராமா நுசமுனி வண்மை போற்றுஞ், சீர்மைய னெங் கடுப் புற்பிள்ளை.''—(பிள்ளையந்தாதி 1.); கொந்து-கொத்து; கொந்தலரும் சோலை - "கொந்தலர் பொழில் குருகூர்'' —(திருவாய்மொழி 10-9-11); தூயவன் - பரிசுத்தன்; காண் பன் - பார்ப்பேன்.

(62) கண்களால் - கண்கள் படைத்த பயனைக் கண்டு; கண்ணி - மாலை, "கண்ணி பறித்து''—(பரிபாடல். 7-45), "கண்ணியோச்சித் தடுமாறுவார்''—(பரிபாடல் 9-45), "கல்ல காரப் பூவாற் கண்ணி தொடுத்தாளை''—(பரிபாடல் 11-103), "அடிமே லடிமே லொதுங்கித் தொடிமுன்கைக், காரிகை யாகத் தன் கண்ணி திருத்தினள்.''—(பரிபாடல் 12. 90-91), "கண்ணி எனதுயிர்''—(திருவாய்மொழி 4-3-5), "கண்ணியர் தாரர் கமழ் நறுங் கோதையர்''—(பரிபாடல் 16. 50.); ஒளி - ப்ரகாசம், ஜ்ஞானம்; அண்டர் - நித்திய சூரிகள், இடையர்; "அண்டர் கோன் - இடையர்க்கு நியாம்யனாய் நின்ற எளிமை குணமாம்படி அண்டாதிபதியான ப்ரஹ்மா முதலாக மற்றும் அண்டாந்தர்வர்த் திகளான தேவாதிகளை யெல்லாம் ஸ்வாதீநராக்கி வைத்திருக்கிற ஸ்வாமித்வ ஸ்வாதந்த்ரியாதிகளை யுடையவன். "கண்ணிக் குறுங் கயிற்றால் கட்டுண்டானாகிலும் எண்ணற்கு அரியன் இமையோர்க்கு''—(பெரிய திருமொழி 11-5-5) என்கிறராகவு மாம்.''—(முநிவாஹந போகம்); "அடியார்க்கு - 'அடியார்' என்கிற இத்தாலே த்ருதீயாக்ஷரத்திலே சொன்ன ஜீவவர்க்கமும், ஜீவர்களுக்கு ஈச்வரனைக் காட்டில் வேறுபாடும், அந்யோந்யம் பிரிவும் காட்டப்படுகிறது. 'அடியார்' என்றால் ஸர்வ ஸாதாரண மாக சதுர்த்தியில் சொன்ன தாதர்த்யவான்களை யெல்லாம் காட் டிற்றேயாகிலும், இங்கு 'அடியார்' என்கிறது 'யோ ஹ்யேநம் புருஷம் வேத தேவோ அபி நதம் விது:'' என்னும்படி

அபரிச்சேத்ய மாஹாத்மியரான சேஷத்வ ஜ்ஞாநரஸிகரை." —(முநிவாஹந போகம்); அருள் புரியும் கொண்டலார் - "கொண்ட லாரருண் மாரிபொ ழிந்திடக் கொண்ட தோருயர் கூர்மதி யன்பினுற், பண்டை நான்மறை மௌலிப டிந்தயான் பாரின் மெய்விர தக்கவி பாடினேன்.—(தேசிகமாலை. மெய் விரத நன்னிலத்து மேன்மை); கொண்டல் - மேகம், ஜங்க மஸ்தாவரங்களெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி ஜலஸ்தல விபாகமற காருண்யரஸத்தை வர்ஷிப்பதொரு காளமேகத்தின் ஸ்வபாவத்தை உடையவர்."; அருள்புரியும் - "நின்குண மெதிர்கொண்டோ றறங்கொண்டோ ரல்லதை மன்குண முடையோர் மாதவர் வணங் கியோ ரல்லதை, செறுதீ நெஞ்சத்துச் சின நீடி னேரும், சேரா வறத்துச் சீரிலோரும், அழிதவப் படிவத் தயரி யோரும், மறு பிறப்பில்லெனு மடவோருஞ் சேரார், நின்னிழ லன்னே ரல்ல தின்னேர், சேர்வா ராதலின் யாஅ மிரப்பவை, பொருளும் பொன் னும் போகமுமல்ல நின்பால், அருளு மன்பு மறனு மூன்றும், உருளிணர்க் கடம்பி னெலிதா ரோ யே."—(பரிபாடல் 5. 71-81. "நினது குணத்தை ஏற்றுக் கொண்டோராகிய அறங் கொண்டோரல்லது வீடு பெறுங்குண முடையோராகிய மாதவரால் வணங்கப்பட்டோரல்லது உயிர்களைச் செறுகின்ற தீய நெஞ்சத் துச் சினத்தையுடையோரும் அறத்தின்கட் சேராத புகழில்லோ ரும் கூடா வொழுக்கத்தால் அழிந்த தவ விரதத்தையுடையோரும் இப்பிறப்பின் நுகர்ச்சியேயுள்ளது மறு பிறப்பு இல்லை யென்னும் மடவோருமாகிய இவர் நின் தாள் நிழலை அடையார்; அத்தன்மை யோரல்லது இத்தன்மையோர் நின் தாள்நிழலை அடைவர்; ஆதலான், நின்னையாம் இரப்பவை நுகரப்படும் பொருள்களும் அவற்றை உளவாக்கும் பொன்னும் அவ்விரண்டானும் நுகரும் நுகர்ச்சியுமல்ல; எமக்கு வீடு பயக்கும் நின்னருளும் அதனை உண்டாக்க நின்னிடத்து யாம் செய்யும் அன்பும் அவ்விரண் டானும் வரும் அறனுமாகிய இம்மூன்றுமே."); கோ - ஸ்வாமி.

(63) கோவைக் கனியொத்தவாய் - கோவைப் பழம் போல சிவந்த அதரம். "கோவை வாயாள் பொருட்டு"—(திரு வாய்மொழி 4-3-1.); விழி - கண்; தாவம் - வெப்பம்; தவிர்க்கும் - தீர்க்கும், போக்கடிக்கும்; முறுவல் - சிரிப்பு, மெல்ல நகுதல்; தீர் - நீங்கிய; மெய் - உண்மையான, சத்திய

மான ; ஒளி - ஒழுங்கு ; சாதுவர் - சாதுக்கள் ; தளர்ந்து - சோர்ந்து.

(64) தரித்து - தாங்கி ; கிளர்த்தி - எழுச்சி ; கேடில் - அழிவில்லாத, "கேடில் விழுச்செல்வங் கல்வி"—(திருக்குறள். கல்வி. 10. அழிவில்லாத சீரிய செல்வமாவது கல்வி.); அம்மான் - ஸ்வாமி, "அம்மான் ஆழிப்பிரான்"—(திருவாய்மொழி. 5-1-7. "ஸர்வேச்வரன். கையும் திருவாழியுமான அழகை நித்ய ஸூரிகளுக்குக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கும் அவன்"- ஈடு); பெரியான் - மேம்பாடுடையவன் ; பேசு - சொல்லு.

(65) கூச்சம் - பயம் ; பேரின்பம் - மோக்ஷம் ; வேண்டினீர் - விரும்புவோர் ; பாசம் - அவிச்சை ; நிமலன் - குற்றமற்றவன், சுத்தன், "விரையார்பொழில் வேங்கடவன் - பரிமளம் வடிவு கொண்டாற்போல இருக்கிற திருச்சோலைகளையுடைய திருமலையிலே "கண்ணுவான் என்றும் மண்ணோர் விண்ணோர்க்கு" —(திருவாய்மொழி 1-8-3) என்கிறபடியே எல்லாருக்கும் ஆச்ரயிக்கவும் அநுபவிக்குமாம்படி "இருள் தருமா ஞாலத்துள்" —(திருவாய்மொழி 10-6-1) குன்றத்திட்ட விளக்காய் நிற்கிறவன்" ; நாடோறும் - பிரதிதினமும்.

(66) தொல் - அநாதியான ; தொல்வினை - பழவினை ; மேல் - அதிகமாக ; வருவது - வளர்வது ; ஆற்றாத - தணிதலில்லாத ; ஆர்வம் - அன்பு ; பற்றுகை - அன்பு செய்தல், பிடித்துக்கொள்ளுதல், பொருந்துதல், மனத்துக்கொள்ளுதல் ; வீடு - மோக்கம். "சென்றுங்கின்பதுன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால், அன்றே அப்போதே வீடு அதுவே வீடு வீடாமே." —(திருவாய்மொழி. 8-8-6) ; சிறப்பு - மேன்மை. "எனக்கே கண்ணனையான் கொள்சிறப்பே"—(திருவாய்மொழி 2-9-4 சிறப்பே - பலகால்வேண்டா, ஒருகால் அமையும் ; அது தன்னிலும், திருவாசலைத் திருக்காப்புக்கொண்டு ஒருவர் அறியாதபடி சிறப்பாகச் செய்யவும் அமையும். சிறப்பாகிறது - ஏற்றம். அதாவது - புருஷார்த்தம். ஸ்வரூபாநுரூபமான புருஷார்த்தத்தைக் கொண்டருளவேணு மென்றபடி. சிறப்பாவது - முக்தியும், ஸம்பத்தும், நன்றியும். இவற்றில், நான் உன் பக்கல் கொள்ளும் மோக்ஷம் உனக்கேயாக எனைக்கொள்ளுமதுவே. உன்பக்கல் நான்

கொள்ளும் ஸம்பத்தென்னவுமாம். நன்றியென்னவுமாம்.''-ஈடு. "சிறப்பில் வீடு சுவர்க்க நரகம்"—(திருவாய்மொழி 2-9-5. "சிறப்பில் வீடு - நித்ய ஸம்ஸாரியாய்ப் போந்தவன் நித்ய ஸூரிகளுடைய அநுபவத்தைப் பெற்று அநுபவிக்கக் கடவதாகச் சொல்லுகிற மோக்ஷம்.''-ஈடு.)

(67) சேமம் - ரக்ஷகம், க்ஷேமம், இன்பம்; மறப்பின்றி - மறவாதே. "மறப்பொன்றின்றி யென்று மகிழ்வனே"—(திருவாய்மொழி 2-9-5 "மறப்பொன்றின்றி - இத்தலையிலுள்ளதெல்லாம் மறக்கலாம், அத்தலையிலுள்ளதெல்லாம் நழுவவொண்ணாது. என்றும் மகிழ்வேனே - மகிழ்ச்சியென்றும், அநுபவமென்றும் - பர்யாயம். அநுபவிப்பேனென்கிறார். ஆக, இத்தாலே - ஸ்வரூபமும் வெளியிடுகிறார். பெருமானென்கையாலே - தம்முடைய சேஷத்வமும், மறப்பொன்றின்றி - என் கையாலே - ஜ்ஞாத்ருத்வமும், என்றுமென்கையாலே - நித்யத்வமும், மகிழ்வு என் கையாலே - போக்த்ருத்வமும்.''-ஈடு); மாமறையோன் பாதத்தைச், சென்னிதனிற் சேர்ப்பதுவே செவ்வி - "தூப்புற்பிள்ளை பாதமென் சென்னியதே.''—(பிள்ளையந்தாதி. 1); சென்னி - முடி, தலை; செவ்வி - அழகு, நேர்மை.

(68) செங்கண்மால் - சிவந்தகண்களையுடைய திருமால், "குன்றெடுத்தாயர் மாதர்குரவை கொண்டொரு விளாவிற், கன்றெடுத்தெறிந்து வெய்ய காளியற் கிருதாணல்கி, யன்றெடுத்திறுத்த வில்லேயனைய வில்விழவு காண்பான், சென்றெடுத்திறுத்து நின்ற செங்கண்மாலெங்கள் கோவே.''—(மகாபாரதம். உத்தியோக பருவம் - களப்பலியூட்டு சருக்கம். 1), "எங்கணுன் மறைக்குந் தேவ ரறிவிற்கும் பிறர்க்கு மெட்டாச், செங்கண்மால்.''—(இராமாவதாரம், பாலகாண்டம், வேள்விப் படலம். 16), "செயிர்தீர் செங்கட் செல்வ." (பரிபாடல். 4-10), "செங்கட் காரி"—(பரிபடல். 3-81); சேவிப்பார் - வணங்குவார்; அந்தமில் வீட்டின்பம் - "அந்தமில் பேரின்பத்து"—(திருவாய்மொழி 10-9-11); சிந்தைதனில் நண்ணுவரேல் - மனத்தால் நினைப்பரேல்; இன்பம் - "இன்பந் தலைப்பெய்து எங்குந்தழைத்த"—(திருவாய்மொழி 9-5-11.)

(69) தெளிவிசும்பு - பரமபதம், "தெளிவிசும்பு கடிதோடித் தீவளைத்து மின்னிலகும், ஒளிமுகில்காள்! திருமூழிக்களத்துறை

யும் ஒண்சுடர்க்கு, தெளிவிசும்பு திருநாடாத்தீவினையேன் மனத் துறையும், துளிவார்கட்குழலார்க்கு என்தூதுரைத்தல் செப்புமினே.''—(திருவாய்மொழி 9-7-5. ''தெளிவிசும்பித்யாதி - பரமபதத்திற் பண்ணும் வ்யாமோஹத்தை என்னெஞ்சிலே பண்ணிவர்த்தியா நின்றான்'' - ஈடு), '' தகவிலைதகவிலையே நீ கண்ணா! தடமுலை புணர்தொறும் புணர்ச்சிக்காரா? சுகவெள்ளம் விசும்பிறந்து அறிவை மூழ்க்கச் சூழ்ந்து அதுகனவென நீங்கியாங்கே.''—(திருவாய்மொழி 10-3-2. ''விசும்பு இத்யாதி - ஸர்வபதார்த்தங்களையும் தன்னுள்ளே வைத்துக்கொண்டிருக்குமதிறே ஆகாசமாகிறது. அது தன்னைக்குளப்படியாக்கி, மயர்வறமதிநலம் அருளப்பெற்ற அறிவையும் விளாக்கொலை கொள்ளாநின்றதாய்த்து. அன்றிக்கே, விசும்பென்று - பரமபதமாய், - ''தாமரைக் கண்ணனுலகு'' என்னக் கடவதிறே. ஸுகாதிசயத்துக்கு—''விசும்பிறந்து'' என்றதுக்கர்த்தாந்தரம் - அன்றிக்கே இத்யாதி. மோக்ஷஸுகத்தைப் பற்றவும் ஸம்ச்லேஷஸுகம் விஞ்சி யிருக்குமோ வென்ன - தாமரை இத்யாதி. அதாவது - அத்யந்த விஷயாஸக்தனையிருப்பா னொருவனை மீட்கைக்காக ''காம புருஷார்த்தம் அல்பாஸ்திரத்வாதி தோஷதுஷ்டம், மோக்ஷஸுகமேகாண் அநஸ்த்திரபலம்'' என்ன, விஷயாஸக்தன் சொல்லுகிறான் - ''தாம் வீழ்வார் மென்றோட்டுயிலினினிதுகொல், தாமரைக்கண்ணனுலகு'' என்று: தாமரைக்கண்ணனுலகுண்டு - மோக்ஷஸுகம்; அது, தாங்களே விழுந்து ஆசைப்படும் ஸ்த்ரீகளுடைய ம்ருதுவான தோளிலே யுறங்குகிறதிற் காட்டில் இனிதுகொல்? அன்றே யென்றபடி. ''தாமரைக் கண்ணனுலகு—இனிதுகொல்?'' என்றந்வயம்.'' - சீயர் அரும்பதவுரை. ''தாம் வீழ்வார்'' என்பது திருக்குறள் காமத்துப்பால் புணர்ச்சி மகிழ்தல் என்ற அதிகாரத்துள்ள மூன்றாவது குறட்பா. அதற்குப் பரிமேலழகர் உரை வருமாறு:—''நிரதிசயவின்பத்திற்குரிய நீ இச்சிற்றின்பத்திற்கின்னையாதல் தகாதென்ற பாங்கற்குச் சொல்லியது. ஐம்புலன்களையு நுகர்வார்க்குத் தாம் விரும்புமகளிர் மெல்லிய தோளின்கட்டுயிலுந் துயில்போல வருந்தாமலெய்தலாமோ அவற்றைத் துறந்த தவயோகிகள் எய்துஞ் செங்கண் மாலுலகம். ஐம்புலன்களையு நுகர்வார் என்னும் பெயர் அவாய் நிலையான் வந்தது. இப்பெற்றித்தாய துயிலைவிட்டுத் தவயோகங்

களான் வருந்தவேண்டுதலின், எம்மனோர்க்காகாதென்னுங் கருத்தால் இனிது கொலென்றான். இந்திரனுலகென்றுரைப்பாருமுளர். தாமரைக்கண்ணனென்பது அவனுக்குப் பெயரன்மையின், அஃதுரையன்மையறிக." - ஆக.—திரிபாத் விபூதியையும் விஞ்சி, உபயவிபூதியையும் தன்னுள்ளே யாம்படியிருக்கிற அறிவையும் மேலிடும்படியாய்த் திருக்கிறது." - ஈடு.); கவிவாதிசிங்கரல்லாற் காப்பார் மற்றில்லை - "கண்ணனல்லால் இல்லை கண்டீர், அவனன்றி மற்றில்லை."—(திருவாய்மொழி 9-1-10), "ஆதுமில்லை மற்றவனில் என்றதுவே துணிந்து."—(திருவாய்மொழி 9-1-11); அவம் - வீண், அவத்தம்.

(70) சுருதி - வேதம். "புரியுறு நரம்பு மியலும் புணர்ந்து, சுருதியும் பூவுஞ் சுடருங் கூடி எரியுரு ககிலோ டாரமுங் கமழும், செருவேற் றானைச் செல்வநின்னடியுறை, உரிதினி னுறைபதிச் சேர்ந்தாங்குப், பிரியா திருக்கவெஞ் சுற்றமோ டுடனே." (பரிபாடல். 18-51-56. "செருவேற்றானைச்செல்வ! நின் பூசைக்கட் புரிதலுற்ற நரம்பினது ஒலியும் புலவர் பாடிய இயற்பாட்டுக்களும் பொருந்தி வேதவொலியும் உபசாரமாகிய பூவும் தீபமுங் கூடி எரியின்கண் உருகுமகிலும் சந்தனமும் தூபமாய்க் கமழா நிற்கும் நின் அடியின்கண் உறைதலை எமக்கு உரித்தாக உறையும் பதியைச் சேர்ந்தாற்போல எம் சுற்றத்தோடு கூடியாம் பிரியா திருப்பேமாக.") "சுருதிநினை விவையறியுந் துணிவுடையார் தூமொழிகள், பரிதிமதி யாசிரியர்."—(தேசிகமாலை. அடைக்கலப்பத்து. 9), "சொல்லுமவிடு சுருதியாம்—(ஞானஸாரம்), "ப்ரத்யக்ஷாதிப்ரமாணங்களிற் காட்டிலும் "வேதாச்சாஸ்த்ரம் பரம்நாஸ்தி" இத்யாதிகளிற்படியே மற்றுள்ள சாஸ்த்ரங்களிற் காட்டிலும் பாரலௌகிக புருஷார்த்தததுபாயங்களை யதாவஸ்த்திதமாகக் காட்டுகிற வேதம் ப்ரதாநம். அதில் பராவரதத்வஹித புருஷார்த்தங்களில் அந்யதாஸித்த ப்ரமாணாந்தரங்களால் வரும் கலக்கங்களை யெல்லாம் தீர்க்கவல்ல வேதாந்தம் ப்ரதாநம்."—(ப்ரதாநசதகம்); நல்லார்-அறிஞர், உத்தமர். "நல்லாரைக்காண் பதுவுநன்றே"—(வாக்குண்டாம் 8); கோட்டி - சபை. "கோட்டியுட் கொம்பர் குவிமுலை நோக்குவோன், ஒட்டை மனவனுரமிலி யென்மரும்."—(பரிபாடல் 12-50-51. அவைக்கண்ணே நின்று கொம்பரொப்பாளுடைய குவிமுலையை நோக்குகின்றவன்

இளநெஞ்சன், திண்மையிலனென்பாரும்.) ; கூட்டு - "கூட்டரிய திருவடிக்கள் கூட்டினை நான் கண்டேனே"—(திருவாய்மொழி 4-9-9); கோது - குற்றம்; நிலவு - நிலா, ஒளி, சந்திரப் பிரபை.

(71) காரீர் - காப்பாற்றுங்கள்; ஆருயிர் - அருமையாகிய உயிர்; பாரீர் - பாருங்கள்; பாங்கு - பிரீதி, உரிமை; பரிவு - அன்பு, "பாகனைய சொல்லியொடு தம்பி பரிவிற் பின்போக"—(இராமாவதாரம், அகத்தியப் படலம். 56.); பாவித்து - தியானித்து.

(72) பெறல் - பெறுதல்; மாற்றார் - மாற்றலர், பகைவர்; விரும்புவார் - ஆசையுடையோர்; ஆராஅமுதை - தெவிட்டாத, பரமபோக்யமான அமிருதத்தை. "ஆராவமுதே"—(திருவாய்மொழி. 5-8-1. "ஆராவமுதே—அநுபவியா நின்றாலும் க்ரமப்ராப்தி பற்றாத விஷயத்தைப் பிரிந்தார் எங்ஙனே ஆறியிருக்கும்படி. முற்பட தர்சநமாய், அநந்தரத்திலே அணுகி, பின்னை ஸ்பர்சமாய், இப்படியேயிறே அநுபவப்ரகாரங்கள்; அத்தனை க்ரமம் பார்த்திருக்க வொண்ணாதபடியா யிருக்கை. ஆராவமுதே - கடலில் உப்புச்சாறு குடிப்பார்க்கு தேவயோநியிலே பிறக்கவேணும், ப்ரஹ்மசர்ய மனுஷ்டிக்க வேண்டிய இத்தனை பட்டால் ஸக்ருத் ஸேவ்யமாயிருக்கும்; இது அங்ஙனன்றிக்கே ஸர்வாதிகாரமுமாய், ஸதாஸேவ்யமுமாய், ப்ரஹ்மசர்யாதி வைகல்யமுண்டானவையும் தானே பரிக்ஹரிக்கக் கடவதாயிருக்கும். உத்தர பூமியிலே லோகஸாரங்க மஹாமுநிகள் வர்த்தியாநிற்க, இங்குத்தையானொருவன் அங்கேறச் செல்ல, "பிள்ளாய், தக்ஷிணபூமியில் விசேஷமென்?" என்று கேட்க, திருவாய்மொழி என்றொரு ப்ரபந்தமவதரித்து, சிஷ்டர்கள் பரிக்ரஹித்துப் போரக் கொண்டாடிக் கொடுபோகா நின்றார்கள்" என்ன, "அதிலே உனக்குப் போவதொரு சந்தை சொல்லிக் காணாய்" என்ன, "'ஆராவமுதே' என்கிற வித்தனையும் எனக்குப்போம்" என்ன, "நாராயணாதி நாமங்கள் கிடக்க, இங்ஙனேயுமொரு நிர்த்தேச முண்டாவதே" என்று அத்ருப்தராய், "இச்சொல்லு நடையாடுகிற தேசத்தேறப் போவோம்" என்று அப்போதே புறப்பட்டுப் போந்தார். ஆராவமுதே—"ஸஹபத்ந்யா"—ஆழங்காலிலே யிழிபவர் ஒரு கொம்பைக் கொடியைப் பிடித்து இழியுமாபோலே. "பத்ந்யா—ஸஹ"—கிண்ணகத்திலிழிவார்

தேசிகரைக் கைப்பிடித்துக் கொண்டிழியுமாபோலே, பெருமாள் பெரிய பெருமாளை யநுபவிக்கும்போது, பிராட்டியைக் கூடக் கொண்டாயிற்றிழிவது. "விசாலாக்ஷ்யா"—இவர்க்குப் பெரிய பெருமாள் பக்கலுண்டான ப்ரேமாதிசயத்தைக் கண்டு, தன்னை யணைக்கும் போதையிற்காட்டிலும் உடம்பெல்லாம் கண்ணானபடி. "நாராயணமுபாகமத்"—இவர் நியதியிருக்கிறபடி, இக்கண்ணுக் கிலக்காய் ஆழங்காற் படாதே அவ்வருகு பட்டார். இத்தால் சொல்லிற்றாயிற்று. தான் தன்னை யநுபவிக்கும் போதும் கூட்டுத் தேடவேண்டும்படி யாயிற்று ஆராமை யிருக்கும்படி யென்கிறது. ஆராவமுதே - இத் திருவாய்மொழியில் இவர்க்குண்டான ஆற்றாமைக் கெல்லாம் பீஜம் இப்பதமாயிற்று,"—ஈடு.); போற்றி - துதிக்கும், வணங்கும், "எதிர்கால வினைமுற்றாய் நீ காத்தல் செய்யென்னும் பொருளிலும், தொழிற் பெயர் முற்றாய் நின்று செயப்பாட்டு வினையாய்ப் போற்றப்படுவது என்னும் பொருளிலும் வியங்கோட் பொருளிலும் வருமொரு மொழி. விரும்பி என்னும் வினையெச்சப் பொருளிலும் வரும்."; சீரான் - நற்குணநிதி; செப்புதல் - அநுஸந்தித்தல்; சேமம் - க்ஷேமம், ரக்ஷகம், இன்பம்.

(73) கலை - சாஸ்திரம்; சமைத்த - இயற்றியருளிய; பாரம் - சுமை.

(74) உதித்து - தோன்றி, அவதரித்து; தீர்த்த - நீக்கிய; சுரும்பு - வண்டு; நிமலனார் - பரிசுத்தர், அழுக்கற்றவர்; தாளே - திருவடிகளே; சார்வு - துணை, "கெட்டார்க்குச் சார்வாய்"—(திருக்குறள். வான்சிறப்பு. 5.), பிராப்யம், உபாயம்.

(75) சாதுசனம் - சாதுக்கள்; பரம வைணவர்கள்; தோதாரம்மை - தோத்தாரம்மன், கிடாம்பி இராமாநுசப் பிள்ளான்குமரி, அப்புள்ளார் சகோதரி, தூப்புல்வேதாந்த தேசிகனின் திருத்தாயார்; மானிடர் - மனிதர்; சாதிகள் - "குலந் தாங்கு சாதிகள் நாலிலும்"—(திருவாய்மொழி. 3-7-9. "குலம் இத்யாதி - க்ரமவிவாஹத்தாலும் அநுலோம ப்ரதிலோம விவாஹத்தாலுமுள்ள குலங்களை தரிப்பதான ப்ராஹ்மணாதியான நாலு ஜன்மத்திலும்," - ஈடு. "க்ரமவிவாஹமாவது - ப்ரஹ்மக்ஷத்ர வைசியசூத்ரர்கள் ஸ்வஸ்வ ஜாதியிலே பண்ணும் விவாஹம்.

அநுலோம விவாஹமாவது - ப்ராஹ்மணன் உத்தரவர்ணத்ரயத்திலும், க்ஷத்ரியன் உத்தர வர்ணத்வயத்திலும், வைச்யன் சூத்ர வர்ணத்திலும் பண்ணும் விவாஹம். ப்ரதிலோம விவாஹமாவது - சூத்ரன் பூர்வவர்ணத்ரயத்திலும், வைச்யன் பூர்வவர்ணத்வயத்திலும், க்ஷத்ரியன் பூர்வவர்ணத்திலும் பண்ணும் விவாஹம். இது ருஷ்யச்ருங்கன் பக்கலிலும் யயாதி பக்கலிலும் காணலாம். தாங்கு—தரித்திருக்கிற; சாதிகள் - ப்ராஹ்மணாதிவர்ணங்கள். —(சீயர் அரும்பதவுரை.)

(76) தேடார் - விசாரியார், நாடார்; சிரீதரன் - ஸ்ரீதரன். "சீரார் சிரீதரனுய்ச்சிவன் றிக்கு மிடப்புயமு, மேரா ரிடங்கொண் டிலங்குவெண் டாமரை மேனியனுய்ப், பாராய பட்டய மீரிரண்டாலும் பயமறுக்கு, மாரா வமுதத்தி மாமலை மேனின்ற வச்சுதனே."—(தேசிகமாலை. பன்னிருநாமம். 9); நாடார் - தேடார்; பாருலகு - பூலோகம்; பாங்கு - யோக்கியம்.

(77) வையகம் - பூமி, "வையகமெல்லாங்கழனியாய்" —(விசாக. யாப்.35); வேருடனே - அடியோடே; "நீர்நும தென்றிவை, வேர்முதல்மாய்த்து"—(திருவாய்மொழி. 1-2-3); போக்குவர் - அழிப்பர்; சிந்திப்பரேல் - எண்ணினால், "மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம் மாநிலத்தெவ்வுயிர்க்கும் சிற்ற வேண்டா சிந்திப்பேயமையும்"—(திருவாய்மொழி. 9-1-7. "மற்றொன்றில்லை - இத்தோடொக்க வேறு எண்ணலாவதில்லை யென்னுதல், இப்போது இத்தைச்சொல்லி வேறொருபோது வேறொன்றைச் சொல்லுகின்றோ மென்றிருக்கவேண்டா வென்னுதல். சுருங்கச் சொன்னோம் - இது தன்னைப் பரப்பறச் சொன்னோம். ப்ரதிபத்திக்கு அவிஷயமாம்படி சொல்லுகையன்றிக்கே, ஸங்க்ரஹமாகச் சொன்னோம். மாநிலத்து - இதுக்கு அதிகாரிகள் ஸம்ஸாரத்திலே. இவ்வர்த்தத்துக்கு அண்ணியார் பரமபதத்திலுள்ளாராகிலும், உபதேசத்துக்கதிகாரிகள் ஸம்ஸாரத்திலுள்ளாரென்கை. எவ்வுயிர்க்கும் - இது அதிக்ருதாதிகாரமன்று; ஸர்வாதிகாரம். சிற்றவேண்டா - ஆயாஸிக்க வேண்டா. சிற்றுதல் - சிதறுதலாய், பரக்கவேண்டா வென்கை. ஒருவ்யாபாரம் வேண்டாவென்றபடி. சிந்திப்பேயமையும் - உக்திநிரபேக்ஷமான சிந்தாமாத்திரமே யமையும்." - ஈடு.)

(78) செங்கமலப் பூவுதித்த அந்தமில்சீர் மங்கை

தனக்கன்பன்—தாமரையாள் கேள்வன், "உனக்கேற்கும் கோலமலர்ப் பாவைக் கன்பாகிய என்னன்பேயோ!"—(திருவாய்மொழி. 10-10-6. "உனக்கேற்கும்—இவனோ பாதி வாசாவிமர்த்திக்கைக்கும் பெருத ஸௌகுமார்யத்தையுடையவள். இப்படிப்பட்ட உனக்கு ஸத்ருசமான அழகையுடையளாய், புஷ்பத்தில் பரிமளத்தை வடித்து வகுத்தாற்போலே யிருக்கிற பிராட்டிக்கு ஸ்நிக்தனானவனே! உனக்கேற்கும் கோலமென்று—அவ்வழகை யிங்கே யதிதேசிக்கிருர். ந்யாயாதிதேசம் பண்ணுகிருர். கோல மலர்ப்பாவைக்கு அன்பா! என்னன்பேயோ!—அவள் பக்கலன்பனென்று தோற்றியிரா நின்றது; தம்முடைய பக்கல் அன்பென்றும் அது உடையனென்றும், தெரிக்கப் போகிறதில்லை; ஜ்ஞாதாவை ஜ்ஞாநமென்னு மாபோலே. "தத்குண ஸாரத்வாத்து தத்வ்யபதேச:"—ஈடு. "அதிதேசிக்கிருர் - ஏறிடுகிருர். அதிதேசிப்பது ஸர்வதாஸாம்யமுண்டானவிடத்திலே யன்றோ, காளமேக நிபச்யாமமான நிறம் முதலானவற்றை ஹிரண்ய வர்ணையான இவளிடத்திலே யதிதேசிக்கக் கூடுமோவென்ன—ந்யாயாதிதேசம் இத்யாதி. அதாவது - ஸ்வரூபாதி தேசம் பண்ணுகிறதன்று. அவனைப்போல இவளும் அழகுடையவளென்கிறதென்றபடி. ஸ்வரூபாதிதேசமென்றும், ந்யாயாதிதேசமென்றும் இரண்டு. ஸ்வரூபாதி தேசமாவது—ஸர்வதா ஸாம்யம் கொள்ளுகை; ந்யாயாதி தேசமாவது—அதுபோல இதுவும் ச்லாக்யமாயிருக்கு மென்கை."—சீயர் அரும்பதவுரை.); தமர் - அடியார்; கொண்டல் - மேகம்; கோ - ஸ்வாமி.

(79) ஓவாது - ஒழியாது; ஓங்கி - உயர்ந்து, எழுந்து; செம்மை - ருஜுத்தன்மை.

(80) மூவுலகுக்கீசன் - "நிகரில்புகழாய்! உலகம் மூன்றுடையாய்! என்னையாள்வானே."—(திருவாய்மொழி. 6-10-10); வேங்கடக்கோனேரார் திருமணி—"திருமலை மால்திருமணியாய்ச் சிறக்கவந்தோன்."

(81) கருக்குழியில்வீழாமே - "கருவிருத்தக்குழிநீத்த பின் காமக்கடுங்குழிவீழ்ந்து, ஒரு விருத்தம் புக்குழலுறுவீர்! உயிரின்பொருள்கட்கு, ஒரு விருத்தம் புகுதாமல் குருகையர் கோனுரைத்த, திருவிருத்தத்து ஓரடிகற்றீர் திருநாட்டகத்தே."—(திருவிருத்தம். தனியன்.)

(82) தூப்புனகர்......காப்பு - தூப்புல்வேதாந்ததேசிகன் திருவடிகளே சரணம்; துலங்கு - பிரகாசிக்கின்ற; பெருகும் - விருத்தியாகும்; துன்பம் - வருத்தம். "துன்பத்திற்கிடங் கொடேல்"—(ஆத்திசூடி); தொலையுமே - நீங்குமே, "துதித்திடுவோர்தங்கள் பாவந்தொலையுந்தானே."

(83) தொலையாத - ஒழியாத, நீங்காத; பவவாழி - ஸம் ஸாரஸாகரம், பிறவிப்பெருங்கடல்; சிலை - வில், கல்; சிதைக்க - அழிக்க; துலை - ஒப்பு, உபமானம். "அலையற்ற வாரமு தக்கட லக்கட லுண்டமுகில், விலையற்ற நன்மணி வெற்பு வெயினில வோங்குபக, லுலையு ற்றனவென்பர் தூமறை சூடுந் துழாய்முடியாற், கிலையொத் தனவவன் பாதம் பணிந்தவர்க் கெண்ணுதற்கே."—(தேசிகமாலை. அமிருதரஞ்சனி. 6.)

(84) கலைகள் - கிரந்தங்கள்; உன்னி - நினைத்து; வல்ல வர் - ஸமர்த்தர். "வல்லான் வகுத்ததே வாய்க்கால்"; துன்னும் - சேரும்; சுருதிமுடியுட்பொருள் - "மிக்கவேதியர் வேதத்தி னுட்பொருள்."—(கண்ணிநுண்சிறுத்தாம்பு. 9); சோராது - மறப்பின்றி; அருமை - இன்மை. "மனக்கவலை மாற்றல் அரிது."—(திருக்குறள். கடவுள் வாழ்த்து. 7. "ஈண்டு அருமை இன்மை மேனின்றது" - பரிமேலழகருரை.)

(85) ஆழ்வார் - மாலுகந்தவாசிரியர், எம்பெருமானுடைய் திவ்யமங்கள குணகணங்களாகிய அமுதவெள்ளத்திலே ஈடுபட்டு நன்றாக ஆழ்ந்திடுபவராகிய பரமபாகவதர், திருமாலின் அபி நவதசாவதாரம் எனக்கொண்டாடப் பெறுபவர். "ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல்வாழி"—(உபதேசரத்தினமாலை. 3); நெறி - மார்க்கம்; வீறு - உயர்ச்சி, சிறப்பு, பெருமை, பொலிவு, வெற்றி, வேறொன்றற்கில்லா வழகு.

(86) பணம் - பாம்பின்படம்; வாள் - ஒளி; பள்ளி - படுக்கை; புணர்வோன் - சேர்வோன்; போற்றியெழார் - "துயரறுசுடரடிதொழுதெழு"—(திருவாய்மொழி 1-1-1); புல்லியர் - கீழ்மக்கள்; மாற்றம் - சொல். "மாற்றங்களாய்ந்து கொண்டு"—(திருவாய்மொழி 6-8-11. "சுரமேறுவாரைப் போலே, பக்திபரவ சராயிருப்பார்க்கு அடைவுபடப்பாசுரமிட்டுச் சொல்லப்போகாதிறே; இவ்வளவிலும் சொற்கள் நேர்பட்டபடி; நல்ல சொற்களைத் தெரிந்துகொண்டு"—ஈடு.)

(87) மாய்ந்து மாய்ந்து - "வாழ்ந்தார்கள் வாழ்ந்தது மாமழை மொக்குகளின் மாய்ந்து மாய்ந்து, ஆழ்ந்தா ரென்றல்லால் அன்றுமுதலின்றறுதியா, வாழ்ந்தார்கள் வாழ்ந்தே நிற்பர் என்பதில்லை நிற்குறில், ஆழ்ந்தார்கடற்பள்ளி அண்ணலடியவராமினோ"—(திருவாய்மொழி 4-1-6); வம்மின் - வாருங்கள்; மெய்யுரை - பொய்யில்பாடல்; நண்ணினால் - அநுஸந்தித்தால்; பாதகம் - துரோகம்.

(88) பறக்கும் - விரைந்தோடும்; வற்றும் - வடியும்; இறக்கும் - போம்; வார்த்தை - வசனம்.

(89) தொண்டு - அடிமை; அல் - இராத்திரி, "அல்லும் பகலுமனவரதமும் நினைத்தாற், கல்லுஞ் சொல்லாதோ கவி."

(90) மறையோராரணம் - "அந்தணரருமறை"—(பரிபாடல் 1-13, 210-57, 3-14, 4-65.); சேமித்து - சேர்த்து; புறம் - அயல், வெளி, வேறு, பிறமதம்; எண்பெரியசீர் - "எண்பெருக்கந்நலம்"—(திருவாய்மொழி 1-2-10.)

(91) ஆர்வம் - அன்பு; செந்தமிழ்நூல் - தேசிகமாலை.

(92) வந்தித்து - வணங்கி, வழிபாடுசெய்து; களித்தோம் - இன்பமடைந்தோம்.

(93) குன்ற - குறையாத; நல்குவது - ஈவது, உண்டு பண்ணுவது.

(94) பிறவித்துயர் - "பிறவித்துயரற ஞானத்துள் நின்று, துறவிச்சுடர் விளக்கம் தலைப்பெய்வார், அறவனை ஆழிப்படை அந்தணனை, மறவியை யன்றி மனத்து வைப்பாரே."—(திருவாய்மொழி 1-7-1); குறையொன்றுமில்லா - "குறைவொன்றுமில்லாத கோவிந்தா"...(திருப்பாவை, 28); தோத்திரித்து - துதித்து.

(95) தொல் - அநாதி; இலக்கு - லக்ஷ்யம்; ஈனம் - தாழ்வு; பரிசு - வெகுமதி, விதம்.

(96) பாக்கியம் - செல்வம், புண்ணியம், "பாக்கியம் புரிந்திலாப்பரதன்"—(இராமாவதாரம், அயோத்தியா காண்டம், மந்தரைசூழ்ச்சிப் படலம். 59), "பாக்கியம்மெனக் குளதென நினைவுறும் பான்மை"—(இராமாவதாரம், பாலகாண்டம், வேள்விப்படலம் 57. பொருளல்லாத

என்னை நீ ஒரு பொருளாக மதித்துவந்து உன்னால் வேள்வி காக்கப்படுதற்கு ஏதுவானதொரு நல்வினைதனக்கு யிருந்த தென்று யான் எண்ணுகின்ற அத்தன்மை); ஏரார்வரதகுரு - "சீரா கியவர தாரியன் பாதந் துணைநமக்கே."—(பிள்ளையந்தாதி, தனியன்,) "நயினாராசாரியர் - தேசிகர்குமரர், இவர்க்கு வரதாசார்யர் என்றும் பெயர். இவரும் தந்தையைப் போல் பலரிடத்தில் வாதஞ்செய்து திவ்யதேச யாத்திரை செய்து வருகையில் கேரளதேசம் சென்று மடைப்பள்ளி பரிசனங்களுக்குத் தலைச்சுமையாய் க்ஷுத்ரர் ஏவியகல்லை அவர்களுக்கே திருப்பி அவர்கள் வேண்ட அதைப்போக்கிச் சாகல்லியமல்லன் விட்ட பூதத்தைப் பல்லக்குச் சுமப்பித்துத் தாஸராசாவென்கிற பிராமணனை ஸ்ரீ வைஷ்ணவனாக்கித் தம்மிடம் வாதத்திற்கு வந்த மாயசந்நியாசியை அண்ணனைக்கொண்டு வெல்வித்துத் தம்மை யாச்ரயித்த முதலிகளுக்குப் பாஷ்ய காலக்ஷேபாதிகளைச் செய்து 69 வருஷமிருந்து திருநாட்டிற்கெழுந்தருளினர்"—(அபிதான சிந்தாமணி); விதம் - வகை. "வரதகுரு நன்றான தொல்லருளோ" என்பதால் இவ்வந்தாதி வாசிரியர் நயினாராசாரியாரிடம் ஆச்ரயித்தவர் என்று கொள்ள இடந்தருகின்றது.

(97) இராமாநுசர் - எம்பெருமானார்; தம்முடைய தன்மையளிக்கும் - "தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெரும் பதம்."

(98) என்றுமெனக்கு......கதியும் - "சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும், மேலாத் தாய்தந்தையுமவரே யினியாவாரே"—(திருவாய்மொழி 5-1-8); தேவு - "தேவும் எப்பொருளும் படைக்க, பூவில் நான்முகனைப் படைத்த, தேவன் எம்பெருமானுக்கல்லால், பூவும் பூசனையும் தகுமே?" (திருவாய்மொழி 2-2-4 தேவும் எப்பொருளும் படைக்க - தேவஜாதியையும் ஸகலபதார்த்தங்களையும் உண்டாக்குகைக்காக, ஒரு பூவிலே நாலுபூப் பூத்தாற்போலே சதுர்முகனை யுண்டாக்கினவன்......இத்தால் ஜ்ஞானத்திற் காட்டில் வைராக்யத்துக்கு உண்டான ப்ராதான்யம் சொல்லுகிறது. ஈடு), தெய்வம், தேவாந்தன்மை.

(99) தேவர் - சுரர்; முனிவர் - மநநசீலர்; யோகி - யோகமுடையவர்; மேவி - பொருந்தி; அடி - பாதம்; பரவு -

துதிக்கும்; மெய்த்தவன் - உண்மையான தவமுடையவன்; காவி - நீலோற்பலம்; கலங்கா - கலங்காத.

(100) நுனியார் - கூர்மைமிக்க, "பொழிலேழுமேன மொன்றாய், நுனியார்கோட்டில் வைத்தாய்!"—(திருவாய்மொழி 2-3-5.) "'பொழில் இத்யாதி - தனிமையிலே வந்து உதவும் படியைச் சொல்லுகிறது அத்விதீய மஹாவராஹ வேஷத்தைப் பரிக்ரஹித்து, ப்ரளயங்கொண்ட புவநங்களேழையுமெடுத்து." நுனியார்கோட்டில்வைத்தாய் - நுனியென்று - கூர்மை. ஆர்கை - மிகுதி. கூர்மை மிக்க கோட்டிலே வைத்தாயென்றபடி. இத்தால், ரக்ஷ்யவர்க்கத்தினளவல்லாத ரக்ஷகனுடைய பாரிப்பைச் சொல்லு கிறது." - ஈடு); திகிரி - சக்கரம்; நூக்க - தள்ள; கோது குலம் - கௌதூகலம், மிக்க சந்தோஷம், "கோதுகுலமுடைய பாவாய்"—(திருப்பாவை. 8).

O-,194
N54

TAMIL NADU ARCHIVES LIBRARY
No. 113306.
MADRAS

ஸ்ரீ:

திருவல்லிக்கேணித் தமிழ்ச்சங்கப் பிரசுரம்.

இலக்கம்.	வெளியீட்டின் பெயர்.	இலக்கம்.	வெளியீட்டின் பெயர்.
1.	ஸ்ரீஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் வைபவம்.	30.	திருவேங்கடவர் மாலை.
2.	தேசிகர் நூற்றந்தாதி.	31.	மார்கழி மாலை.
3.	மறைமுடித் தேசிகனார்.	32.	மதுரகவி மாலை.
4.	மணவாள மாமுனிகள்.	33.	திருவருட்சதக மாலை.
5.	அழகர் மாலை.	34.	சீரொன்று தூப்புற்றனியன் மாலை.
6.	வேதாந்த தேசிகரூசல்.	35.	மும்மறைத் தெளிவுப் பொருண் மூதுரை மாலை.
7.	தோத்திர மாலை.	36.	அருளாளர் மாலை.
8.	தொண்டர் மாலை.	37.	பூங்கோதை மாலை.
9.	கம்பர் மாலை.	38.	பூமகள் மாலை.
10.	பரிமுக மாலை.	39.	இடைப்பிள்ளை மாலை.
11.	ஸ்ரீ ஆண்டாள் மாலை.	40.	செந்தாமரையாள் மாலை.
12.	ஸ்ரீ பார்த்தசாரதி மாலை.	41.	பெரியபிராட்டியார் மாலை.
13.	திருவருண் மாலை.	42.	தேசிகரந்தாதி மாலை.
14.	தூப்புல் வள்ளல் பழமொழிச் சிறப்பு.	43.	இராமாவதார மாலை.
15.	அடைவு அமைக்கும் அற்புதன்.	44.	திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவ மாலை.
16.	தமிழர் தொழு வேதாந்த வாசிரியன்.	45.	ஆனைபரிதேரின் மேலழகர் மாலை.
17.	புகழ் மாலை.	46.	வாழித்திருநாமப் பாமாலை.
18.	கம்பர்தருங் கண்ணன்.	47.	அத்திகிரிவரதன் அந்தாதி மாலை.
19.	முக்கோற் பகவர்.	48.	ஸ்ரீ வேங்கடக்ருஷ்ணன் மாமணி மாலை.
20.	ஸ்ரீ வீரராகவ மாலை.	49.	ஸ்ரீ பெரும்பூதூர் வந்த வள்ளல் [மாலை.
21.	திருமாமகள் மாலை.	50.	தசாவதார மாலை.
22.	திரு நரசிங்கர் மாலை.	51.	ஸ்ரீ விஜயராகவ மாலை.
23.	அழகியசிங்கர் மாலை.	52.	சூடிக்கொடுத்த சுடர்க்கொடி மாலை.
24.	பொய்கையார் மாலை.	53.	ஸ்ரீ வரதராஜ மாலை.
25.	ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலா மாலை.	54.	கோதைநாயகித் தாயார் மாலை.
26.	வாரணமாயிர மாலை.	55.	சரணுகதி மாலை.
27.	ஸ்ரீ பார்த்தசாரதியம்மான் பாமாலை.	56.	திருவடி மாலை.
28.	தமிழரேத்தும் ஸ்ரீ மணவாள மா முனிகள்.	57.	திருமலை மாலை.
29.	திருச்சின்ன மாலை.	58.	வேதமுடித் தேசிக மாலை.

பெறும் இடம் :
ஆநந்த பிருந்தாவநம்,
ஸ்ரீ மௌனசுவாமிகள் மடத்துத் தெரு, அம்பத்தூர்.

5A
5·50